பொழிவு - 17
குவிப்பு - 11
பக்கங்கள் - 16
விலை ரூபா 40.00
நவம்பர் 2014
(ISSN 1800-2641)
Registered as a News Paper

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Social Communication Center, Manna Paper Office, St.Joseph's Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 023-3233276 / 0777420811 Fax No - 0232250789, E. Mail : nesanmnr@gmail.com.
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 161/ News / 2014"

# திருத்தந்தையின் விஜயம் சாத்தியமா? அல்லது இரத்துச் செய்யப்படுமா?

## ஜனாதிபதிக்கு கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை கடிதம்

திருத்தந்தையின் இலங்கைக்கான விஜயம் ஏற்கனவே திட்டமிட்டபடி அடுத்த வருடம் ஜனவரி மாதத்தில் முன்னெடுக்கப்படுமா அல்லது இரத்துச் செய்யப்படுமா? என்று அறிவிக்குமாறு கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார்.

இது தொடர்பில் மல்கம் றஞ்சித் ஆண்டகை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார். இது குறித்து ஊடகம் ஒன்று கருதினால் மல்கம் றஞ்சித்திடம் வினவியபோது "அது இரகசியமான கடிதம். எனவே அது தொடர்பில் விடயங்களை வெளியிட முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார். "மேலும் நான் ஜனாதிபதியிடம் இருந்து பதிலுக்காகக் காத்திருக்கின்றேன்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் 2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இடம்பெறுமானால் திருத்தந்தையின் விஜயம் இடம்பெறாது என்று கருதப்படுகின்றது. காரணம் தேர்தல் காலத்திலும் தேர்தல் முடிவடைந்து ஒரு மாத காலத்துக்குள்ளும் திருத்தந்தை எந்தவொரு நாட்டுக்கும் விஜயம் செய்யமாட்டார் என்பது சம்பிரதாயமாகும்.

ஆனால் தற்போதைய நிலைமையில் ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்களும் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் எதிர்க்கட்சிகளும் ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகுவதற்கான ஏற்பாடுகளை துரிதப்படுத்தியுள்ளன. எதிர்வரும் 2015ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி அல்லது 9ஆம் திகதியளவில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



தற்போதைய நிலைமையில் திருத்தந்தை அடுத்த வருடம் ஜனவரி மாதம் 13ஆம் திகதி முதல் 15ஆம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு ஏற்பாடாகியுள்ளது. இதனடிப்படையில் கத்தோலிக்க திருச்சபையானது திருத்தந்தையின் வருகைக்கான ஆயத்தங்களைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

### யோசவ்வாஸ் அடிகளின் புனித பட்டத்திற்காக
## நூறு நாள் ஆன்மீக ஆயத்தங்கள்

முத்திப்பேறுபெற்ற யோசவ்வாஸ் அடிகளார் வருகிற ஜனவரி மாதம் 14ம் திகதி திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் இலங்கை விஜயத்தின்போது புனிதராக உயர்த்தப்படவுள்ள நிலையில், இந்த உன்னத நிகழ்வுக்காக இறைவனுக்கு நன்றிகூறவும், ஆன்மீக வழியில் இந்நிகழ்வுக்கு இறைமக்களாகிய நாம் எம்மை ஆயத்தம் செய்யவும் உதவியாக நூறு நாட்கள் கொண்ட ஆன்மீக ஆயத்தக் காலம் கடந்த ஐப்பசி மாதம் 5ம் திகதி ஞாயிறன்று தேவத்தை இலங்கை மாதா பேராலயத்தில் இடம்பெற்ற திருப்பலியோடு ஆரம்பமானது.



இந்த நூறு நாள் ஆயத்த நாட்களுக்கான ஆரம்பத் திருப்பலியை கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை நிறைவேற்றினார்.

## இலங்கை ஜனாதிபதி திருத்தந்தையைச் சந்தித்தார்

### இலங்கைக்கு வருகைதருமாறு உத்தியோகபூர்வமாக அழைத்தார்!



கடந்த ஐப்பசி மாதம் 4ஆம் திகதி வத்திக்கானுக்கு விஜயம் மேற்கொண்ட ஜனாதிபதி மஹிந்த **ராஜபக்ஷ** இலங்கைக்கு வருகைதருமாறு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்கு நேடியாக, உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்தார். இச்சந்திப்பின்போது ஜனாதிபதியின் பாரியாரும் கலந்துகொண்டார். (தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## நீத்தாரை நினைவுகூரும் கார்த்திகை மாதம்



இறந்த ஆன்மாக்களை நினைவுகூரும் கார்த்திகை மாதத்தினுள் காலடி பதித்துள்ளோம். நம் உறவில் இணைந்த, உயிரில் கலந்த குடும்பத்தவர், உறவினர், நண்பர்கள் இன்னும் யாரும் நினையாத ஆன்மாக்கள் அனைவருக்காகவும் இம்மாதத்தில் சிறப்பாகச் செபிப்போம். இது தொடர்பான சிறப்புக் கட்டுரைகள் 6ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன.

## பொதுநிலையினர் ஞாயிறு கார்த்திகை 23

திருவழிபாட்டு ஆண்டின் இறுதி ஞாயிறாகிய கிறிஸ்து அரசர் பெருவிழா ஞாயிறு, மன்னார் மறைமாவட்டத்தில் பொதுநிலையினர் ஞாயிறாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.


இந்த வகையில் இவ்வருடம் கார்த்திகை மாதம் 23ஆம் திகதி மன்னார் மறைமாவட்டப் பங்குகளில் 'பொதுநிலையினர் ஞாயிறு' கொண்டாடப்படுகின்றது.

பொதுநிலையினர் ஞாயிறு மற்றும் பொதுநிலையினர் பேரவையின் ஆண்டு விழா தொடர்பாக மன்னார் மறைமாவட்ட




பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனர் அருட்பணி. எஸ். கே. தேவராஜா அவர்களின் சிறப்புச்செய்தியை 8ஆம் பக்கத்தில் காணலாம்.

### திருத்தந்தையின் இலங்கை வருகையை முன்னிட்டு
## முத்திரை வெளியிட அரசு தீர்மானம்



திருத்தந்தையின் இலங்கை வருகையை முன்னிட்டு அவரைக் கௌரவிக்கும் வகையில் முத்திரையொன்றை வெளியிட இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பத்து ரூபா முகப்புப் பெறுமதியைக் கொண்ட இந்த முத்திரையில் திருத்தந்தையின் படம் மற்றும் அவருடைய இலங்கை விஜயத் திகதி என்பன இடம்பெறும் எனக் கூறப்பட்டுள்ளது. திருத்தந்தையின் இலங்கை விஜயம் என ஆங்கிலத்தில் இம்முத்திரைக்குப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

## குடும்பம் பற்றி விவாதித்த உலக ஆயர்கள் மாமன்றம்



கடந்த ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி ஞாயிறன்று வத்திக்கான் பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் திருப்பலியை ஒப்புக்கொடுத்து திருத்தந்தை பிரான்சிஸ் உலக ஆயர்கள் மாமன்றத்தை (Synod of Bishops) தொடக்கிவைத்தார். இந்த அமர்வுகள் 19ஆம் திகதி வரை இடம்பெற்றன. இது தொடர்பான விரிவான செய்தியை 9ஆம் பக்கத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## மனப்பொழிவு

### பதிப்பாசிரியர் பகர்வது

## இலங்கைத் திருச்சபையைக் காத்த மாவீரர் யோசவ் வாஸ் அடிகள்

*இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் வரலாறு இரத்தத்தால் எழுதப்பட்ட வரலாறாகும். துன்பங்களையும், துயரங்களையும், அநியாயங்களையும், அடக்கு முறைகளையும் சந்தித்து சாதனை படைத்த வரலாறாகும். இந்த நீண்ட நெடிய வரலாற்றில் "இலங்கைத் திருச்சபையைக் காத்த மாவீரன்" என்று வரலாற்று ஆசிரியர்களால் விதந்துரைக்கப்படுவர் இந்தியாவில் இருந்து வந்து இலங்கையில் மறைபணியாற்றிய யோசவ்வாஸ் அடிகளாவார். இம்மாபெரும் இறைபணியாளர் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவுள்ள இவ்வேளை அவருடைய வீர வரலாற்றை திரும்பிப்பார்ப்பது பொருத்தமானதே.*

**கத்தோலிக்கருக்கு எதிரான கலாபனைகள்**

*போர்த்துக்கேயர் ஆட்சியின்போது (1505 - 1658) கத்தோலிக்கம் இந்நாட்டில் வேருன்றி வளர்ச்சிபெற்றது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் (1658 - 1796) அது சொல்லொண்ணா அடக்குமுறைகளுக்கும், கலா - பனைகளுக்கும் முகம்கொடுத்தது. கத்தோலிக்க குருக்களும், கத்தோலிக்கரும் தமது பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கலாம் என ஒல்லாந்தர் அஞ்சினர். இதனால் எல்லாக் கத்தோலிக்க அடையாளங்களையும், செயற்பாடுகளையும் இலங்கையிலிருந்து முற்றாக அகற்றிவிட சட்டரீதியிலான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். இலங்கையில் கத்தோலிக்கம் நிலைபெற எவராவது எவ்வகையிலேனும் முயற்சிகளை மேற்கொண்டால் அவர்களுக்கு எதிராகக் கடும் தண்டனை விதிக்கப்படும் என்று பிரகடனப்படுத்தப்பட்டது. கத்தோலிக்க குருக்கள் வெளியேற்றப்பட்டனர். கத்தோலிக்க பாடசாலைகள் ஒல்லாந்தப் பாடசாலைகளாக்கப்பட்டன. கத்தோலிக்க வழிபாடுகள் முற்றாகத் தடைசெய்யப்பட்டன.*

**அடிகளார் இலங்கைக்கு வந்த சூழ்நிலை**

*இலங்கையில் கத்தோலிக்கர் அனுபவிக்கும் துயரங்கள், சோகக் கதைகள் இந்தியாவில் கோவாவில் இருந்த யோசவ்வாஸ் அடிகளின் காதுகளுக்கு எட்டியது. இலங்கையில் கத்தோலிக்க விசுவாசத்தை மீண்டும் கட்டியெழுப்ப அவர் திடசங்கற்பம் பூண்டார். யாசகர் (பிச்சைக்காரன்) வேடம் பூண்டவராய் யோண் என்ற உதவியாளரையும் அழைத்துக்கொண்டு கடல் மார்க்கமாக யோசவ்வாஸ் அடிகள் இலங்கைக்கு வந்தார். மூன்று நாட்களில் யாழ்ப்பாணம் செல்லவேண்டியவர், படகு புயற்காற்றில் அலைக்கழிக்கப்பட்டதால் இரண்டு வாரங்கள் கழித்து மன்னாரில் - இன்றைய சவுத்பார் கடற்கரையில் - காலடி பதித்தார். உணவின்றி பசியால் சாகும் நிலையில் இருந்த இவருக்கு ஒரு ஏழைத்தாய் கஞ்சி வழங்கி உயிர்ப்பிச்சை கொடுத்ததாக வரலாற்றில் வாசிக்கின்றோம்.*

**29 ஆண்டுகள் குருக்கள் இல்லாத இலங்கை**

*இலங்கைத் தீவின் பெரும்பகுதி ஒல்லாந்தரின் ஆட்சிக்குள் வீழ்வதற்கு முன்பு 120 கத்தோலிக்க குருக்கள் இலங்கையில் பணியாற்றினர். இலங்கைத் தீவின் பெரும் பகுதியை தங்கள் ஆட்சிக்கு உட்படுத்திய ஒல்லாந்த கிழக்கிந்தியக் கொம்பனியினர் அனைத்துக் கத்தோலிக்க குருக்களையும் இங்கிருந்து வெளியேற்றினர். 1658ஆம் ஆண்டிலிருந்து 29 வருடங்கள் எந்தவொரு கத்தோலிக்க குருவும் இந்த நாட்டில் இல்லாத நிலையில்தான் 1687இல் யோசவ்வாஸ் அடிகளார் இந்நாட்டிற்குள் காலடி எடுத்துவைத்தார்.*


**ஆபத்துக்கள் மத்தியில் அரும்பணி**

*முதல் பத்து வருடங்கள் தனி ஒரு குருவாகவே இந்த நாடு முழுவதும் அவர் பயணம் செய்து பணியாற்றினார். மரண தண்டனை அச்சுறுத்தலை எந்த வேளையிலும் எதிர்கொண்டநிலையிலேயே அவர் இருந்தார். தனது பணியின் ஆரம்பக் கட்டத்தில் ஒரு யாசகராக வேடம் பூண்டு, வீடுவீடாகச்சென்று கத்தோலிக்கரின் வீடுகளை அடையாளம் கண்டார். நம்பிக்கைக்குரிய கத்தோலிக்கருக்கு தன்னை வெளிப்படுத்தி அவர்களின் அனுசரணையுடன் தன் பணியை இரகசியமாகச் செய்துவந்தார். சில்லாலையில் உள்ள கத்தோலிக்கர் அடிகளாருக்கு அடைக்கலம் கொடுத்து அவருடைய பணிக்கு பலவழிகளிலும் அனுசரணையாக இருந்துள்ளனர். இரகசியமாக, இரவு வேளையில் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். அருட்சாதனங்களை நிறைவேற்றினார். எந்த வாகன வசதிகளும் அற்ற அக்காலத்தில் கால்நடையாகவே அவர் எல்லா இடங்களுக்கும் பயணம் செய்தார். காடுகள், ஆறுகளைக் கடந்து சென்றார். ஆபத்தை விளைவிக்கும் மிருகங்கள், பாம்புகள் மத்தியில் பல்லாயிரம் மைல் நடந்து சென்று அவர் பணி செய்தார்.*

*யோசவ்வாஸ் அடிகளாரின் ஆன்ம வாஞ்சை, பணியார்வம் இன்றைய இறைபணியாளர்களுக்கு மேல்வரிச்சட்டமாக உள்ளது. எந்தக் கத்தோலிக்க விசுவாசத்தைக் காக்க அவர் உயிரையும் துச்சமாக மதித்து அரும்பணியாற்றினாரோ அந்தக் கத்தோலிக்க விசுவாசத்தைக் கட்டிக் காப்பது நம் அனைவருக்குமுரிய கடமையும் பொறுப்புமாகும். உணர்வோமா? உறுதியோடு செயற்படுவோமா?*

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை,**
**அன்புடன் அருட்பணியாளர் தமிழ் நேசன்,**
**மன்னா பதிப்பாசிரியர்**

## கலையருவி நடாத்திய "மனித மாண்பும் குடும்ப வாழ்வும்" புத்தாக்கப் போட்டி முடிவுகள்



மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவி "மனித மாண்பும் குடும்ப வாழ்வும்" என்ற இவ்வாண்டிற்கான மறைமாவட்ட மையப்பொருளை அடிப்படையாக வைத்து புத்தாக்கப் போட்டிகளை நடாத்தியது. கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகப் பிரதியாக்கம் ஆகிய இந்த நான்கு போட்டிகளின் முடிவுகளைக் கீழே தருகின்றோம். ஏற்கனவே அறிவித்தபடி ஒவ்வொரு போட்டியிலும் மூன்று இடங்கள் தெரிவுசெய்யப்பட்டு முறையே 3000/= 2000/= , 1000/= பரிசாக வழங்கப்படும். பரிசளிப்பு இவ்வருட இறுதிக்குள் இடம்பெறும். பங்குபற்றிய அனைவருக்கும் நன்றிகள். சிறப்பிடங்களைப் பெற்றவர்களுக்கு எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

### கவிதைப் போட்டி

1ஆம் இடம் - திரு. செபஸ்தியான் மாசிலாமணி
ஆவணம், நானாட்டான்.

2ஆம் இடம் - இ. கிறிஸ்துராஜா லோகு
முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை.

3ஆம் இடம் - டி. மேரி கிறிஸ்ரீனா
மகளீர் இல்லம், அன்புக்கன்னியர்,
செட்டிகுளம்.

4ஆம் இடம் - கலிஸ்ரா ரவீந்திரன்
வ/ இறம்பைக்குளம் மகளீர் ம.வி.
இறம்பைக்குளம், வவுனியா.

5ஆம் இடம் - சவிரிமுத்து மேரி மறினி
அருப்பே சிறுமியர் இல்லம்,
பூவரசங்குளம், வவுனியா.

### கட்டுரைப்போட்டி

1ஆம் இடம் - திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்
வட்டாரம் - 10, வங்காலை.

2ஆம் இடம் - செல்வி. சந்தியோகு ஜொஸ்லின்
காத்தான்குளம், நானாட்டான்.

3ஆம் இடம் - செல்வி. அ. அக்னேஸ்
தரம் 11, குஞ்சுக்குளம், மடுறோட்.

4ஆம் இடம் - செல்வி. சவிரிமுத்து மேரி மறினி
அருப்பே சிறுமியர் இல்லம்,
பூவரசன்குளம், வவுனியா.

5ஆம் இடம் - செல்வி. கிறிஸ்ரின் ஏஞ்சலின் டலிமா
1ம் வட்டாரம், பேசாலை.

### சிறுகதைப் போட்டி

1ஆம் இடம் - தேவராசா சுரேக்கா
இல. 139/9, மரக்காரம்பளை வீதி,
கணேசபுரம், வவுனியா.

2ஆம் இடம் - சி. மரிஸ் றெரிஸ்ரா
திருக்குடும்பக் கன்னியர் இல்லம், மன்னார்.

3ஆம் இடம் - ஜெ. இஷாயினி
திருக்குடும்பக் கன்னியர் இல்லம், மன்னார்.

4ஆம் இடம் - அலெக்ஸ் மரியதாஸ் (மன்னார் மணி)
இல. 196, மூர்வீதி, மன்னார்.

5ஆம் இடம் - வி. ஆன் டினுஷா
திருக்குடும்பக் கன்னியர் இல்லம், மன்னார்.

### நாடகப் பிரதியாக்கப் போட்டி

1ஆம் இடம் - திரு. த. பறுனாந்து பீரிஸ்
தாழ்வுபாடு, மன்னார்.

2ஆம் இடம் - திரு. செ. பறுனாந்து
பாடசாலை வீதி, முதலியார்குளம்,
செட்டிகுளம்.

3ஆம் இடம் - ஜே. றுமேஷினி
திருக்குடும்பக் கன்னியர் இல்லம், மன்னார்.

4ஆம் இடம் - தேவராசா சுரேக்கா
இல. 139/9, மரக்காரம்பளை வீதி,
கணேசபுரம், வவுனியா.

5ஆம் இடம் - ஆர். ஜே. மயூரிகா
திருக்குடும்பக் கன்னியர் இல்லம், மன்னார்.

## அருட்பணித்திட்டமிடல் மாநாடு திகதி மாற்றம்

மன்னார் மறைமாவட்ட அருட்பணித்திட்டமிடல் மாநாடு நடைபெறும் திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இம்மாநாடு நவம்பர் மாதம் 21ஆம் 22ஆம் திகதிகளில் மடுத் தியான இல்லத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலமைப்பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் இரண்டாமிடம்



அண்மையில் வெளியாகிய புலமைப் பரிசில் பரீட்சையில் பேசாலை மன்/ சென் மேரிஸ் வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வி. ஒஸ்மன் மரின் டிவ்வோனா பறுனாந்து அவர்கள் 188 புள்ளிகள் பெற்று மன்னார் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இவருக்கு கல்வி கற்பித்த ஆசிரியர் திருமதி. றெக்ஸ் செல்வராணி குரூஸ் அவர்களுக்கும், பாடசாலையின் அதிபர் திருமதி கிறிஸ்ரின் சின்னராணி குரூஸ் அவர்களுக்கும் பாரட்டுக்களைத் தெரிவிக்கின்றோம். இந்தப் பாடசாலையில் இம்முறை 20 மாணவர்கள் சித்திபெற்றுள்ளனர்.

## மன்னார் மறைமாவட்டம் திருவழிபாட்டு நாட்காட்டி - 2014

### கார்த்திகை

03 - இறந்துபோன ஆயர்கள், குருக்கள், துறவிகளின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மாலை 5.00 மணிக்கு தூய செபஸ்தியார் பேராலயத்தில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.
04 - அன்புக் கன்னியர் சபை விழா.
22 - தூய சிசிலியம்மாள் - பாடகர் குழாமினரின் விழா
23 - கிறிஸ்து அரசர் திருவிழா - முருங்கன், நெடுங்கேணி, குருமன்காடு, தாலிக்குளம் (காணிக்கைகள் ஆயர் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்படும்).
30 - புனித அந்திரேயா திருவிழா - தோட்டவெளி
■ மாதத்தின் 2வது, 4வது சனி உபவாசத் தியானம் - தோட்டவெளி ஆன்மீக இல்லம்.




## கிறிஸ்மஸ், புதுவருட மற்றும் தைப்பொங்கள் ஆக்கங்கள்

கிறிஸ்மஸ், புதுவருட மற்றும் தைப்பொங்கல் தொடர்பான ஆக்கங்களை எழுத்தாளர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

உங்கள் ஆக்கங்கள் சுருக்கமாக, இறுக்கமாக, யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்திருக்க வேண்டும்.

கிறிஸ்மஸ், புதுவருட ஆக்கங்கள் நவம்பர் 20ஆம் திகதிக்கு முன்னரும், தைப்பொங்கல் தொடர்பான ஆக்கங்கள் டிசம்பர் 10ஆம் திகதிக்கு முன்னரும் எமக்கு வந்து சேரவேண்டும். காலம் தாமதிக்காமல் உடனே எழுதி அனுப்புங்கள்! ஆக்கங்களின் தரம்கண்டு பிரசுரிப்போம்!

(மன்னா நிர்வாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலித்தடை நீக்கத்திற்கும் எனக்கும் தொடர்பில்லை

## ஜனாதிபதி தேர்தலுக்கு ஒரு மாதத்தின் பின்னரே பாப்பரசர் இலங்கை வருவார்

### சர்வமதக் குழுவினரிடம் மன்னார் ஆயர் தெரிவிப்பு

ஐரோப்பிய ஒன்றியம் புலித்தடையை நீக்கியதற்கு நான்தான் காரணமென ஒரு இணையத்தளம் செய்தியை வெளியிட்டுள்ளது. எனக்கும் இதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. நான் அதுபற்றி கனவில்கூட நினைக்கவில்லை. அங்கு இது தொடர்பாக வழக்குத் தொடர்ந்ததுகூட எனக்குத் தெரியாது. வெறும் ஊகத்தில் எழுதுகின்றார்கள். இவை இன்னுமின்னும் இடைவெளியை அதிகரிக்கத்தான் உதவுமே தவிர பிரச்சினைகளைத் தீர்க்க ஒருபோதும் உதவாது. இவ்வாறு மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை கடந்த ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி மன்னார் ஆயர் இல்லத்தில் தன்னைச் சந்தித்த அம்பாறை மாவட்ட சர்வமதக் குழுவினரிடம் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்ட சமாதானத்திற்கான சமயங்களின் இலங்கைப்பேரவையின் சார்பில் அதன் தலைவர் டாக்டர் எம். ஐ. எம். ஜெமீல், செயலாளர் வி. ரி. சகாதேவராஜா, உபதலைவர்களான வண. ரண்முத்துகல சங்கரத்ன தேரர், பாஸ்ரர் கிருபைராஜா, பொருளாளர் பாஸ்ரர் எஸ். கிறிஸ்தோபர், உபசெயலாளர் எம்.எஸ்.எம் இப்ராகிம் நிருவாக சபை உறுப்பினர்களான எம். எஸ். ஜலீஸ், அஷ்ஷேய்க் அன்சார் மௌலானா, த. கயிலாயபிள்ளை, எம். எஸ். ஹிமாயத்துல்லா ஆகியோர் சந்தித்தனர்.



பாப்பரசரின் வருகையை அரசியலாக்கப் பார்க்கிறார்கள். உலக சமயத்தலைவரொருவரின் விஜயத்தை அரசியலாக்க யாரும் அனுமதிக்க முடியாது. எனவே இலங்கையில் எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்று ஒரு மாத காலத்தின் பின்னரே பாப்பரசரின் இலங்கை விஜயம் இடம்பெறும் என்றும் ஆயர் திட்டவட்டமாகக் கூறினார். மேலும் ஆயர் கருத்துரைக்கையில்: அம்பாறை மாவட்டத்திலிருந்து வடக்கிற்கு நான்கு நாள் சமாதான நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு மன்னாருக்கு வந்ததையிட்டு நன்றி கூறுகின்றேன். நல்ல சிந்தனைகள், செயற்பாடுகள் எப்போதும் நன்மையில் முடியும். அதற்கு இறைவன் பக்கபலமாக இருப்பார் என்றார்.

## பாப்பரசருடைய பயணத்தை வத்திக்கானே தீர்மானிக்கும்

திருமலை ஆர் கிங்ஸிலி



பாப்பரசர் பிரான்சிஸ்ஸின் இலங்கைக்கான பயணம் குறித்த இறுதி முடிவை வத்திக்கானில் இருந்து சில தினங்களில் இலங்கை வரவுள்ள குழு ஒன்று எடுக்கும் என்று தெரிவித்துள்ளார் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கிங்ஸிலி சுவாம்பிள்ளை ஆண்டகை.

பாப்பரசர் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இலங்கைக்குப் பயணம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ள நிலையில், அதே காலகட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடப்பதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில், இந்த இரு நிகழ்வுகளும் ஒரே காலத்தில் நடப்பது உசிதமாக இருக்காது என்று பல தரப்பினராலும் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளது என்று கூறிய திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிங்ஸிலி சுவாம்பிள்ளை, அதனால் இது குறித்து விவாதிக்க ஒரு குழு சில தினங்களில் இலங்கை வரவுள்ளது என்றும் தெரிவித்தார்.

இலங்கை வரும் குழுவினர், இங்குள்ள சகல தரப்பினருடனும் ஆராய்ந்து அதன் பின்னரே பாப்பரசரின் பயணம் குறித்த இறுதி முடிவை எடுப்பார்கள் என்றும் அவர் கூறினார். இந்த விடயம் தொடர்பில் பி.பி.ஸி செய்திச் சேவைக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## முள்ளிக்குளத்தில் 82 தற்காலிக வீடுகளுக்கு அடிக்கல்

மன்னார் முசலிப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட போரின் பின்னர் மீளக்குடியேறி எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றிக் காட்டுப் பகுதியினுள் வாழ்ந்துவரும் மக்களுக்கு வடக்கு மாகாண சபை அவசர தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வடக்கு மாகாண அமைச்சர் பா. டெனீஸ்வரனின் முயற்சியினால் பாதிக்கப்பட்ட நிலையில் முள்ளிக்குளம் பகுதியில் வாழ்ந்து வரும் 82 குடும்பங்களுக்குத் தற்காலிக வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை முள்ளிக்குளம் கிராமத்தில் இடம்பெற்றது.

குறித்த தற்காலிக வீடுகள் 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள நிலையில் மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகையின் ஆசீர்வாதத்துடன் அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் மாகாண முதலமைச்சர் க. வி. விக்னேஸ்வரன் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டுவைத்தார்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)



## நற்கருணை அன்னை புதல்வியர் சபைக்கு மன்னாரிலிருந்து முதல் அழைத்தல்



முள்ளிக்குளம் பங்கைச் சேர்ந்தவரும், தற்போது மன்னார் பட்டித்தோட்டத்தில் வசிப்பவருமான அக்னெஸ் டிமெல் அவர்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி நற்கருணை அன்னை புதல்வியர் சபையில் அருட்சகோதரியாக தனது முதலாவது அர்ப்பணத்தை இறைவனுக்கு வழங்கினார்.

இச்சபைக்கு மன்னாரில் இருந்து வந்துள்ள முதல் அழைத்தல் இது என்பது குறிப்பிடத்தக்கது.


(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)


### மன்னா விநியோகஸ்தர்களே!

உங்கள் கைகளுக்குக் கிடைக்கும் மன்னாவை காலம் தாமதிக்காமல் உடனடியாக விநியோகிங்கள்!

- மன்னா நிர்வாகம் -


## சிறப்புக் கற்கைநெறியை மேற்கொள்ள அருட்பணி. கிறிஸ்துநாயகம் உரோமை பயணம்



மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்தவரும் தற்போது கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரியில் விரிவுரையாளராகவும், உருவாக்குனராகவும் பணிபுரிபவருமான அருட்பணியாளர். பி. கிறிஸ்துநாயகம் அவர்கள் நான்கு மாத சிறப்பு உயர்கல்விக்காக உரோமாபுரி சென்றுள்ளார். குருத்துவக் கல்லூரிகளில் ஐந்து வருடங்களுக்கு மேல் விரிவுரையாளர்களாகப் பணிபுரிகின்றவர்களுக்கு விசுவாசப் பரப்புதல் பேராயத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்டு, உரோமையில் உள்ள ஊர்பானியா பல்கலைக்கழகத்தில் நடைபெறும் இந்தக் கற்கைநெறியில் பங்கெடுப்பதற்காகவே மன்னார் ஆயரின் அனுமதியுடன் இவர் உரோமை சென்றுள்ளார்.

நன்னெறி இறையியல் (Moral Theology) சார்ந்த இந்தக் கற்கைநெறி இவ்வாண்டு ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதி தொடக்கம் அடுத்த வருடம் ஜனவரி 31ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

நாளாந்த விரிவுரைகள், வாராந்தக் கருத்தரங்குகள், பாடநெறி சீரமைப்பு நிகழ்ச்சிகள், சிறப்பு மாநாடுகள் போன்றவை இந்தப் பாடநெறிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தக் கற்கைநெறி நிறைவடைந்ததும் அவர் மீண்டும் கண்டி தேசியக் குருத்துவக் கல்லூரிக்கு வந்து தனது பணியைத் தொடர்வார்.

## வெள்ளி, பொன், வைர விழாக்காணும் திருக்குடும்ப அருட்சகோதரிகளை வாழ்த்துகிறோம்

திருக்குடும்ப கன்னியர் சபையின் யாழ் மாகாணத்தைச் சேர்ந்த அருட்சகோதரிகள் பலர் இவ்வாண்டு தமது துறவு வாழ்வில் 25 வருட நிறைவை (வெள்ளி விழாவை), 50 வருட நிறைவை (பொன் விழாவை), 60 வருட நிறைவை (வைர விழாவை) கொண்டாடுகின்றார்கள்.

இச்சகோதரிகள் தாம் வாழும் குழுமத்தில் எளிமையான முறையில் இந்த யூபிலி விழாக்களை நினைவுகூர்ந்து கொண்டாடினார்கள். எதிர்வரும் டிசம்பர் மாதம் 18ஆம் திகதி மாகாண மட்டத்தில் அனைவருக்குமான யூபிலி நன்றித்திருப்பலி யாழ் ஆயர் தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள மாகாண இல்லத்தில் இடம்பெறவுள்ளது. யூபிலி விழாக் காணும் அருட்சகோதரிகளின் விபரங்கள் கீழே இடம்பெறுகின்றன.

**வெள்ளி விழா**

1. அருட்சகோதரி. எலிசபேத் மலர் சிமியோன்
2. அருட்சகோதரி. அன்றா சிந்தாத்துரை
3. அருட்சகோதரி. யசிந்தாராணி அந்தோனிப்பிள்ளை

**பொன்விழா**

1. அருட்சகோதரி. பெனடிற்றா மரியாம்பிள்ளை
2. அருட்சகோதரி. நோபேட் பஸ்ரியாம்பிள்ளை
3. அருட்சகோதரி. குளோறி ஏ. கற்றார் (A'Kattar)

**வைரவிழா**

1. அருட்சகோதரி. அட்றியான் பெர்னாண்டோ
2. அருட்சகோதரி. பிரிசில்லா போல் பெர்னான்டோ
3. அருட்சகோதரி. யூலியானா குலாஸ்
4. அருட்சகோதரி. செலஸ்ரீனா றபாயேல்
5. அருட்சகோதரி. லூயிஸ் மேரி இராயப்பு
6. அருட்சகோதரி. தியோப்பனன் அருளானந்தம்
7. அருட்சகோதரி. வீர்ஜினி குருஸ்
8. அருட்சகோதரி. கத்தறின் கூஞ்சு (பிலிப்பைன்ஸ்)
9. அருட்சகோதரி. ஜேர்மயின் பொன்னையா (RIP)
10. அருட்சகோதரி. விக்ரோறியா மார்சலீன் (RIP)
11. அருட்சகோதரி. லொறன்ரீனா அகஸ்ரீன் சோசை
12. அருட்சகோதரி. மெற்றில்டா வைத்திலிங்கம்

இச்சகோதரிகளில் சிலர் மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். இன்னும் பலர் மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு இடங்களில் பல்லாண்டுகள் அரும்பணி ஆற்றியவர்கள். இவர்கள் எல்லோருக்கும் மன்னார் மறைமாவட்டத் திருச்சபையின் நன்றிகளையும், யூபிலி வாழ்த்துக்களையும், நிறைவான இறையாசீர்களையும் தெரிவிப்பதில் மன்னா பெருமகிழ்வடைகின்றது.

## செபமாலைத்தாசர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் டானியேல் இறைபதம்



செபமாலைத்தாசர் துறவற சபையைச் சேர்ந்தவரும், வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்டவருமான அருட்சகோதரர் டானியேல் (சாமிநாதர்) கடந்த 24. 08.2014 அன்று இறைபதம் அடைந்தார்.

இவரது உடலம் இல. 05, நல்லூர் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அடுத்த நாள் அச்சுவேலியில் அமைந்துள்ள செபமாலைத்தாசர் துறவற மடத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. பின்னர் மாலை 3.00 மணிக்கு இரங்கற் கூட்டுத் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களினால் இறுதி அடக்க வழிபாட்டுடன்கூடிய இறுதி அஞ்சலி நிகழ்வுகளும் நிறைவேற்றப்பட்டன. பின்னர் அச்சுவேலி செபமாலைத்தாசர் துறவற சபையினரின் கல்லறைத் தோட்டத்தில் இவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில் அருட்சகோதரருடைய உறவினர்கள் பலர் வங்காலையில் இருந்து வந்து கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. இறைபதம் அடைந்த அருட்சகோதரரின் ஆன்மா அமைதியில் இளைப்பாறச் செபிப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## தேசிய மட்ட தடகளப் போட்டியில் மன் / நானாட்டான் ம.வி. சாதனை



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான 30வது தேசிய மட்ட தடகளப்போட்டி அண்மையில் கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது.

மன்னார் மாவட்டம் சார்பாக அதிகளவிலான வீரவீராங்கனைகள் இதில் கலந்துகொண்டனர். இப்போட்டியில் மன்னார் மாவட்டத்திற்கு இரண்டு பதக்கங்கள் கிடைக்கப்பெற்றன. இதில் 06.10.2014 அன்று நடைபெற்ற 21 வயதுப் பிரிவுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டி நிகழ்வில் மன் /நானாட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் ஜோர்ச் அன்று டிலைக்சன் 1.90 M உயரத்தைக் கடந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தை தனதாக்கிக்கொண்டார்.

மன்னார் மாவட்டத்தில் பதக்கங்கள் அடிப்படையில் நானாட்டான் மகா வித்தியாலயம் முதல்



இடத்தினை பெறுகின்றது.

2013ம் ஆண்டு மன்னார் மாவட்டத்திற்குத் தேசிய மட்டத்தில் ஓர் இடமே கிடைக்கப்பெற்றது. இவ்வெற்றிக்கு உரித்தான மாணவனும் மேற்குறித்த செல்வன் ஜோர்ச் அன்று டிலைக்சனே ஆவார்.

இவ்வெற்றிக்குப் பல வழிகளிலும் உறுதுணையாக இருந்த பாடசாலை அதிபர் அருட்சகோதரர் எஸ். ஈ. றெஜினோல்ட் (FSC), உடற்கல்வி ஆசிரியரும் பயிற்றுவிப்பாளருமான ஆசிரியர் திரு. எஸ். சிறிதேவகரன் (ஸ்ரான்லி) ஆகியோருக்கு பாடசாலைச் சமூகம் பாராட்டுதல்களையும் நன்றிகளையும் தெரிவித்து நிற்கின்றது.

## தேசிய மட்ட அஞ்சலோட்ட நிகழ்வில் மன்/ புனித ஆனாள் ம.ம.வி. சாதனை



கடந்த 04.10.2014 அன்று கொழும்பில் நடைபெற்ற 30வது தேசிய விளையாட்டு விழாவில் வங்காலை புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலய 21 வயதுக்குட்பட்ட மாணவர்கள் 4 x 100 மீற்றர் அஞ்சலோட்ட நிகழ்வில் வெண்கலப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளனர்.

மன்னார் மாவட்ட வரலாற்றில் பாடசாலை மட்ட நிகழ்வில் சுவட்டு நிகழ்ச்சியில் பதக்கம் வென்றமை இதுவே முதல் தடவை எனக் கருதப்படுகிறது. இது வங்காலைப் பாடசாலைக்கும், மன்னார் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்த நிகழ்வாகும். இவ்வெற்றியைக் கொண்டாடும் ஆரம்ப நிகழ்வு கடந்த 09-10-2014 காலை மன்னார் கல்வி வலய அலுவலகத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், உதவி மாவட்டச் செயலாளர், நானாட்டான் முன்னாள், இந்நாள் பிரதேச செயலாளர்கள், நானாட்டான் பிரதேசசபைத் தவிசாளர், மன்னார் நகர சபை உதவித் தவிசாளர், புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை அதிபர் மற்றும் டிலாசால் சபையின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் உட்பட அதிகமான பிரமுகர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்கள், பயிற்றுவித்த ஆசிரியர்கள் மாலை மற்றும் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர். வாழ்த்துரையை மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் அவர்கள் வழங்கினார்.

அதை அடுத்து போக்குவரத்துப் பொலிசாரின் வழிநடத்துதலில் நூற்றுக்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களும், முச்சக்கரவண்டிகளும் பவனியாக ஹோன் ஒலி எழுப்பியவாறு வர, வீதியெங்கும் வெடிகள் அதிர வெற்றிவீரர்களும், பயிற்றுவித்த ஆசிரியர்களும் ஊர்தியில் பவனியாக வங்காலைக் கிராமத்திற்கு அழைத்துவரப்பட்டனர். ஆலயத்தில் இடம்பெற்ற செபவழிபாட்டை அடுத்து பேண்ட், இன்னிய வாத்திய இசைகளுடன் பாடசாலைக்கு அழைத்துவரப்பட்டனர். (தொடர்ச்சி 13ஆம் பக்கம்)

# மன்னார்ச் செய்திகள்

## சில வரிகளில் ....

### மன்னார் கச்சேரி 4 மாடிக் கட்டடத்துக்கு அடிக்கல்

மன்னார் மாவட்ட செயலகத்தின் (கச்சேரியின்) புதிய நான்கு மாடிக் கட்டிடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 14.10.2014 அன்று மன்னார் மாவட்ட அரச அதிபர் எம். வை. எஸ். தேசப்பிரிய தலைமையில் இடம்பெற்றது. ஜனாதிபதி மஹிந்தவினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட 223 மில்லியன் ரூபா நிதியில் குறித்த கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

### அடம்பன் பாடசாலைக் கட்டிடத் திறப்பு விழா

மன்/அடம்பன் மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் திறப்பு விழா கடந்த 11.10.2014 அன்று சனிக்கிழமை வைபவ ரீதியாக இடம்பெற்றது. இந்த நிகழ்வில், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

### பெயர்ப்பலகைக்கு கழிவு ஒயில்

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள பேசாலைக் கிராமத்தை அடையாளப்படுத்தும் பெயர்ப்பலகை கடந்த 13.10.2014 திங்கட்கிழமை இரவு இனம் தெரியாத நபர்களினால் கழிவு ஒயில் பூசப்பட்டுச் சேதப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். தலைமன்னாரில் இருந்து பேசாலைக்குச் செல்லும் வீதியில் அந்தக் கிராமத்தின் எல்லையை அடையாளப்படுத்தும் வகையில் சிமெந்தினால் குறித்த பெயர்ப்பலகை அமைக்கப்பட்டு வீதியோரத்தில் நடப்பட்டுள்ளது. அதில் பேசாலை என மூன்று மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளது.

### பொது மைதானத்தில் வசதிகள் இல்லை இடிந்து விழும் நிலையில் நீர்த்தாங்கி!

மன்னார் பொது விளையாட்டு மைதானம் கடந்த பல வருடங்களாக எவ்வித அடிப்படை வசதிகளும் இன்றிக் காணப்படுவதாகவும், இதனால் குறித்த விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும் விளையாட்டு நிகழ்வுகளுக்குச் செல்லும் வீரர்களும், பயிற்சிகளுக்காகச் செல்லும் வீரர்களும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் பாதிக்கப்பட்ட வீரர்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் நகரில் உள்ள மிகவும் பழைமை வாய்ந்த விளையாட்டு மைதானமாக மன்னார் பொது விளையாட்டு மைதானம் உள்ளது. இந்த மைதானத்தில் எவ்வித அடிப்படை வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. குறிப்பாகக் குடிதண்ணீர்ப் பிரச்சினை, மலசலகூடப் பிரச்சினை என்பன தீர்க்கப்படவில்லை. இங்குள்ள பழைய நீர்த்தாங்கி இடிந்துவிழும் நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாகிஸ்தான் உதவியுடன் மன்னாரில் 200 வீடுகள்

பாகிஸ்தான் அரசின் நிதி உதவியுடன் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்குடியிருப்புக் கிராமத்தில் 200 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா கடந்த 11.10.2014 அன்று அமைச்சர் றிஷாட் பதியுதீன் தலைமையில் இடம்பெற்றது. இதில் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் மேஜர் ஜெனரல் காசிம் குறைசி, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, மாகாண சபை உறுப்பினர்களான ஜெயதிலக்க, றிப்கான் பதியுதீன் மற்றும் பிரதேச செயலாளர்கள், கிராம மக்கள் எனப் பலர் கலந்துகொண்டார்கள்.

# நாட்டு நடப்புகள்

## தருவது நாங்கள் ........ தீர்மானிப்பது நீங்கள்........

### இந்தியாவில் 30 நிமிடத்திற்கு ஒரு பாலியல் வன்செயல்: ஆய்வு

இந்தியாவில் ஒவ்வொரு 30 நிமிடத்திற்கு ஒரு பாலியல் வன்செயல் இடம்பெறுவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது. நாடு முழுவதும் 28 மாநிலங்களில் கடந்த 13 ஆண்டுகளில் நடத்தப்பட்ட ஆய்வில், பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பாக மொத்தம் 2,72,844 புகார்கள் பதிவானதாக புள்ளிவிபரம் கூறுகிறது. மேலும் பெண்களுக்கெதிரான வன்முறை அதிகரித்துக்கொண்டே வருவதாக கொமன்வெல்த் மனித உரிமைகள் அமைப்பின் ஆய்வு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### 2013இல் 1,220 பிக்குகள் துறவறம் விட்டோடினர்

2013ஆம் ஆண்டில் 1,220 பிக்குகள் துறவறத்திலிருந்து விலகிச் சென்றுள்ளனர் எனத் தெரிவித்துள்ள புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சு பிக்குமார்கள் துறவறத்திலிருந்து விலகிச் செல்வதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தது.

நாடாளுமன்றத்தில் கடந்த 10-10-2014 அன்று இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐ.தே.க. வின் அனோமா கமமே எம். பி. எழுப்பிய கேள்விக்குப் புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சால் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பதிலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:- இலங்கையில் தற்போது 37 ஆயிரத்து 691 பிக்குகள் இருக்கின்றனர். இவர்களில் 3,105 பிக்குகள் 2013ஆம் ஆண்டில் துறவறத்தில் இணைந்துகொண்டனர். இவர்களுள் 1,220 பேர் அந்த ஆண்டு துறவறத்தில் இருந்து விலகிச் சென்றுள்ளனர்.

பிக்குமார்கள் துறவறத்திலிருந்த விலகிச்செல்வதை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதற்கமைய பிக்குமார்களின் பெற்றோர்களுக்கான நிதியம் ஒன்றை ஆரம்பித்து அதன்கீழ் ஏழைப் பிக்குமார்களின் பெற்றோர்களுக்கென வீடுகள் நிர்மானித்து வழங்கப்படுகின்றன. பிக்குமார் சிந்தனை மேம்பாட்டுத் திட்டங்களை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தல், விகாரைக்குத் தேவையான அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல் முதலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதேவேளை, சாசனப் பாரம்பரியங்களுக்கு அமையவும், ஒழுக்க விதிமுறைகளுக்கு அமையவும் பிக்குனி தலைமுறையொன்றை மீண்டும் நிறுவ முடியாது என்று முப்பீடங்களினதும் மகாநாயக்க தேரர்கள் தெரிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இடதுகையை இழந்த சட்டப்பீட மாணவி 100 மில்லியன் நஷ்டஈடு கோரி மனு

இடது கையை இழந்தவரும் மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்தவருமான கொழும்பு சட்டப்பீட மாணவி அச்சலா பிரியதர்சினி 100 மில்லியன் ரூபா நஷ்ட ஈடு கோரி அரசாங்கத்துக்கு எதிராகக் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நட்டஈட்டு மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

மனுதாதரரான சட்டப்பீட மாணவி அச்சலா பிரியதர்சினி, சட்டத்தரனி அருட்பிரகாசம் ஊடாகத் தாக்கல் செய்துள்ள மனுவில் பிரதிவாதிகளாக மாத்தறை மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் நாயகம், சுகாதார அமைச்சின் செயலாளர் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

தவறி விழுந்ததில் கை முறிவு ஏற்பட்டு மாத்தறை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில்தான் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக குறிப்பிட்டுள்ள அச்சலா பிரியதர்சினி, முறையற்ற விதத்தில் சிகிச்சை அளிக்கப்பட்டமையினால் தனது இடது கை துண்டிக்கப்பட்டுவிட்டதாகவும் அதற்கு மாத்தறை மற்றும் கொழும்பு ஆகிய வைத்தியசாலைகளின் ஊழியர்களே பிரதான காரணங்களாக இருந்துள்ளனர் என்றும் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

### கடந்த ஒன்பது மாத காலத்துக்குள் 1,956 பாரதூரமான வாகன விபத்துக்கள்

#### உயிரிழந்தோர் எண்ணிக்கை 1,706

இந்த ஆண்டின் கடந்த 9 மாத காலத்துக்குள் நாடு முழுவதுமாக இடம்பெற்றுள்ள பாரதூரமான வாகன விபத்துக்களின் எண்ணிக்கை ஆயிரத்து 956 வரை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ள பொலிஸ்துறை, அந்த வாகன விபத்துக்களினால் ஆயிரத்து 706 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் கூறியுள்ளது.

சில தனியார் பஸ் சாரதிகள் ஒருவரையொருவர் முந்திச் செல்வதற்காகப் போட்டி போட்டு அசுர வேகத்தில் பஸ்களை செலுத்திச் செல்வதும் கவனக்குறைவாக வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை மீறி வாகனங்களைச் செலுத்திச் செல்வதும் வாகன விபத்துக்களுக்குப் பிரதானமான காரணங்களாகியிருபதாகவும் பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

### சிறுவர் உரிமைப் போராளிகளான மலாலா, சத்யாத்ரிக்கு சமாதான நோபல் பரிசு






பாகிஸ்தானின் சிறுவர் கல்வி ஆர்வலர் மலாலா யூசப்சாய் மற்றும் இந்தியாவின் சிறுவர் உரிமை ஆர்வலர் கைலாஷ் சத்யாத்ரி ஆகியோர் இணைந்து இவ்வருடத்துக்கான சமாதானத்துக்கான நோபல் பரிசினை வென்றுள்ளனர்.

17 வயதில் மலாலா நோபல் பரிசை வென்றுள்ளமை இளம் வயதில் நோபல் பரிசை வென்ற முதல் நபர் என்ற பெருமையையும் அவருக்கு ஈட்டித்தந்துள்ளது.

பெண் கல்விக்காகக் குரல்கொடுத்த காரணத்திற்காக 2012 அக்டோபரில் தலிபான்கள் மலாலாமீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் அவர் தலையில் படுகாயமடைந்தார். பிரிட்டனில் சிகிச்சை பெற்ற பின்னர் தற்பொழுது குடும்பத்தினருடன் பிரிட்டனில் வசித்து வருகின்றார். சிறுவர்கள் மற்றும் இளம் பராயத்தினரின் ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டத்துக்காக இவ்விருவருக்கும் சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்படுவதாக நோபல் சபை அறிவித்துள்ளது.

மகாத்மா காந்தியின் பாரம்பரியத்தினைப் பேணிய சத்யாத்ரி பொருளாதாரத் தேவைகளுக்காக சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்படும் சுரண்டல் குறித்து கவனம் செலுத்தி, அதற்காக அமைதியான முறையில் பல ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தார் என்றும் நோபல் பரிசுச்சபை அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# பாப்பரசரின் இலங்கை விஜயம் துன்பப்படும் மக்களுக்கு ஆறுதல் அளிப்பதாக அமையும்

### மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை



யுத்தம் நிறைவடைந்த சூழலிலும் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் தொடர்பாகப் பேசப்பட்டாலும் அதனை ஏற்படுத்துவதற்குரிய செயற்பாடுகளை அரசு மேற்கொள்ளவில்லை. நல்லிணக்கத்தை ஏற்படுத்த விரும்பாத செயற்பாடுகளே தொடர்கின்றன. இந்நிலையில், பாப்பரசரின் இலங்கை விஜயம் துன்பப்படும் மக்களுக்கான குரலாக அமையும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இரா. யோசப்பு ஆண்டகை தெரிவித்தார்.

வத்திக்கானுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸை நேரடியாகச் சந்தித்து இலங்கைக்கு வருகைதருமாறு உத்தியோகபூர்வ அழைப்பை விடுத்திருந்தார். உள்நாட்டு விவகாரங்களில் சர்வதேசத்தின் தலையீடுகளுக்கு ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை எனவும் ஜனாதிபதி பகிரங்கமாகத் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் மன்னார் மறைமாவட்ட ஆயரிடம் கருத்துக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

**மாற்றமில்லை**

யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டு ஐந்து வருடங்களாகின்றன. இருந்தபோதும் யுத்தகாலத்தில் மக்கள் துன்பப்பட்டதைப்போன்றே தற்போதும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். அந்த நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை. கட்டடங்கள் கட்டப்படுகின்றன. இவற்றினால் எவ்விதமான நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை. பொதுமக்களின் வாழ்கையைக் கட்டியெழுப்புவதற்குரிய நடவடிக்கைகள் ஆக்கபூர்வமானதாக அமையவில்லை.

**நீதி நியாயமில்லை**

இந்த நாட்டில் குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படுவதில்லை. குற்றம் செய்தவர்களே நீதிபதிகளாக இருக்கும் துர்ப்பாக்கிய நிலைமை காணப்படுகின்றது. சட்டம் ஒழுங்கு தொடர்பில் பக்கச்சார்பற்ற செயற்பாடுகள் காணப்படுவதில்லை. ஒட்டுமொத்தமாக நீதி நியாமில்லாததொரு நிலைதான் இங்குள்ளது.

**காணாமலபோனோர் விடயம்**

யுத்தத்தின்போதும் அதற்குப் பின்னரான சூழ்நிலையிலும் பலர் காணாமல்போயிருக்கின்றார்கள். எத்தனையோ பொதுமக்கள் தமது உறவுகளை படைத்தரப்பிடம் நேரடியாக கையளித்திருக்கின்றார்கள். இன்றுவரை இவர்கள் எங்கே என்பது தெரியாதுள்ளது. அது தொடர்பில் எத்தனையோ தடவைகள் கேள்வியெழுப்பப்பட்டும், கவனயீர்ப்புப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டும் உரிய பதில் இன்றுவரையில் கிடைக்கவில்லை. இதற்குரிய பதிலைக் கூறவேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கே உள்ளது. காணாமல்போனோரின் உறவினர்களுக்கு வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்காக ஆடுகளையும், ஒருதொகைப் பணத்தையும் வழங்க முனைகின்றார்கள். அந்த உறவுகள் இவற்றை எதிர்பார்க்கவில்லை. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## வங்காலைப் பங்கில் முதியோர்தின நிகழ்வுகள்





மன்னார் மறைமாவட்ட முதியோர் தினமும் சர்வதேச முதியோர் தினமும் கடந்த ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி ஞாயிறு அன்று வங்காலையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலை நிகழ்வுகள் வங்காலைப் பங்குத்தந்தை அருட்பணி. எஸ். ஜெயபாலன் தலைமையில் 300க்கும் மேற்பட்ட முதியோரின் திருப்பலிப் பவனியுடன் ஆரம்பமாகியது. பவனியின்போது சிறுவர் மற்றும் உறவினர்கள் மலர்தூவி முதியோரை வரவேற்றனர். திருப்பலியின் இறுதி ஆசீர்வாதத்தினை அடுத்து மூத்தோரின் அடிபணிந்து ஆசீர்பெறும் அருமையான நிகழ்வு நெஞ்சுருக்கும் காட்சியாகக் காணப்பட்டது. காலை உணவு வங்காலை அருட்பணிப் பேரவையினால் வழங்கப்பட்டு காலை நிகழ்வு நிறைவுபெற்றது.

மதிய, மாலை நிகழ்வுகள் வங்காலை முதியோர் சங்கத் தலைவரும், மன்னார் மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் சமாசத் தலைவருமான திரு. எஸ். எஸ். லெம்பேட் (பாக்கியம் மாஸ்டர்) தலைமையில் நடைபெற்றது. அழைக்கப்பட்டோருக்கு மதியம் சிறப்பான விருந்துபசரணை வழங்கப்பட்டது.

மாலை நிகழ்வுகள் 4.00 மணிக்கு ஆரம்பமாகியது. இந்நிகழ்வுக்கு வடமாகாண சமூக சேவைகள் அமைச்சின் பணிப்பாளர் திருமதி. நளாயினி இன்பராஜ் பிரதம அதிதியாகவும், ஓய்வுபெற்ற நானாட்டான் பிரதேச செயலாளர் திரு சி. ஏ. சந்திரஐயா, வங்காலை ஆலய பங்குத்தந்தை அருட்பணி எஸ். ஜெயபாலன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களாகிய கௌரவ எஸ். வினோ, கௌரவ சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், மேலதிக சிறப்பு அதிதிகளாக முன்னாள் மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் திரு எம். ஏ. றெவல், யாழ் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி சூசை ஆனந்தன், நானாட்டான் பிரதேச சமூக சேவைகள் உத்தியோகஸ்தர் திரு. சந்திரபோஸ், நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் திரு அ. தி. அன்புறாஜ், செயலாளர் திரு. அமிர்தம், நானாட்டான் பிரதேச நிர்வாக அலுவலர் திரு. எஸ். ஆர். சூசைநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இவர்கள் அனைவரையும் முதியோரும், புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலய மாணவிகளும் மாலை அணிவித்தும் மலர் தூவியும் வரவேற்றனர். முதியோர் சங்கக் கலைக்குழுவினர் கலாச்சார முறைப்படி நாடகப் பாட்டுப்பாடி, இசை முழங்க விருந்தினர்களை வரவேற்று அழைத்துச்சென்றனர்.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## கட்டைக்காட்டில் மறைக்கல்வி வாரச் சிறப்பு நிகழ்வுகள்

ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதத்தில் நடைபெறும் மறைக்கல்வி வாரத்தை நானாட்டான் பங்கில் உள்ள கட்டைக்காடு கிராமம் சிறப்பித்து வருவது சிறப்பம்சமாகும். அவ்வாறே இவ்வாண்டும் இந்நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. கடந்த 21.09.2014 ஞாயிறு ஆரம்பமான இந்த மறைக்கல்வி வார நிகழ்வுகள் 28.09.2014 ஞாயிறுடன் நிறைவுக்கு வந்தன.

மறைக்கல்வியின் முக்கியத்துவம் மற்றும் மறைக்கல்வி வாரத்தை எவ்வாறு சிறப்பிப்பது போன்ற ஆய்வுகளுடன் ஆரம்பமான நிகழ்வுகள் சிரமதானம், திருவிவிலிய வார்த்தைப் பகிர்வு, செயலமர்வுகள், திருவிவிலிய வார்த்தைப் போட்டிகள், திருப்பலி, செபமாலை சொல்லுதல் மற்றும் பல விளையாட்டு நிகழ்வுகள் என பல விடயங்கள் மறையாசிரியர்களின் அயராத ஒத்துழைப்போடு நடைபெற்றன.

இவ்வாறு நானாட்டான் பங்கின் அனைத்து துணை ஆலயங்களின் கிராமங்களிலும் இவ்வாரம் சிறப்பாக அனுஸ்ரிக்கப்பட்டது. மறைக்கல்வி வார இறுதி நாள் ஞாயிறு திருப்பலியை நானாட்டான் பங்குத்தந்தை அருட்பணி. அருள்ராஜ் குரூஸ் தலைமைதாங்கி ஒப்புக்கொடுக்க மறைக்கல்வி மாணவர்கள் திருப்பலியைச் சிறப்பித்திருந்தார்கள்.

பின்பு நானாட்டான் பங்கு ஆரோக்கிய அன்னை ஆலயத்தில் பங்கு ரீதியான கலை நிகழ்வுகளும், திருவிவிலிய விளையாட்டுக்களும், மறையறிவு சார்ந்த திரைப்படக் காட்சியும் இறுதியில் பரிசளிப்பும் நடைபெற்று மறைக்கல்வி வார நிகழ்வுகள் இனிதே நிறைவுற்றன. திருப்பலி வேளையில் மறையாசிரியர்களுக்காக செபங்களும், ஆசிகளும் இடம்பெற்றன.

**தகவல்:- அ. றெஜ்சன், பெரியகட்டைக்காடு, நானாட்டான்**

## மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அறுவருக்கு தியாக்கோன் பட்டமளிப்பு

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஆறு அருட்சகோதரர்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி தியாக்கோன்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர். மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை இவர்களைத் தியாக்கோன்களாகத் திருநிலைப்படுத்தினார்.

தியாக்கோன் பட்டம் பெற்ற இவர்கள் ஆறு மாத காலமளவில் பங்குப் பணி அனுபவங்களுக்காக பங்குகளுக்கு அனுப்பப்படுவர். **தியாக்கோன் பட்டம் பெற்ற அருட்சகோதரர்கள் விபரம் வருமாறு :**

அருட்சகோதரர்கள் :

1. யேசுதாசன் அமலறாஜன் குரூஸ் - தலைமன்னார்
2. பாலசுந்தரம் றொசான் - இத்திக்கண்டல்
3. இராசானந்தம் நீக்கிலஸ் - உயித்தராசன்குளம்
4. நித்தியானந்தன் மேரி பெயிலன் குரூஸ் - வங்காலை
5. பீற்றர் சார்லஸ் தயாளன் கூஞ்ஞ - வங்காலை
6. பங்கிராஸ் யோண் ஸ்ரனின் சோசை - வங்காலை

## அந்தோனியார் ஆலயத் தேருக்கு தீ வைப்பு

வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் உள்ள தேரை கடந்த ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி ஞாயிறன்று அதிகாலை இனந்தெரியாதோர் தீ மூட்டி எரித்துள்ளனர்.

புனித அந்தோனியார் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை வழமைபோன்று திருப்பலி நடைபெற்றது. திருப்பலிக்கு வந்த இறைமக்கள் தேர் நிறுத்தி வைக்கப்பட்ட இடம் புகைமண்டலமாகக் காட்சியளிப்பதைக் கண்டு அங்கு சென்றபோது தேருக்குத் தீ மூட்டப்பட்டிருந்தமை தெரியவந்தது.

உடனடியாகத் தண்ணீர் அள்ளி ஊற்றப்பட்டு தீ கட்டுப்படுத்தப்பட்டதுடன், வவுனியா பொலிஸாருக்கும் தகவல் கொடுக்கப்பட்டது. இதனையடுத்து அங்கு வந்த பொலிஸார் தேர் எரிக்கப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

## அளவக்கைப் பங்கில் சர்வமத இளைஞர் ஒன்றுகூடல்

அளவக்கைப் பங்கின் எட்டு ஆலயங்களைச் சார்ந்த இளைஞர் யுவதிகளுக்கான சிறப்பு சர்வமத ஒன்றுகூடலானது கடந்த செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி காலை 10.30 மணியளவில் ஆரம்பமானது. இந்த ஒன்றுகூடலில் வாழ்வுதய உறுப்பினர்கள், இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த சகோதர உறுப்பினர்கள் எனப் பலரும் இணைந்துகொண்டனர். இந்நிகழ்வின்போது ஆசிரியர் திரு. பொஸ்கோ அவர்கள், இளைஞர் என்றால் யார்? அவர்களுக்கு உள்ள பொறுப்புக்கள் எவை? அவர்கள் கிராமத்தில் எப்படி இருக்க வேண்டும் போன்ற விடயங்களை திரை மூலம் நகைச்சுவையுடன் எடுத்து விளக்கினார். இவ்வொன்றுகூடலானது அளவக்கைப் பங்கு இளைஞர், யுவதிகளுக்கு மிகவும் பயனுள்ளதாய் அமைந்திருந்தது.

இவ்வாறன இளைஞர் ஒன்றுகூடலானது அளவக்கைப் பங்கில் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை ஒவ்வொரு ஆலயத்திலும் இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

**தகவல் - ஏ. பத்திநாதன் வதனா, வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.**

## தேவன்பிட்டி பங்கில் மறைக்கல்வி வாரமும், கௌரவிப்பு நிகழ்வும்

தேவன்பிட்டிப் பங்கில் பதில் பங்குத்தந்தையாகக் கடமைபுரியும் அருட்பணியாளர் அருட்குமரன் தலைமையில் மறைக்கல்வி வார நிகழ்வுகள் சிறப்பாக இடம்பெற்றன. கடந்த செப்ரெம்பர் 22ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை இடம்பெற்ற இவ்வாரத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. ஒவ்வொரு நாளும் மாலை 5.00 மணிக்கு மறைக்கல்வி மாணவர்களுக்கு மறையறிவு சம்மந்தமான விளையாட்டுக்கள், கலைநிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

24ஆம் திகதி புதன்கிழமை மறைக்கல்வி வாரத்தை ஒட்டி ஆலய வளாகத்தில் சிரமதானம் இடம்பெற்றது. இதில் மறையாசிரியர்கள், அன்பியப் பணியாளர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். 27ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு மாணவர்கள் மற்றும் ஆசிரியருக்கான விளையாட்டுக்கள் இடம்பெற்றன. செப்ரெம்பர் மாதம் 28ஆம் திகதி அன்று ஞாயிறு திருப்பலியானது மறையாசிரியர்கள் மற்றும் மாணவர்களால் சிறப்பிக்கப்பட்டது. அன்று மாலை 7.00 மணிக்கு கலைநிகழ்வுகள் இடம்பெற்றன.

இவ்விழாவில் தேவன்பிட்டிப் பங்கின் முதலாவது பங்குத் தந்தையும் இவ்வாண்டு குருத்துவ வாழ்வில் 25 வருட வெள்ளி விழாக் கண்டவருமான அருட்பணி. எஸ். தேவராஜா கொடுதோர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டு பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## பாலியாறு ஆரோக்கிய அன்னை திருவிழா

தேவன்பிட்டி பங்கின் பாலியாறு கிராமத்தில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை திருவிழா கடந்த செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி இடம்பெற்றது. தேவன்பிட்டிப் பங்கில் பதில் பங்குத்தந்தையாகக் கடமையாற்றும் அருட்பணி. அருட்குமரன் தலைமையில் அருட்பணி. அருள் சுதர்சன் (அ.ம.தி) அடிகளாரும் இணைந்து 7ஆம் திகதி மாலை 5.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுத்து நற்கருணை வழிபாட்டைச் சிறப்பித்தார்கள். அருட்பணி. ஸ்ரனி பிலிப் (அ.ம.தி) அடிகளாரினால் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இறுதியாக அன்னையின் ஆசிரோடு திருவிழா இனிதே நிறைவுபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீத்தாரை நினைவுகூரும் கார்த்திகை மாதம்

## இறந்தவர்களை நினைவுகூர்ந்து செபிக்கும் இனிய மாதம்

– சுபந்தி சகோதரி மேரி மார்த்தா –

கத்தோலிக்க திருச்சபையினராகிய எமக்கு கார்த்திகை மாதம் இறந்தோரை நினைவுகூரும் மாதமாகும். ஒவ்வொரு கத்தோலிக்கரும் ஒவ்வொரு நாளும் நிறைவேற்றவேண்டிய கடமையை, குறைந்தது ஒரு மாதமேனும் நிறைவேற்றும்படி திருச்சபை கூறுகிறது.

நாம் ஒவ்வொரு ஞாயிறும் அறிக்கையிடும் விசுவாசப் பிரமாணத்தில், "சரீர உத்தானத்தை விசுவசிக்கின்றேன்", "நித்திய சீவியத்தை விசுவசிக்கின்றேன்" என்று கூறுகின்றோம். "நான் போய் உங்களுக்கு ஓர் இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பிவந்து, உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன்". (யோவான் 14:2) என இயேசு கூறினார்.



இவ்வார்த்தைகளினூடாக நாம் ஒவ்வொருவரும் இறப்பின்பின் போகும் இடத்தைப்பற்றிய நமது விசுவாசம் தெளிவாகக் குறிப்பிடப்படுகின்றது. இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு வழியாக எமது இறப்பிற்கும் ஓர் அர்த்தம் கிடைக்கிறது, முடிவில்லா நித்தியவாழ்வு கிட்டுகிறது. கிறிஸ்துவின் இறப்பினால் கிறிஸ்தவனின் இறப்பிற்கு புதிய அர்த்தம் உண்டாகிறது.

இறப்பு மனிதனது இவ்வுலகப் பயணத்தின் முடிவுதான். ஆயினும் இறைவனது திட்டத்துடன் ஒத்துழைத்து, தனது வாழ்வின் இறுதி முடிவை ஒவ்வொரு மனிதனும் தீர்மானிக்க முடியும். கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின்போது நாம் அவரை எதிர்கொள்ள வேண்டியவர்கள் என்பதைத் திருச்சபை நமக்குப் போதிக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் தனது செயல்களுக்கும் விசுவாசத்திற்கும் ஏற்ப தனது இறப்பின் முடிவில் சன்மானம் வழங்கப்பெறுவான் என்றும் திருச்சபை மீண்டும் மீண்டும் போதிக்கின்றது. பணக்காரன் ஏழை இலாசரின் உவமை, நல்ல கள்வனுக்கு கிறிஸ்துவின் வார்த்தை என்பன இவற்றை உறுதிசெய்கின்றன.

மூவொரு கடவுளோடும், அன்னை மரியாவோடும், புனிதர்களோடும், வானதூதரோடும் வாழும் இம்முழுமையான வாழ்வை 'மோட்சம்' என்கிறோம். மோட்சத்தில் இருப்பது என்பது கிறிஸ்துவோடு இருப்பது ஆகும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவிலே வாழ்கின்றார்கள். இறைவனின் அருளிலும், நட்பிலும் இறப்பவர்கள், முழுமையாகத் தூய்மையாக்கப்படாத நிலையில் நிச்சயமாக நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ளுவார்கள். ஆனால் மோட்சத்தின் மகிழ்வை அடையத் தேவையான புனிதத்தை அடைந்துகொள்வதற்கு இறப்பின்பின் அவர்கள் தூய்மைப்படுத்தபட வேண்டும்.

இந்த இறுதித் தூய்மையாக்கலை 'உத்தரிப்பு ஸ்தலம்' என்று திருச்சபை அழைக்கின்றது. இது நரகத்திலிருந்து வித்தியாசமானது. இவர்களுக்காக மன்றாடும் பழக்கம் விவிலியத்தின் கூற்றை ஆதாரமாகக் கொண்டுள்ளது. (2 மக்கபே 12:45) ஆரம்பத்திலிருந்தே திருச்சபை இறந்தோரை நினைவுகூர்ந்து அவர்களுக்காகச் செபங்களை ஒப்புக்கொடுத்து வருகின்றது. சிறப்பாக அவர்கள் இறைவனின் திருமுக தரிசனத்தைக் காணவேண்டுமென திருப்பலி வேளையில் மன்றாடுகிறது. இறந்தவர்களுக்காகத் தானம் வழங்குதல், பரிபூரண பலன்களைப் பெறுதல், பாவப்பரிகார முயற்சிகள் போன்றவற்றைத் திருச்சபை ஊக்குவிக்கின்றது.


கார்த்திகை முதலாம் திகதி புனிதர்களின் திருநாளையும், 2ம் திகதி சகல ஆத்துமாக்களின் திருநாளையும் கொண்டாடுகின்றோம். நாம் திருப்பலியில் பங்குகொண்டு, கல்லறைத் தோட்டத்தைச் சந்தித்து, மெழுகுவர்த்தி ஏற்றி, செபம் செய்து, தானமும் கொடுக்கிறோம். கத்தோலிக்கராகிய நாம் எந்தநாளும் செய்யவேண்டிய கடமையை நினைவுறுத்த திருச்சபை எமக்கு விடேசமாக ஒரு மாதத்தையே தந்துள்ளது. உத்தரிக்கிற ஸ்தல ஆத்துமாக்களுக்கும், விஷேசமாக யாரும் நினையாத ஆத்துமாக்களுக்கும் எமது கடமையை நிறைவேற்ற, மிகச்சிறந்த வழி கல்வாரித் திருப்பலியில் பங்கு கொண்டு ஒப்புக்கொடுப்பதாகும். எமது பாவம் போக்கும் செம்மறியின் பலியைவிடச் சிறந்தது ஒன்றுமில்லை. தானதர்மம், செபம் (பாவப்பரிகாரச் செபம்) இவைகள்வழி இறந்தோரை நினைவுகூரும் மாதத்தை அர்த்தமுள்ளதாக்கிப் பலனடைவோம்.

## சாவைச் சந்திக்க நாமும் ஆயத்தமாய் இருப்போம்!

– அருட்சகோதரி கீதலோஜினி –

"சாவின் மூலம் வாழ்வு மாறுபடுகிறதே தவிர அழிக்கப்படுவதில்லை". உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கைகொள்பவர் எவரும் இறப்பிலும் வாழ்வார்". இறைமகன் கிறிஸ்துவின் இந்த உயிரூட்டமான ஆறுதல்தரும் அமுத வாக்குகள் மனித வாழ்வுக்கு நிறைவான நம்பிக்கையைத் தருகின்றன.

இறைத்திட்டப்படி அனைத்துப் படைப்புகளும் ஒரு குறிப்பிட்ட காலம் இவ்வுலகில் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும், சுதந்திரமாகவும் வாழ்ந்து பின்பு முடிவு காணவேண்டும். முடிவு ஒரு புதிய விடியலாக வாழ்விற்குரிய தேடலாகும். அதேவேளை மனிதநேயப் பண்புகள் விதைக்கப்படவும், உண்மை, நீதி, தார்மீகம் செழிப்புற்று பலன் தரவும், நற்கனிகள் கொடுக்கும் நற்சீலர்களாக வாழ அழைப்புகள் விடுக்கப்பட்டு, அதற்கமைவாக அவகாசங்களும், அருட்கொடைகளும் வழங்கப்படுகின்றன.



படைப்பின் நியதிகளின் பிரகாரம் விதைப்பு, அறுவடை, களஞ்சியம் இடம்பெறுவதுபோல், பிறப்பு, வளர்ப்பு, வாழ்வு, இறப்பு, தேர்வு நடைபெறுகிறது. இறுதியில் இறைவனோடு இணைதல், தகுதியில் தவறினால் எரிநரக நெருப்பில் தள்ளப்படுதல் நிஜமாகிறது.

இயேசுவின் பொன்மொழிகளில் இதுவும் ஒன்று. உங்களின் தலைமுடி எல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. இறுதியில் கணக்குக் கேட்கப்படும். வாழுகின்ற மக்கள் நவம்பர் மாதத்தில், வாழ்ந்து முடித்த பாச உறவுகளுக்கான இறுதித் தேர்வில், நிலை வாழ்வின் தகுதிபெற இறைவனிடம் இரந்து வேண்டுதல் செய்யும் இனிய காலமாகும். இக்காலத்தில் எமது பரித்தியாகங்கள், நற்செயல்கள் எமது வாழ்வுச் சான்றிதழ்கள் காணிக்கையாக்கப்படவேண்டியது அவசியமாகிறது.

அதேவேளை இக்காலம், எமது வாழ்விற்கு விழிப்புணர்வூட்டும் காலமாகவும் அருளப்படுகிறது. சாவு எந்த நேரத்திலும், எந்த வடிவத்திலும், எந்தப் பருவ நிலையிலும் வரலாம். நாம்தான் விழிப்பாக இருக்க வேண்டும். மணமகனை எதிர்கொள்ளும் பத்துக் கன்னியர்போல, திருடன் எந்தச் சமயத்தில் கன்னமிடுவான் எனக் காத்திருக்கும் வீட்டு எஜமான்போல இறைவனின் அழைப்புக்குச் செவிமெடுக்கத் தகுதி உணர்வோடு, தயார் நிலையில் இருக்கவேண்டிய அவசியத்தை எமக்கு உள்ளுணர்த்தும் காலமாக இம்மாதம் அமைந்துள்ளது.

நாம் விசுவசிக்கும் கடவுள், வாழ்வோரின் கடவுளே தவிர, இறந்தோரின் கடவுள் அல்ல என்பதை இறைவார்த்தை தெளிவுபடுத்துகின்றது. இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் ஆற்றல்களைக் கொடுக்கின்றார். அவற்றைப் பயன்படுத்தி வாழ்வின் பயணத்தை, இலக்கை நோக்கிச் செலுத்த வேண்டும். வாழ்வு சாவின் மூலம் மாற்றமடையும்போது நிலைவாழ்விற்குரிய தகுதியைப் பெறமுடியும். கோதுமைமணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒழிய உயிரைப் பெறமுடியாது. மனித வாழ்விலும் இதே நடைமுறைதான். அழிவில்லாமல் ஆக்கல் உருவாக முடியாது. சிலுவை இன்றி மீட்பு இல்லை.

ஏனைய சமயநெறிகள் கூறுவதுபோல் மறுபிறவி, கர்மவினை கிறிஸ்தவ சமய நெறியில் இல்லை. இறைத்திட்டப்படி பிறப்பு, வாழ்வு, இறப்பு, தீர்ப்பு, நிலைவாழ்வு அல்லது எரிநரகம் என்பவையே உண்டு. இவற்றில் எமது வாழ்வியல் சான்று பிரதானமாக அமைகிறது. எல்லாம் முடிந்தபின் சுடலை ஞானம் செல்லுபடியற்றதாகிவிடும்.

எனவே நாம் வாழும்போது படிப்படியாக நமது தகுதியை உறுதிப்படுத்திக்கொள்வோம். இறப்பைச் சந்திக்கத் தயாராக இருப்போம். இழந்தபின் எதையும் புதிப்பிக்கவோ, தயாரிக்கவோ முடியாமல் போய்விடும். விழிப்பாக இருந்து செழிப்பாக வாழ்ந்து சாவு மூலம் நிலைவாழ்வைப் பெற முயற்சிப்போம்.

நிலைவாழ்வு தருகின்ற இறைவார்த்தைகளைத் தினமும் ஆர்வத்துடன் வாசித்து, வாழ்வாக்குவோம். அதன் ஒளியில் எமது வாழ்வை மாற்றுவோம். ஏனைய மக்களை அணுகி உயிரோடு இருக்கும்போதே அவர்கள் தம்மை இறப்பிற்கு ஆயத்தம்செய்யும்படி ஊக்குவிப்போம். இறந்தபின் எமது பரிந்துரைகள் முழுமைகாண முடியாமல் போகலாம். வாழுகின்றபோது உயிராற்றலுடன் வாழுவோம். ஆழமாகச் சிந்திப்போம், அருள்வாழ்வில் வளர்வோம்.

## உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்களுக்காக நாம் ஏன் செபிக்க வேண்டும்?

நாம் அயலாருக்கு அன்பு செய்யவும் அவர்களுக்கு உதவவும் கடமைப்பட்டுள்ளோம். அவர்களது தேவை பெரிதானால், அவசரமாக அவர்களுக்கு உதவவேண்டிய எமது கடமையும் இரட்டிப்பாகிறது. பிறருக்கு உதவுவது ஒரு சலுகையல்ல, செய்யலாம் அல்லது செய்யாமலும் இருக்கலாம் என்ற நிலையல்ல, மாறாக அது நமது கடமை. நாம் கட்டாயமாக உதவிசெய்ய விரைய வேண்டும்.

ஒரு ஏழை உயிர்வாழத் தேவையான உணவையோ, உறைவிடத்தையோ மறுப்போமானால் அது காட்டுமிராண்டித்தனமான பாதகமாகும். நீரில் மூழ்கிக்கொண்டிருக்கும் மனிதனைப் பார்த்தும் பாராமல் போவது கொடூர செயலாகும். எங்களுக்கு இயலுமானபோதும், இலகுவானபோதும் உதவிடுவது மட்டுமல்லாமல், பரித்தியாகம் செய்து உதவி தேவைப்படுவோருக்கு உதவுவதே மிகவும் முக்கியமானதும் கட்டாயமானதுமாகும்.

உத்தரிக்குமிடத்தில் இருக்கும் ஆன்மாக்களைவிட எமது உதவி அவசரமாகத் தேவைப்படுவோர் இருக்க முடியுமா? இவ்வுலக வறுமையையும், உயர்வின்மையையும், கஷ்ட துன்பங்களையும் உத்தரிப்பு ஸ்தலத்துத் துன்பங்களோடு ஒப்பிடமுடியுமா? ஆனால் பலர் இவ்வுலகத் துன்பங்களுக்கு உதவிட முனைந்தாலும் உத்தரிப்பு ஸ்தல ஆன்மாக்களுக்கு உதவிட முன்வருவதில்லை. அவ்வான்மாக்களில் சிலர் எமது நண்பர்களும் குடும்பத்தாருமாய்க்கூட இருக்க வாய்ப்புண்டு.



அவர்களுக்கு உதவுவதைக் கடவுள் விரும்புகிறார். எது எப்படி இருந்தாலும் அவர்கள் கடவுளின் நண்பர்கள். அவர் அவர்களுக்கு உதவிட ஆசையாய் இருக்கிறார். அவர் அவர்களைப் பரலோக வீட்டிற்கு அழைக்கவும் ஆவலாய் இருக்கிறார். அவர்களால் அவரை மீண்டும் நோகப்படுத்த முடியாது. அவர்கள் அவரோடு முடிவில்லாத காலம் வரை வாழ ஆயத்தம் செய்பவர்கள். ஆனாலும் அவரது நீதியின்முன் அவர்களது பாவங்களுக்காகப் பரிகாரம் செய்யப்பட வேண்டும். அவரது பராமரிப்பின் பொருட்டு அவ்வான்மாக்களுக்கு உதவும் வரத்தை எமக்கு அருளியுள்ளார். அவர்களை விடுவிக்கும் சக்தியையும், அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் வழியையும் எம்மிடம் ஒப்படைத்துள்ளார். நாம் அவர்களுக்கு உதவுவது அவரது திட்டம். அதை அவர் விரும்புகிறார். அவ்வாறு செயற்படும்போது நமக்கே நாம் உதவுவதாக நம்மை மேலும் ஆசீர்வதிக்கிறார்.

நாம் அவர்களுக்கு உதவுவதை தேவதாயார் விரும்புகிறார். மரியன்னை உத்தரிக்கும் இடத்திலுள்ள ஆன்மாக்களைத் தேற்றுவதற்குத் துடிப்பதைப்போல எந்தவொரு இவ்வுலக அன்னையும் தம் இறக்கும் பிள்ளைகளை தேற்ற முன்வருவதில்லை என்றால் மிகையாகாது. ஏனெனில் அவர்களை பரலோக வீட்டிற்குக் கொண்டுசேர்ப்பதில் அவர் பெருமகிழ்ச்சி அடைகிறார். மேலும் ஒரு ஆன்மாவையாவது உத்தரிக்கும் இடத்திலிருந்து மீட்கும்போது சொல்லிலடங்கா மகிழ்ச்சியை மாதா பெறுகிறார். அத்தூய ஆன்மாக்கள் ஆயிரம் மடங்காக எமக்கு திருப்திதரும்.

உண்மையிலேயே மீட்கப்பட்ட அத்தூய ஆன்மாக்களின் மகிழ்ச்சியையும் நன்றிக்கடனையும் வார்த்தையில் கூறமுடியாது. அதனால் அவர்களுக்கு உதவியவர்களுக்கு இறைவன் மிகப்பெரிய காரியங்களைச் செய்ய இறைவனிடம் அவர்கள் பரிந்து பேசுவர் என்பதை மனதிற்கொள்ள வேண்டும்.

பொலஞ்ஞாவின் புனித கத்தரீன் பின்வருமாறு கூறுகிறார், "நான் புனிதர்களிடமிருந்து பெரிய உதவிகளைப் பெற்றபோதும் அதைவிடப் பெரிய உதவிகளைத் தூய ஆன்மாக்களின் மூலமாகப் பெற்றுக்கொண்டேன்" என்கிறார்.

உத்தரிப்பு ஆக்கினையிலிருந்து மீண்டவர்கள் பரலோக முக தரிசனத்தைப் பெற்றுக்கொண்டதும் மறக்காமல் எல்லை கடந்த விதமாய்த் தமக்கு உதவியவர்களுக்குத் தமது நன்றிக்கடனைச் செலுத்துவர். கடவுளின் சிம்மாசனத்தின்முன் தெண்டனிட்டு வணங்கும்போதெல்லாம் தமக்கு உதவியவர்களையும் மறக்காமல் நினைவுகூருகின்றனர். அவர்களது செபங்களால் தமது நண்பர்களை ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்து, தீமைகளிலிருந்தும் விடுவிக்கின்றனர். மேலும் நாமும் அவர்களோடு பரலோக வீட்டை அடையுமளவும் எமக்காகப் பரிந்து பேசுவதை அவர்கள் நிறுத்திவிடுவதில்லை.

கத்தோலிக்கர் இந்த உண்மையை நன்கு உணர்ந்தால் உத்தரிப்பு ஸ்தல தூய ஆன்மாக்களுக்காக உதவிடுவதில், செபிப்பதில் கருத்தாய் இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# ஜனாதிபதியும் முதலமைச்சரும் சந்திக்காமை மனவருத்தத்தை ஏற்படுத்துகின்ற செயலாகும்

### பிரித்தானியப் பிரதித் தூதவரிடம் யாழ் ஆயர் எடுத்துரைப்பு


ஜனாதிபதியை முதலமைச்சர் சந்திக்காமையும் ஜனாதிபதியை முதலமைச்சர் வடக்கில் வரவேற்காமையும் எமக்கு மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது என யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரித்தானியப் பிரதித் தூதுவர் லோரா டேவிட்ஸிடம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பிரித்தானியப் பிரதித் தூதுவர் லோரா டேவிட்ஸ் யாழ் ஆயரை ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியபொழுதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இச்சந்திப்புத் தொடர்பாக யாழ் ஆயர் கருத்துத் தெரிவிக்கையில்,

மக்களுக்கு காணி உத்தரவுப் பத்திரங்களை வழங்கியது மட்டுமன்றி வடக்குத் தெற்கு இணைப்புப் பாலமான யாழ்தேவி புகையிரத சேவையையும் 24 வருடங்களின் பின்னர் ஜனாதிபதி ஆரம்பித்துவைத்துள்ளார்.

இதேபோல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வடக்கிற்கு விஜயம் செய்து மக்களுக்குப் பல சேவைகளை மேற்கொண்டுள்ளார். அதேபோல் பாடசாலைகளின் அபிவிருத்திக்காக பல உதவிகளையும் செய்துள்ளார்.


எனினும் வடக்கு விஜயத்தின்பொழுது முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜனாதிபதியைப் போய்ப் பார்க்கவில்லை, சென்று வரவேற்கவில்லை. இதனால் நல்லிணக்கம் ஏற்படவில்லை. முதலமைச்சரும் ஜனாதிபதியும் சந்தித்திருந்தால் மேலும்



பயனுள்ள செயற்பாடாக அமைந்திருக்கும். இது ஒரு மனவருத்தமளிக்கும் விடயமாகும் எனத் தூதுவரிடம் எடுத்துக்கூறியுள்ளோம். ஆயினும் இராணுவப் பிரசன்னம் இன்னமும் இங்கு இருக்கின்றது. எமது மக்களின் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி அணுகியதாகத் தெரியவில்லை எனவும் குறித்த தூதுவரிடம் தெரிவித்துள்ளோம் என்றார்.

## பாப்பரசரின் இலங்கை விஜயத்தின்போது தேர்தலைத் தவிர்க்க வேண்டும்

### அரசை வலியுறுத்துகிறார் பதுளை ஆயர்



பாப்பரசரின் இலங்கை விஜயத்தின்போது இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதாக பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு வின்சன்ற் பெனாண்டோ ஆண்டகை குறிப்பிட்டார்.

பதுளை புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற வருடாந்த திருவிழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

பதுளை ஆயர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது, பாப்பரசரின் இலங்கை விஜயத்தின்போது இலங்கையில் தேர்தலொன்று நடைபெறுமேயானால் அப்புனித விஜயத்திற்கு மாசு ஏற்பட்டுவிடும். பாப்பரசரின் இலங்கை விஜயம் நிறைவுபெறும்வரை எவ்வகையான தேர்தலும் இலங்கையில் நடத்தப்படக்கூடாது. எந்தவொரு நாட்டிலும் தேர்தலுக்கு உத்தியோகபூர்வமாக தினமொன்று குறிப்பிடப்படுமானால் அக்காலப் பகுதியில் அந்நாட்டுக்கான பாப்பரசரின் புனித விஜயம் இரத்துச் செய்யப்படும்.

அதுபோன்று, இலங்கையிலும் பாப்பரசரின் இலங்கைக்கான விஜயத்தின் காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசு எதிர்பார்ப்பதாக ஊடகங்கள் மூலம் அறியமுடிகின்றது. அரசு இந்த விடயத்தை உத்தியோகபூர்வமாக அறிவிக்கும்பட்சத்தில் இலங்கை ஆயர்கள் மன்றம் அரசுக்குத் தனது நிலைப்பாட்டினை முன்வைக்கும்.

தேர்தலுக்குத் திகதி குறிப்பிடப்படும் காலப்பகுதியில் பாப்பரசரின் விஜயம் இடம்பெறுமேயானால் அவ்விஜயத்திற்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்படவே செய்யும். இந்த விடயத்தை இலங்கை மக்கள் அனுபவ ரீதியில் உணர்ந்திருக்கின்றனர். இது குறித்து மாற்றுக் கருத்துக்களுக்கு இடமேயில்லை.

பாப்பரசரின் புனித விஜயம் அரசியல் மயமாகிவிடக்கூடாது. இதனை இலங்கை ஆயர் மன்றம் அரசுக்குத் தெளிவுபடுத்தியுள்ளது. பாப்பரசரின் புனித விஜயம் நிறைவுபெற்ற பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கான தினம் பிரகடனப்படுத்தப்படுவதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை. அவ்வகையிலேயே இடம்பெறல் வேண்டுமென்று பிரார்த்தனையிலும் ஈடுபடுகின்றோம் என்றார்.

## பாப்பரசரின் விஜயம் ஜனவரியில் நிச்சயம்

### ஜனாதிபதியின் பேச்சாளர்

பாப்பரசர் இலங்கை விஜயத்தை ஒத்திவைத்துள்ளார் என்பது தொடர்பில் இதுவரையில் வத்திக்கான் உத்தியோகபூர்வமான எந்தவித அறிவித்தலையும் வெளியிடவில்லை. நிச்சயம் ஜனவரியில் பாப்பரசரின் விஜயம் இடம்பெறுமென்று ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமரநாயக்க தெரிவித்தார்.

நவம்பர் மாதம் 19ஆம் திகதியுடன் ஜனாதிபதியின் 4 வருட பதவிக்காலம் பூரணமடைகின்றது. இதன் பின்னரே தேர்தல் அறிவிப்பு வெளியாகுமென்றும் அவர் தெரிவித்தார். இது தொடர்பாக ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹன் சமரநாயக்க மேலும் தெரிவிக்கையில்:

பாப்பரசர் ஜனவரி மாதம் இலங்கைக்கு விஜயம் செய்வார். இதற்கான அழைப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த மாதம் வத்திக்கானுக்கு விஜயம் செய்து கையளித்தார். இந்த அழைப்பை உத்தியோகபூர்வமாக வத்திக்கான் ஏற்றுக்கொண்டது.

அதற்கமைய பாப்பரசர் ஜனவரி மாதம் இங்கு விஜயம் செய்வார். சில ஊடகங்கள் பாப்பரசர் இங்கு வரமாட்டாரென ஊகங்கள் அடிப்படையில் செய்திகள் வெளியிட்டுள்ளன. ஆனால், இதுவரையில் பாப்பரசர் இலங்கை வரமாட்டார் என்பது தொடர்பாக எவ்விதமான உத்தியோகபூர்வமான அறிவிப்பையும் வத்திக்கான் வெளியிடவில்லை. எனவே, பத்திரிகைச் செய்திகள் தொடர்பில் எதனையும் கூறமுடியாது.

இதேவேளை, எதிர்வரும் நவம்பர் 19ஆம் திகதியுடன் ஜனாதிபதி பதவியேற்று 4 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இதன் பின்னரே ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியாகும். அது எப்போது எனக்கூற முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

## கோவா – பங்களூர் – சென்னை திருப்பயணம்



1552ஆம் ஆண்டில் இறந்த புனித பிரான்சிஸ் சவேரியாரின் அழிந்துபோகாத உடல் கோவாவின் புராதன பேராலயத்தில் பாதுகாக்கப்படுகிறது. அழிந்துபோகாத இவ்வுடல் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டுமே இறைமக்களின் தரிசனத்திற்காகவும், வணக்கத்திற்காகவும் வைக்கப்படுகிறது. இவ்வாண்டு கார்த்திகை மாதம் 22ஆம் திகதி தொடக்கம் மார்கழி மாதம் வரை புனித சவேரியாரின் அழியாத திருவுடலைத் தரிசிக்க கோவா பேராயர் அனுமதித்துள்ளார். எனவே 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மட்டும் கிடைக்கும் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்வதற்காக, இலங்கைத் தமிழ் இறைமக்களுக்காக யாழ்ப்பாண மறை மாவட்ட திருப்பயண செயற்குழுவினால் ஒரு திருப்பயணம் ஒழுங்குசெய்யப்படுகிறது. மேலும் 14ம் திகதி தை மாதம் 2015ல் இலங்கையில் புனிதர் நிலைக்கு உயர்த்தப்படவிருக்கும் இலங்கையின் திருத்தூதரான அருளாளர் யோசவ்வாஸ் பிறந்து, வளர்ந்த ஊர்களும் கோவாவிலேயே உள்ளன. இவ்வூர்களையும் தரிசித்து புராதன கோவாவின் புனித இடங்களில் திருப்பலி ஒப்புக்கொடுத்து செபிக்க அரிய வாய்ப்பு. அத்துடன் பங்களூர் விவேக் நகரில் அருள்பாலிக்கும் குழந்தை இயேவின் திருத்தல யாத்திரையும், சென்னை மாநகரின் புனித தோமையார் திருத்தல யாத்திரைகளும் இதில் உள்ளடங்குகின்றன. வருகிற மார்கழி மாதம் 11ம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு 19ம் திகதி யாழ்ப்பாணத்தை வந்தடையும் வரையான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அனைத்து செலவுகளும் உள்ளடங்கலாக ஒருவருக்கு 85,400/- மட்டுமே. இத்திருப்பயணத்தில் பங்குகொள்ள விரும்புகின்றவர்கள் உடனடியாக உங்கள் கடவுச்சீட்டுக்களுடன் உங்கள் பெயர்களைப் பதிவுசெய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் பங்குத்தந்தையர்கள் ஊடாகவும் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு:
அருட்திரு யோ. போல் றொகான் (தொடர்பு: 0773792255)
அருட்திரு பே. தயாபரன் (தொடர்பு: 0777495917)
திருப்பயண செயற்குழு, யாழ். மறைமாவட்டம்

## பாப்பரசரின் வருகையை பிற்போடக் கோரிக்கை

பாப்பரசரின் இலங்கைப் பயணத்துக்கு முன்னர் அவசர அவசரமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசு திட்டமிட்டுள்ளதால், தமது வருகையைப் பிற்போடுமாறு பாப்பரசர் பிரான்ஸிஸிடம் 'நீதியான சமூகத்துக்கான சட்டத்தரணிகள் சங்கம்' கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது. பாப்பரசரின் வருகைக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதனூடாக இலங்கையரின் ஜனநாயக உரிமை மீறப்படும் என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## யாழ் மறைக்கல்வி நிலையத்தில் கண்காட்சி

யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் ஒக்ரோபர் மாதம் 4 - 7ஆம் திகதி வரை திருவிவிலியக் கண்காட்சி இடம்பெற்றது. "இறையாட்சி உங்களிடையே" எனும் தொனிப்பொருளை மையமாகக்கொண்டு இக்கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கிறிஸ்துவின் தலைமைத்துவத்தை திருத்தந்தையில் காண்கிறோம்!

### புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி ஆரம்ப நாளில் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

எமது திருத்தந்தை பிரான்சிஸ் நாம் கண்களால் காணமுடியாத எமது திருச்சபையின் தலைவர் இயேசுக்கிறிஸ்துவை பிரதிநிதிப்படுத்தும் காணக்கூடிய தலைவர் என யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயம் ஆண்டகை குறிப்பிட்டார்.

கடந்த ஒக்டோபர் மாதம் 1ம் திகதி புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் புதிய கல்வியாண்டு ஆரம்பமானபோது அங்கு உரையாற்றியபோதே யாழ் ஆயர் இவ்வாறு தெரிவித்தார்.

தனது திருச்சபையை வழிநடத்த தனது பிரதிநிதியாக கிறிஸ்து திருத்தந்தையர்களை நியமிக்கிறார் என்றும் "நீ பாறை இப்பாறையின்மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்" என்று கூறி புனித பேதுருவை முதலாவது திருத்தந்தையாக நியமித்தகணம்தொட்டு இன்றுவரை கிறிஸ்து இச்செயலைச் செய்துவருகிறார் என்றும் ஆயர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், கிறிஸ்து தனது மக்களைத் திருத்தந்தை வழியாகச் சந்திக்கிறார், அவர்களுக்குக் கூறவேண்டிய அறிவுரைகளை திருந்தந்தை வழியாகக் கூறுகிறார், தனது அன்பையும் பாரமரிப்பையும், பாதுகாப்பையும் திருத்தந்தை ஊடாக மக்களுக்கு வழங்குகிறார் என்றும் ஆயர் தெரிவித்தார்.

இவ்வகையில் எமது திருத்தந்தை பிரான்சிஸ் நாம் கண்களால் காணமுடியாத கிறிஸ்துவைப் பிரதிநிதிப்படுத்தி எம்மைச் சந்திக்க வருகிறார் என்பதைச் சுட்டிக்காட்டிய ஆயர், திருத்தந்தையின் இலங்கை விஜயத்தின்போது நாம் எமது உண்மையான தலைவர் கிறிஸ்துவைக் காணவும், அவர் குரலைக் கேட்கவும், அவர் அன்பை உணர்ந்துகொள்ளவும் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.


பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். - மன்னா நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் ஞாயிறு மற்றும் பொதுநிலையினர் பேரவை ஆண்டு விழா ஆகியவற்றை முன்னிட்டு

# மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் ஆணைக்குழு இயக்குனரின் செய்தி



2011ம் ஆண்டிலே மன்னார் மறைமாவட்டப் பொதுநிலையினர் பேரவைக்கு புத்தூக்கம் அளிக்கப்பட்டது. அது உருவாக்கப்பட்டு, மறுமலர்ச்சி கண்டு நான்கு ஆண்டுகள் நிறைவுகாணும் இவ்வேளையில் பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்தந்தை எஸ். கே. தேவராஜ் அவர்களின் வணக்கங்களும் வாழ்த்துக்களும்!

பொதுநிலையினரின் பொற்காலம் என வர்ணிக்கப்படும் இக்காலப் பகுதியில், திருத்தந்தையின் பொதுநிலையினர் ஆணையம் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் பொதுநிலையினர் பேரவை தேவை என்று பணித்திருந்ததைக் கருத்திற்கொண்டு, பொதுநிலையினர் உருவாக்கத்தை மையமாகக்கொண்டு, காலத்திற்குக் காலம் எம் மறைமாவட்டத்திலே கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், போட்டிகள், பெருவிழாக்கள், கலைநிகழ்வுகள் போன்றவற்றை நாம் நடாத்தி விழிப்புணர்வை ஏற்படுத்த முயற்சித்து வருகின்றோம்.

இந்நோக்கத்திற்காகத் திருவழிபாட்டு ஆண்டின் இறுதி ஞாயிறாகிய கிறிஸ்து அரசர் பெருவிழா ஞாயிறினை ஒவ்வொரு பங்கிலும் 'பொதுநிலையினர் ஞாயிறு' என்று கெண்டாட வேண்டுமென, 2011ம் ஆண்டிலிருந்து எம் மன்னார் மறைமாவட்ட ஆயரும் மன்னார் மறைமாவட்டப் பொதுநிலையினர் பேரவையின் போசகருமான அதிவந்தனைக்குரிய கலாநிதி இராயப்பு ஜோசேப் ஆண்டகை அறிவித்தார். ஒவ்வொரு மறைக்கோட்டத்திலும், ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கிறிஸ்து அரசர் திருவிழாவோடு சேர்த்து மிகவும் சிறப்பானதாக பொதுநிலையினர் பேரவையின் ஆண்டு விழாவின் வழியாக விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றோம்.

ஆண்டுமுழுவதும் பொதுநிலையினர் பேரவையின் சகல நிகழ்வுகளுக்காகவும், பொதுநிலையினர் ஞாயிறு காணிக்கையினை பொதுநிலையினர் மறைமாவட்ட நிதியாளர் ஊடாக, பேரவையினர் பேரவைக்கு வழங்கி உதவுமாறு எம் ஆயர் அவர்கள் அறிவித்தற்கிணங்க, பல பங்குகள் எமக்கு உதவியதை நாம் பெருமகிழ்வோடு ஏற்பதோடு தங்களுக்கு எமது நன்றிகளையும் கூறிக்கொள்கிறோம். பொதுநிலையினர் உருவாக்கத்தை மையமாகக்கொண்டு தொடர்ந்தும் பெருமனதுடன் உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்தவகையிலே, கடந்த ஆண்டுகளில் முருங்கன், மடு மறைக்கோட்டங்களிலே இப்பெருவிழாவைச் சிறப்பித்த, பொதுநிலையினர் பேரவை, இவ்வாண்டு மன்னார் மறைக்கோட்டத்தில் பேசாலைப் பங்கிலே இவ்விழாவைக் கிறிஸ்து அரசர் ஞாயிறு பெருவிழா அன்று (23-11-2014) முன்னெடுக்கவுள்ளது என்பதனை அறியத்தருகின்றோம். மறைமாவட்டப் பொதுநிலையினர் பேரவைப் பங்குப் பிரதிநிதிகளுடன் பேசாலைப் பங்கு மக்களும் இணைந்து, பொதுநிலையினர் ஞாயிறு பெருவிழாத் திருப்பலி இடம்பெறவுள்ளது. அத்துடன் "மனித மாண்பும் குடும்பமும்" எனும் இவ்வாண்டின் கருப்பொருளை மையமாகக்கொண்டு, "இன்று எமது குடும்பங்களில் மனித மாண்பின் வளர்ச்சியும் தளர்ச்சியும்" என்ற தலைப்பில் வில்லுப்பாட்டுப் போட்டியைச் சிறப்பு நிகழ்வாக மேடையேற்ற ஏற்பாடு செய்துள்ளோம்.

திருச்சபையின் உயிர் அணுக்களாக, அடிப்படை வேர்களாக, திருச்சபையைத் தாங்கிநிற்கும் தூண்களாக, திருச்சபையைப் பாதுகாக்கும் கேடயங்களாக உள்ளவர்கள் பொதுநிலையினரே என்றால் அது மிகையாகாது.

பொதுநிலையினரே வளமும் வலிமையுமிக்க திருச்சபைக்கு அடித்தளமாகவும் அமைவர் என்ற சிந்தனைத் தெளிவு வேண்டும். பொதுநிலையினர் உலகில் உப்பாக, குன்றின்மேலிட்ட தீபங்களாக, நற்கனி கொடுக்கும் மரங்களாக, வாழ்க்கையை அமைத்துக்கொள்ளத் திருச்சபையானது திட்டமிட்டு செயல்படும்பொழுதுதான் விண்ணகத் தந்தை பெருமைப்படுத்தப்படுவார். திருச்சபை வளரும்: இறையரசு ஒளிரும்.

பொதுநிலையினர் முதன்முதல் நற்செய்தியை அறிவிக்கவேண்டிய இடம் தங்கள் குடும்பமே. கணவர், மனைவிக்கும், மனைவி கணவருக்கும், பெற்றோர் பிள்ளைகளுக்கும், பிள்ளைகள் பெற்றோருக்கும் மறைத்தூதுப் பணியாற்றிட வேண்டும். இப்பணி மனமாற்றத்திற்காகவும் அதனால் பிறக்கும் இறையாட்சிக்காகவும் நற்செய்தி அறிவிக்கும் பணியாகும். அதற்கு உகந்த முதல் இடம் குடும்பமே. பெற்றோருக்கான சங்க அறிவுரையும் இதுவே: "மணமக்கள் தாயாகவும் தந்தையாகவும் இருக்கும் மேன்மையையும் பணியையும் கொண்டிருப்பதால், முதல் முதல் அவர்களைச் சார்ந்து கல்வி கற்பிக்கும் கடமையைச் சிறப்பாக மறைக்கல்வி புகட்டும் கடமையைக் கருத்துடன் நிறைவேற்றுவார்களாக" அதேசங்கம், "குடும்பத்தின் உயிருள்ள உறுப்பினர்கள் என்ற முறையில் குழந்தைகள் தங்கள் பெற்றோர் புனிதமடையத் தங்களுக்குரிய வகையில் உதவுகிறார்கள். நன்றி உள்ளத்தோடும் அன்புடனும் நம்பிக்கையுடனும் முதுமையின் தனிமையிலும் பிள்ளைகளுக்கு ஏற்ற முறையில் துணைபுரிவார்கள்" என்ற அறிவுரையைக் குழந்தைகளுக்கும் வழங்குகிறது.

பொதுநிலையினர் தங்கள் குடும்பத்தையும் தாண்டி ஒரு குறிப்பிட்ட இடம், சமூகம், நாடு, உலகம் என்னும் பல்வேறு தளங்களிலும் பிரசன்னமாகி, அங்கு அவர்கள் மறைத்தூதுப் பணியாற்ற வேண்டும். அப்படிப்பட்ட பொதுநிலையினரின் மறைத்தூதுப் பணி பொருளாதார, அரசியல், சமூக, சமய, கல்வி மற்றும் நல்வாழ்வு என்ற மனித வாழ்வின் பல்வேறு சூழமைவுகளைப் பிரதிபலித்து சமூக மாற்றத்திற்கு இட்டுச் செல்லவேண்டும். இதையே இரண்டாம் வத்திக்கான் சங்கம் "சமுதாய, பொருளாதாரச் செயல்களைத் தக்கமுறையில் ஒழுங்குபடுத்தக் கிறிஸ்தவ விசுவாசிகள் பாடுபட வேண்டும்" எனக் கூறுகின்றது. மேலும் இப்பணித்தளத்தில் கிறிஸ்தவ விசுவாசிகள் தனி, பொது நிறுவனங்கள், அரசு, இயக்கங்கள், பல்வேறு கிறிஸ்தவ, கிறிஸ்தவரல்லாத சமூகங்கள் ஆகியவை மேற்கொள்ளும் முயற்சிகளோடு தாங்களும் முன்மதியோடு இணைந்து செயல்பட வேண்டும்" எனவும் எடுத்தியம்புகிறது.

சமூக மாற்றத்திற்கான பொதுநிலையினரின் மறைத்தூதுப்பணி இறையாட்சிக்கு ஒத்தவண்ணம் அமைந்திட வேண்டும். அந்தச் சமூக மாற்றம்,

**சமய வாழ்வில்:** சாவிலிருந்து வாழ்விற்கும், சடங்கிலிருந்து உண்மைக்கும், பயத்திலிருந்து துணிச்சலுக்கும், சந்தேகத்திலிருந்து நம்பிக்கைக்கும், பாவத்திலிருந்து புனிதத்திற்கும் அழைத்துச் செல்லவேண்டும்.

**அரசியல் வாழ்வில்:** அறியாமையிலிருந்து விழிப்புணர்விற்கும், அதிகாரத்திலிருந்து பணிக்கும், குடி மயக்கத்திலிருந்து தெளிவிற்கும், ஆதிக்கத்திலிருந்து அன்பிற்கும், வெறும் வார்த்தையிலிருந்து செயலுக்கும், ஆணவத்திலிருந்து கீழ்படிதலுக்கும் அழைத்துச் செல்லவேண்டும்.

**பொருளாதார வாழ்வில்:** பசியிலிருந்து நிறைவிற்கும், ஏழ்மையிலிருந்து வளமைக்கும், பகட்டிலிருந்து எளிமைக்கும், சேர்த்துவைப்பதிலிருந்து பகிர்தலுக்கும், அநீதியிலிருந்து நீதிக்கும் அழைத்துச் செல்ல வேண்டும்.

**சமுதாய வாழ்வில்:** சாதியிலிருந்து சமத்துவத்திற்கும், பிரிவிலிருந்து ஒற்றுமைக்கும், சுயநலத்திலிருந்து பிறர் நலத்திற்கும், வெறுப்புகளிலிருந்து மன்னிப்பிற்கும், குறைவுகளிலிருந்து நிறைவிற்கும் அழைத்துச் செல்லவேண்டும்.

**கல்வி மற்றும் நல்வாழ்வில்:** அறியாமை எனும் இருளிலிருந்து அறிவெனும் ஒளிக்கும், நோயிலிருந்து நல்வாழ்வுக்கும் அழைத்துச்செல்ல வேண்டும்.

திருச்சபையின் வலிமைக்கு, பொதுநிலையினர் எண்ணிக்கையில் மட்டுமல்ல, விழிப்புணர்வும் எழுச்சியும் பெற்ற பொதுநிலையினராக செயல்பட வேண்டும். சிந்தனைத்திறனும், அறிவுத்தெளிவும், திட்டமிடும் அறிவாற்றலும், செயல் ஊக்கமும் கொண்டு பணியாற்றும் தன்னலமற்ற, அர்ப்பண உணர்வு கொண்ட பொதுநிலையினர் தேவை. அத்தகைய பொதுநிலையினரை உருவாக்கி வைத்துக்கொள்ளவேண்டிய பொறுப்பு திருச்சபை சார்ந்ததாகும். அத்தகைய உருவாக்கத்தின் ஒரு செயல்பாடே பொதுநிலையினர் பேரவையின் பணியாகும்.

எனவே, பொதுநிலையினர் ஞாயிறைக் கொண்டாடும் எம் மறைமாவட்டத்தின் பங்குச் சமூகங்களே! பொதுநிலையினர் திருச்சபையிலே வெறும் பார்வையாளர்களாக இராமல், தங்கள் அழைப்பையும் மாண்பையும் உணர்ந்து, திருச்சபையின் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபட அழைக்கின்றோம். இணைந்த செயல்பாடுகளால் பங்கேற்புத் திருச்சபை எம் மறைமாவட்டத்தில் மலர இறையருள் வேண்டுகிறோம்.






கடந்த காலங்களில் இடம்பெற்ற பொதுநிலையினர் ஆண்டு விழா நினைவுகள்

### செபமாலை மாதா தியானயோக சபையினரின்

# ஆன்மீக வாழ்வும் பணியும்

### துணை அங்கத்தினராய் இணைந்து வாழ ஓர் அழைப்பு



புனித செபமாலை அன்னை பல்வேறு இடங்களில் காட்சிகள் மூலம் தம் கருணைத் திட்டத்தை ஏழைச் சிறுவர்வழி வெளிப்படுத்தினார். செபதபம் செய்யவும், செபமாலை செபிக்கவும் கேட்டுக்கொண்ட அவரின் விருப்பத்தை நிறைவேற்ற நிறுவப்பட்டதுதான் செபமாலைக் கன்னியர் இறையனுபவ சபையாகும்.

உன்னத இறைவனின் பாதையில் தடம்பதித்து ஏழ்மை, அன்பு, தாழ்மை, இறைநம்பிக்கை போன்ற புண்ணியங்களைப் போர்வையாய் அணிந்துகொண்டு பரம்பொருளாம் இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர்தான் தாழ்ச்சியின் உறைவிடமான வண. அருட்தந்தை பி. ஏ. தோமாஸ் (அ.ம.தி) அடிகளார். இவரது வாழ்வும் படிப்பினைகளும் நீங்காத நினைவாக இன்றும் எமது மக்கள் மத்தியில் வாழ்கின்றன.

மனித மனம் இறைவனோடு இணையும்போதுதான் அருள் என்னும் நீரோடையில் மூழ்கித் திளைக்க முடியும். இந்த உண்மையை ஆழமாக உணர்ந்து, தான் இறைவனிலே இரண்டறக் கலந்து இன்புறுவதுபோல் இவ்வுலகமும் படைத்தவரில் இணைய வேண்டும், அழிந்துபோகும் ஆன்மாக்கள் காப்பாற்றப்பட வேண்டும், அகிலமெங்கும் இறையாட்சி பரவ வேண்டும் என்ற தணியாத தாகத்தில் செபதப பரிகாரம் நிறைந்த, மறைந்த தியான யோக வாழ்வை வாழ சபை அங்கத்தவர்களைப் பணிக்கின்றார் எம் சபை நிறுவுனர் தோமஸ் அடிகளார்.

நற்கருணை நாதர்முன் இரவுபகலாக விழித்திருந்து, அவரது பேரன்பையும் பரிவிரக்கத்தையும் இடைவிடாது வேண்டி, எம் சகோதரிகளுக்கு, சிறப்பாக எமது செபஉதவியை வேண்டி நிற்கும் துன்புறுவோர், துயரத்தில் ஆழ்ந்திருப்போர், உடல்உள நோய்களால் வேதனைப்படுவோர், அனைவரையும் இறைவனின் குணமளிக்கும் தொடுகைக்குக் கையளித்து அவர்களுக்காகப் பரிந்துபேசி அனைவரின் தேவைகளையும் பெற்றுக்கொடுத்துக் கொண்டே இருக்க செபமாலைக் கன்னியரான நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

*இளம் பெண்ணே, நீயும் அமல அன்னை செபமாலை அரசியின் அணியில் இணைந்து எம் மக்களுக்கு அரும்பணியாற்ற இறைவன் விடுக்கும் அழைப்பை ஏற்க விரும்புகிறாயா?*

**துணை அங்கத்தினராய் எம்முடன் இணைந்து வாழ ஓர் அழைப்பு ......!**

எமது செபத்திலும் பணிவாழ்விலும் இணைய விரும்புகிறீர்களா?

***தகமை:*** பக்தியுள்ள இளம் பெண்கள் 55 வயதுக்குட்படவராக, திருமணம் செய்தவரானாலும் குடும்பப் பொறுப்புக்கள் இல்லாதவராகவும், எமது மடங்களில் எம்முடன் தங்கி இருப்பவராகவும் இருக்கவேண்டும்.

**தொடர்புகொள்ள வேண்டிய முகவரி**

செபமாலைக் கன்னியர் மடம், பட்டித்தோட்டம், மன்னார்.

**இறை அழைத்தல் ஊக்குவிப்பாளர்**

செமாலைக் கன்னியர் மடம், "தோமா மொனாஸ்றி"
கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

### சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி அதிபருக்கு

# சேவைநலன் பாராட்டு விழா



மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியில் 25 வருடங்களுக்கு மேலாக அதிபராக இருந்து சிறப்பாகப் பணியாற்றி வெள்ளிவிழாக் கண்டு மாற்றலாகிச் சென்றுள்ள திரு. ஐ. ஏ. தயானந்தராஜா அவர்களின் சேவையினைப் பாராட்டும் முகமாக மன்னார் மாவட்ட இந்து மகா சபையினால் சேவைநலன் பாராட்டு விழா கடந்த செப்ரெம்பர் மாதம் 27ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மன்னார் நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

தற்போது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றுள்ள இவர் அக்கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மன்னார் மாவட்டத்தில் பல்வேறு சமய, சமூகக் கல்விப் பணிகளை ஆற்றிவந்த இவருடைய அரும்பணிகளைப் பாராட்டுவதில் மன்னார் மறைமாவட்டத் திருச்சபை மகிழ்வடைகின்றது. இவருடைய புதிய பணித்தளம் இனிதே அமைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் திருச்சபைச் செய்திகள்

# கிறிஸ்தவர்களுக்கு அச்சுறுத்தல் விடுப்பதைத் தவிர்க்க வேண்டும்

### ஆசிய, கம்யூனிச நாடுகளிடம் பாப்பரசர் வலியுறுத்து

ஆசியாவின் கம்யூனிச சக்திகளான சீனா, வடகொரியா மற்றும் வியட்நாம் ஆகியவை தமது நாடுகளில் வசிக்கும் சிறுபான்மைக் கிறிஸ்தவர்களை அச்சத்தில் ஆழ்த்தக்கூடாது என்று தென் கொரியாவில் வைத்து பாப்பரசர் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த நாடுகளில் வசிக்கும் கிறிஸ்தவர்கள் அங்கு தமது ஆதிக்கத்தைப் பிரயோகிப்பதற்காக வரவில்லை என்றும் வெறுமனே தமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் குடிமக்களாக ஏனைய சமூகத்தினருடன் இணைந்து நடக்கவே விரும்புகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தென்கொரியாவின் தலைநகர் சியோலுக்கு தெற்கே ஹயேமே நகரில் சுமார் 35 ஆசிய நாடுகளைச் சேர்ந்த 70 ஆயர்களுக்கு மத்தியில் உரையாற்றும்போதே பாப்பரசர் இவ்வாறு தெரிவித்தார்.

சீனாவில் 1949 ஆம் ஆண்டு கம்யுனிசக்கட்சி ஆட்சிக்கு வந்தது தொடக்கம் அங்குள்ள அனைத்துக் கிறிஸ்தவ திருச்சபைகளும் பாப்பரசருடனான உத்தியோகபூர்வ தொடர்பைப் பேணமுடியாத சூழ்நிலை நிலவுவது குறிப்பிடத்தக்கது. மேலும் சீனாவிலுள்ள கத்தோலிக்க திருச்சபைகள் இரு பிரிவுகளாகத் தொழிற்படுகின்றன. 'Patriotic Association' என்று அடையாளப்படுத்தப்படும் திருச்சபை சீன கம்யூனிசக் கட்சியின் கோரிக்கைகளுக்கு எப்போதும் பதில் சொல்லும்




விதத்திலும், 'Underground Church' என இனம் காணப்படுபவை மறைமுகமாக உரோமின் பாப்பரசருக்கு மட்டுமே விசுவாசமாகச் செயற்படும் திருச்சபையாகவும் செயற்பட்டு வருகின்றன. இந்த நிலையில் வத்திக்கான் பேச்சாளர் அருட்தந்தை பெடெரிக்கோ லொம்பார்டி செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்; நற்குணமுடைய கத்தோலிக்கர்கள் எப்போதும் நல்ல குடிமக்களே! அவர்கள் தமது சக்தியை அதிகப்படுத்தி தமது இடங்களைப் பிடித்துவிடுவரோ என்று அதிகாரிகள் அச்சம்கொள்ளத் தேவையில்லை எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொக்கோ ஹராம் வன்முறையால் 185 ஆலயங்களுக்கு தீ

நைஜீரிய நாட்டின் மைடுகுறி (Maiduguri) மறைமாவட்டத்தில் பொக்கோ ஹராம் (Boko Haram) என்ற இஸ்லாமியத் தீவிரவதா அமைப்பினரின் வன்முறையால் கடந்த இரு மாதங்களில் 185 ஆலயங்களுக்குத் தீ வைக்கப்பட்டுள்ளன. மற்றும் ஒரு இலட்சத்து 90 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் புலம்பெயர்ந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வட நைஜீரியாவிலுள்ள மைடுகுறி மறைமாவட்டத்தில் பொக்கோ ஹராம் அமைப்பினரின் வன்முறையால் கடந்த இரு மாதங்களில் இடம்பெற்றுள்ள அழிவுகள் குறித்து பீதெஸ் செய்தி நிறுவனத்தினரிடம் பேசிய அம்மறைமாவட்டச் சமூகத்தொடர்புப் பணிக்குழு இயக்குனரான குருவானவர் இதனைத் தெரிவித்தார். கடந்த 30 நாள்களில் நான்கு நகரங்களிலுள்ள ஆலயங்கள் இந்தப் பயங்கரவாதிகளால் சூறையாடப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்தத் தீவிரவாதிகளின் வன்முறை குறித்துப் பேசிய அம்மறைமாவட்ட ஆயர் அவர்கள், கடந்த இரு மாதங்களில்



தனது மறைமாவட்டத்தின் 11 நகரங்களை அந்த அமைப்பினர் கைப்பற்றியுள்ளனர் எனக் கூறினார்.

## பிலிப்பைன்ஸ் திருச்சபையில் "ஏழைகள் ஆண்டு"

வருகிற ஜனவரியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் பிலிப்பைன்ஸ் நாட்டுக்குத் திருப்பயணம் மேற்கொள்ள இருக்கும் வேளை. வருகிற நவம்பரில் பிலிப்பைன்ஸ் திருச்சபை "ஏழைகள் ஆண்டை" ஆரம்பிக்கவுள்ளது.

பொதுநிலையினர் ஆண்டைச் சிறப்பித்துவரும் பிலிப்பைன்ஸ் திருச்சபை, வருகிற நவம்பர் 23ம் திகதியன்று ஏழைகள் ஆண்டை ஆரம்பிக்கவுள்ளது. சமுதாயத்தில் நலிந்தோர் மற்றும் வாய்ப்பிழந்தோருக்கு ஆதரவாகத் தொடங்கப்படும் ஏழைகள் ஆண்டில், "அடுத்தவருக்குக் கொடுங்கள்" என்ற வேண்டுகோளுடன் நிதி திரட்டும் திட்டமும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஏழைகள் ஆண்டில் 4 கோடி பேசோஸ் பணம் திரட்டி ஏழைகளுக்கு வழங்குவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கான திருப்பயணம் 2015ம் ஆண்டு ஜனவரி 15 முதல் 19 வரை நடைபெறும்.

## சிரியாவில் உரோமன் கத்தோலிக்க மதகுரு போராளிகளால் கடத்தல்


வட மேற்குச் சிரியாவில் உரோமன் கத்தோலிக்க மதகுருவும் அவரது உதவியாளர்கள் 20 பேரும் அல் - கொய்தாவுடன் தொடர்புடைய அல் நுஷ்ரா புரொன்ட் போராளிகளால் கடத்தப்பட்டுள்ளனர்.

அருட்தந்தை ஹன்னா ஜல்லோப் மடமொன்றிலிருந்து கடத்தப்பட்டுள்ளார். அச்சமயம் மடத்திற்குள் இருந்த கன்னியாஸ்திரிகள் அருகிலிருந்த வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். 2011ஆம் ஆண்டு சிரியாவில் மக்கள் எழுச்சி ஆரம்பமானது முதற்கொண்டு அங்கு ஒரு தொகைக் கன்னியாஸ்திரிகள் கடத்தப்பட்டுள்ளனர்.

சிரிய நாட்டவரான அருட்தந்தை ஹன்னா இட்லிப் மாகாணத்தில் கனயெஹ் நகரிலுள்ள சென். ஜோசப் கிறிஸ்தவ மடத்தில் கடந்த 12 வருடங்களாக பணியாற்றி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## குடும்பம் பற்றி விவாதித்த உலக ஆயர்கள் மாமன்றம்

### ஒக்ரேபர் 5 – 19 வரை



கடந்த ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி ஞாயிறன்று வத்திக்கான் பேதுரு பசிலிக்கா பேராலயத்தில் திருப்பலியை ஒப்புக்கொடுத்து உலக ஆயர்கள் மாமன்றத்தை தொடக்கிவைத்தார் திருத்தந்தை அவர்கள். அதற்கு முதல் நாள் சனிக்கிழமை மாலை இவ்விசேட ஆயர்கள் மாநாட்டுக்கான செபவழிபாட்டிலும் திருத்தந்தை கலந்துகொண்டு உலக மாமன்றத்திற்காக எங்களோடு சேர்ந்து செபியுங்கள் என்று தனது டுவிட்டரில் கூறியுள்ளார்.

உலக ஆயர்கள் மாமன்றத்தின் கருப்பொருளான 'குடும்பம்' பற்றி பேசிய மாமன்றத்தின் செயலாளர், குடும்பம் முன்வைக்கும் உலகளாவியச் சவால்களுக்கு நற்செய்தியின் ஒளியில் பதில் காணப்படும். இம்மாமன்றம் திருமண முறிவு பற்றியது அல்ல மாறாகக் குடும்பம் பற்றியது என்று உரைத்தார்.

இம்மாமன்றத்தில் ஐந்து கண்டங்களில் இருந்து 191 மாமன்றத் தந்தையர்கள் உட்பட 253 பேர் கலந்துகொண்டனர். இதில் ஆபிரிக்காவிலிருந்து 42 பேர், அமெரிக்காவிலிருந்து 38 பேர். ஆசியாவிலிருந்து 29 பேர், ஐரோப்பாவிலிருந்து 78 பேர், ஓசியாவிலிருந்து 48 பேர் கலந்துகொண்டனர்.

அத்தோடு திருமணத் தம்பதியர் உட்பட 16 வல்லுனர்கள், 38 பார்வையாளர்கள், 8 பிற கிறிஸ்தவ சபைப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். இம்மாமன்றத் தொடக்கத் திருப்பலியில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாறு கூறினார். "இறைவனின் கனவு தனது சில ஊழியர்களின் வெளிவேடத்தோடு எப்போதும் மோதுகிறது. நாம் தூய ஆவியால் நம்மை வழிநடத்த அனுமதிக்காவிட்டால் இறைவனின் கனவை நாமும் பாழாக்குகிறோம். இறைவனின் கனவை நனவாக்க, செயல்பட அழைக்கப்பட்டுள்ளோம். ஏனெனில் மனித சமுதாயத்திற்காக இறைவனின் திட்டத்தில் குடும்பம் ஒருங்கிணைந்த அங்கமாக இருந்தது" என்று திருத்தந்தை கூறினார்.

மாமன்றத்தில் கூடியிருக்கும் நீங்கள் அனைவரும் உங்கள் கருத்துக்களை வெளிப்படையாக எடுத்துரையுங்கள், பிறர் என்ன நினைப்பார்கள் என்பது குறித்துக் கவலைப்படாதீர்கள். கடந்த மாசி மாதம் இடம்பெற்ற ஆயர் மாமன்றத்திற்குப் பின்னர் எனக்கு ஒரு கடிதம் வந்தது. அக்கடிதத்தை கர்தினால் ஒருவர் எழுதியிருந்தார். திருத்தந்தை என்ன நினைப்பாரோ என நினைத்து சில கர்தினால்கள் ஆயர்கள் மாமன்றத்தில் முழுக் கருத்துக்களையும் முன்வைக்கவில்லை எனத் தெரிவித்தார். திருத்தந்தை வேறுவிதமாக எண்ணி இருக்கலாம் என்று நினைத்துக்கொண்டு தங்கள் சொந்தக் கருத்துக்களை வெளியிடாமல் செல்வது தவறாகும். உண்மையை எடுத்துரைப்பதும், அதற்குத் தாழ்மையுடன் செவிமெடுப்பதும், வெற்றிக்கு இட்டுச்செல்லும். ஆகவே மனம்திறந்து பேசுவோம். தாழ்ச்சியில் செவிமெடுப்போம் எனக் கேட்டுக்கொண்டார்.

5ம் திகதி தொடங்கிய ஆயர் மாமன்ற நிகழ்வுகள் தொடர்ந்து 19ம் திகதிவரை நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் ஆயர் மாமன்ற அமர்வில் குடும்பம்பற்றி பலவகையான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதில் ஐந்தாவது பொது அமர்வில் குடும்பத்தில் கணவரும், மனைவியும் மகிழ்ச்சியோடு சேர்ந்து வாழ்ந்து குழந்தைச் செல்வங்களால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும் போது, அக்குடும்பத்தின் அன்பு பல மடங்காக விரிவடைகிறது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## புனித கெர்ட்ருத்

கன்னி - (கி.பி. 1256- 1302)




மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

# புனிதர்களின் பாதையில்

இவர் உரோமைச் சாம்ராஜ்யத்திற்கு உட்பட்ட ஐஸ்லெபன் நகரில் தோன்றியவர். இளவயதில் ஹெல்ட்டா என்ற இடத்திலிருந்த சிஸ்டெர்சியன் சகோதரிகள் இவருக்குக் கல்வி கற்றுத்தந்தனர். கிறிஸ்துவின் பத்தினியென்றே தன்னைக் கருதினார். இயேசுவுடன் இணைந்த வாழ்வில் முன்னேறினார். அவரது திருஇருதயப் பக்தி தமதிரித்துவப் பக்திக்குத் தாவி உச்சநிலையை அடைந்தது. மறைநூலையும், திருவழிபாட்டையும் மிகவும் நேசித்தார். தனது 25வது வயதில் கிறிஸ்துவைக் காட்சியில் காணும் பேறுபெற்றார். இதன்மூலம் இவர் கிறிஸ்துவின் நெருங்கிய உறவையும், அன்பையும் உணர்ந்தார். அப்போது முதல் அடுத்த 25 ஆண்டுகள் வரை இந்தக் காட்சியின்வழி ஊக்கம் பெற்றுவந்தார்.

இவர் எழுதிய ஞானநூல்களில் பொதிந்து வைக்கப்பட்டுள்ள ஆழமான கருத்துகளைப் படிக்கும் மறைவல்லுநர்கள் சொல்லொண்ணா வியப்பு அடைகிறார்கள். ஒரு சமயம் நற்செய்தியாளர் புனித யோவானின் திருநாளன்று இவருக்குக் கிடைத்த ஒரு காட்சியில், யோவான் இவரை இயேசுவிடம் அழைத்துச் சென்றார். ஆண்டவரின் பக்கமாகச் சாய்ந்தநிலையில், கெர்ட்ருத் யோவானிடம் ஒரு கேள்வி எழுப்பினர். "இயேசுவின் திருஇருதய வற்றாத அன்புபற்றி ஏன் உங்கள் நற்செய்தியில் ஒன்றும் குறிப்பிடவில்லை?" அதற்கு மறுமொழியாக யோவான், "திருஇருதயத் துடிப்புக்களின் இனிமையை நான் குறிப்பிடவில்லை. இப்போதுதான் மக்களிடம் இந்த இறையன்பு இவ்வளவு அடிமட்டத்திற்குப் போய்விட்டது. இனிமேலாக இந்த அன்புத்தீ பற்றியெரிய வேண்டும்" என்று பதில் கொடுத்தாராம். "ஆண்டவரே, இவ்வுலகில் நீர் செய்த மிகப்பெரிய புதுமை என்னவெனில் நீசப்பாவியாகிய என்னை இப்பூமி இன்னும் தாங்கிக் கொண்டிருக்கிறது" என்பது புனித கெர்ட்ருதின் பொன்மொழி.

**சிந்தனைக்கு**

"தந்தாய்! உம்மில் நான் நெருங்கிய தோழமை பெறத்தக்க விலைமதிக்கப்பெறாத நன்கொடையை அளித்தீர். உமது தெய்வீகத்தின் கோவிலாக அமைந்துள்ள உமது திருக்குமாரனின் திருஇருதயத்தைத் தந்து, எனது மகிழ்ச்சியனைத்தையும் அதில் திரட்டி வைத்திருக்கின்றீர். மேலும் நான் இறக்கும்பொழுது, எனக்கு நீர் அளித்துள்ள வாக்குறுதிகளின் மூலம் வரவிருக்கும் நலன்களையும் என் முன்வைத்து என்னைக் கவர்ந்திழுக்கின்றீர். இந்த வாக்குறுதியன்றி வேறு வாக்குறுதி கிடையாதென்றாலும் இதுவே போதும் என்று கோடிப் புகழ்ப்பா இசைத்துக் கொண்டிருப்பேன்." (புனித கெர்ட்ருத்தின் காட்சியிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிர்வுகள் .....!

## அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 37.

# பேச்சுக்கு அளவும் பொருளும் அவசியம்

### *சிறிய பிரசங்கம்!*

பிள்ளையொன்று ஒழுங்காக நித்திரை கொள்வதில்லை எனவும் அதனால் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பங்குத்தந்தையிடம் வந்து கூறினாள் ஒரு தாய். அக்குடும்பத்தின் நிலமையைப் புரிந்துகொண்ட அருட்பணியாளர், தான் வீட்டுக்கு வந்து வீட்டை ஆசீர்வதித்து சிறிய வழிபாடொன்றையும் செய்வதாகச் சொல்லியிருக்கிறார். அதனைக் கேட்ட தாய், "அப்படியென்றால் 'பாதர்', நீங்க ஒரு வழிபாடு வைக்கிறதோட, சிறிய பிரசங்கம் ஒன்றை வைத்தால் பிள்ளை நித்திரையாகிவிடுவாள்!" என்றாளாம்.

### *மறையுரையை அளவாகச் செய்யுங்கள்!*

ஒவ்வொரு நாட்டின் ஆயர்களும் 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை திருத்தந்தையைக் கூட்டாகச் சந்திக்கிறார்கள். இதனை 'அட்லிமினா' (Adlimina) என்பர். ஆயர் மன்றமாக ஒரு நாட்டிலோ அல்லது ஒரு நாட்டின் பிராந்திய ரீதியிலோ ஆயர்கள் எல்லாரும் திருத்தந்தையை ஒன்றாகச் சேர்ந்து சந்திக்கிறபொழுது தங்கள் நாடு சார்ந்த, பிராந்தியம் சார்ந்த, உள்ளூர் திருச்சபை சார்ந்த விடயங்களைக் கலந்துரையாடியபின், ஒவ்வொரு ஆயரும் தம் மறைமாவட்ட விடயங்கள் தொடர்பாகத் திருத்தந்தையுடன் சுமார் 15 நிமிடங்கள் உரையாடுவதுண்டு.

இவ்வாண்டு 2014 வைகாசித் திங்களில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை இலங்கை ஆயர்கள் ஒன்றாகச் சந்தித்துள்ளார்கள். இச்சந்திப்பின்போது பல விடயங்களைக் கலந்துரையாடி இருக்கிறார்கள். இக்கலந்துரையாடலில் நற்செய்திப் பணியைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது, "நீங்கள் எவ்வாறு மறையுரை ஆற்றுகிறீர்கள்? உங்கள் அருட்பணியாளர்கள் உங்கள் மறைமாவட்டங்களில் எவ்வாறு மறையுரை ஆற்றுகிறார்கள்? " என நேரடியாகவே திருத்தந்தை இலங்கை ஆயர்களிடம் வினவியுள்ளார். அதற்கு நம் ஆயர்கள் என்ன பதில் சொன்னார்களோ தெரியாது! ஆனால், திருத்தந்தை பிரான்சிஸ் மறையுரை எவ்வாறு ஆற்றப்பட வேண்டும் என்பது பற்றி தாம் தெரிவிக்க வேண்டியதை நம் ஆயர்களுக்குத் தெரிவித்து அனுப்பியிருக்கிறார்.

### *10 தொடக்கம் 15 நிமிடங்கள் போதுமானது!*

திருத்தந்தை மறையுரை ஆற்றுவதுபற்றிச் சொன்ன குறிப்புக்களுள் ஒன்றுதான், 08 தொடக்கம் 10 நிமிடங்களுக்குள் மறையுரை அமையவேண்டும் என்பதாகும். மேலும், தன் மருமகன் ஒரு மதிப்புக்குரிய அருட்பணியாளர் என்றும், ஆனால் சுருக்கமாக மறையுரை ஆற்றத் தெரியாதவர் என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறார். இதனைத் தங்கள் மறைமாவட்டங்களில் பணியாற்றும் அருள்பணியாளர்களிடம் போய்க் கட்டாயமாகக் கூறவேண்டும் எனவும் திருத்தந்தை கேட்டிருக்கிறார்.

2014 ஆடித்திங்கள் 21ஆம் நாள் தொடக்கம் 24ஆம் நாள்வரை கண்டி தேசிய குருமடத்தில் குருத்துவ வாழ்வில் 05 ஆண்டுகளுக்குட்பட்ட அருட்பணியாளர்களுக்கான ஒன்றுகூடலில் உரையாற்றிய 04 ஆயர்களும் இதனைத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். திருத்தந்தையின் இச்செய்தி அருள்பணியாளர்களுக்கு எத்தகைய உணர்வலையை ஏற்படுத்துகிறதோ தெரியவில்லை! ஆனால், பொதுநிலையினருக்கு திருத்தந்தையின் மேற்சொன்ன கருத்து தேனாமிர்தமாக இருக்கப்போகிறது என்பதில் துளியளவும் ஐயமில்லை.

சில அருட்பணியாளர்களின் மறையுரைகளைக் கேட்டுக்கேட்டுக் களைத்துப் போனவர்களுக்கும் இன்னும் அவர்களின் மறையுரைகளைக் கேட்டு மயங்கி விழாதவர்களுக்கும் இச்செய்தி, கடவுள் தோன்றிக் காட்சி கொடுத்தது போன்ற ஓர் இறைவெளிப்பாடாகக்கூடத் தோன்றலாம்! திருத்தந்தையின் இச்செயலுக்காக – நற்செய்திக்காக இறைவனுக்கு நன்றிசொல்லிப் பலர் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்க விளைந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

### *மறையுரையை ஆயத்தம் செய்ய வேண்டும்*

மறையுரை ஆற்றுவது பற்றித் திருத்தந்தை கூறிய கருத்துக்கள் தொடர்பாக இறைமக்கள் தெரிந்திருக்கிறார்கள் என்ற செய்தி இனிமேலாவது மறையுரைகளைக் கொஞ்சம் ஆயத்தம்செய்து ஆற்றுவதற்கு அருட்பணியாளர்களுக்கு உந்துசக்தியாக அமையும் என்பது உறுதியாகிறது.

யாரையாவது திட்டுவதற்கு – கண்டமாதிரிப் பேசுவதற்கு அல்லது யாருடனாவது சண்டை பிடிப்பதற்கு யாருக்காவது ஆயத்தம் தேவைப்படுகிறதா? இல்லையே! காரணம் வாய்க்குவந்தபடி திருவாய் மலர்ந்து திட்டலாம்/ பேசலாம் / சண்டைபிடிக்கலாம். ஆனால், ஒரு உருப்படியான அர்த்தமுள்ள சொற்பொழிவை - உரையை – மறையுரையை ஆயத்தமில்லாமல் செய்யமுடியாது; எதனைச் சொல்லவேண்டும், எதனைச் சொல்லக்கூடாது என்பது முக்கியமானது. எனவேதான், இவற்றுக்குக் கட்டாயமாக முன்னாயத்தம் அவசியமாகிறது.



### *ஆயத்தம் இல்லாதவர்களுக்கு அரை மணித்தியாலமும் போதாது!*

உண்மையில் மறையுரையை ஆயத்தம் செய்து பகிர்ந்துகொள்கிறவர்களுக்கு சாதாரணமாக 08 தொடக்கம் 10 அல்லது 15 நிமிடங்கள் தாராளமாகப் போதுமானது. அப்படியென்றால், மறையுரையை ஆயத்தம் செய்யாமல் வந்து, சுற்றிச் சுழன்று, எதில் தொடங்கி எங்கு முடிப்பது என்று தெரியாமல் தத்தளிப்பவர்களுக்குத்தான் 20, 30 நிமிடங்கள்கூடப் போதாமல் இருக்கும்! இனிமேலாவது பொதுநிலையினர் நம் அருள்பணியாளர்களின் மறையுரை, பொருள் பொதிந்த, இறையனுபவம் மிக்க மறையுரையாக மாற்றம் பெறவேண்டும் எனப் பங்குத்தந்தையர்களின் பாதுகாவலராம் புனித யோண் மரிய வியானியிடமும் மறையுரைஞர்களின் பாதுகாவலராம் புனித யோண் கிறிஸ்தோஸ்ரமிடத்திலும் மன்றாடுவது அவர்களின் முக்கியமானதொரு ஞாயிறு வேண்டுதலாக வேண்டும்!

### *தெளிவிருக்க வேண்டும்*

சில அருள்/ அரச/ அரசசார்பற்ற பணியாளர்கள் சாதாரணமாகக் கதைப்பதே (பேசுவதே) மற்றவர்களுக்குப் புரிவதில்லை என்றால், பிறகு எப்படி அவர்களின் மறையுரையை/ சொற்பொழிவை/ உரையை மக்கள் புரிந்துகொள்வார்கள்? அலட்டல் உரைகளை மக்கள் இனிமேலும் சகித்துக்கொள்ள - ஆமோதிக்கமாட்டார்கள் என்பதை உரையாற்றுபவர்கள் முதலில் நன்கு உணர்ந்துகொள்ளவேண்டும்.

சிலர், சொற் தெளிவின்றி, பொருள் உணராமல், போதிய ஆயத்தம் இன்றி பொது இடங்களில் வாசிப்பதால்/ உரையாற்றுவதால்; செய்தி மக்களைச் சென்றடையாமல் வெறும் சத்தமே சென்று சேர்கிறது. ஆகவே, அருட்பணியாளர்கள் மறையுரை ஆற்றுகிறபோது, வழிபாடுகளில் வாசிக்கிறபோது - அரச/ அரசசார்பற்ற நிறுவனப் பணியாளர்கள் பொது இடங்களில் பேசுகிறபோது மேற்சொன்ன கருத்துக்களைக் கட்டாயமாகக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டி இருக்கிறது. தெளிவாக வாசிப்பவர்களை - அர்த்தமுள்ள மறையுரையை/ சொற்பொழிவை ஆற்றுபவர்களை அவதானித்தால் அவர்கள் தகுந்த ஆயத்தத்தோடு செய்கிறார்கள் என்ற உண்மை தெள்ளத்தெளிவாகப் புலப்படும். அதனை அவர்களின் மறையுரை/ உரைகளில் இலகுவாகக் கண்டுகொள்ளலாம்.

அமலமரித்தியாகி பற்றிக் ஞானப்பிரகாசம் மிகச் சிறந்த ஒரு மறையுரைஞர். அவரின் மறையுரையில் - இறைமக்களை வழிநடத்துகிற முறையில் புதுமைப் போக்கை அவதானிக்கலாம். ஒரு தடவை திருப்பலி நிறைவின் அறிவித்தல் நேரத்தில்; "வருகிற கிழமை திங்கள், செவ்வாய் ஆகிய நாட்களில் எனக்குத் தியானம் இருக்கிறது, புதன் வியாழன் ஆகிய தினங்களில் ஆயரில்லத்தில் எனக்கு அலுவல் இருக்கிறது, வெள்ளி, சனியில் நான் பணிமனையில் இருக்கமாட்டேன்! ஞாயிறு வழமையான திருப்பலி இடம்பெறும்" எனக்குறிப்பிட இறைமக்களில் பெரும்பாலானவர்கள் அறிவித்தலின் பொருள் என்னவென்று மண்டையைப் பிய்த்துக் கொண்டிருந்தார்களாம். உண்மையில் இவ்வறிவித்தலின் பொருளை ஒரு வரியில் முடித்திருக்கலாம்! உதாரணமாக, "வருகிற கிழமை ஞாயிறு திருப்பலி மட்டும் வழமை போன்று இடம்பெறும்" எனக் குறிப்பிட்டிருக்கலாம்.

எனினும், ஏன் இவ்வாறான விளக்கவுரையோடு அறிவித்தலை அருள்தந்தை பற்றிக் ஞானப்பிரகாசம் செய்திருக்கிறார் என்றால், "பாதர், முழுக்கிழமையும் பங்கிலில்லாமல் - பூசை வைக்காமல் எங்க போகிறார்?" என்ற ஒரு சிலரின் கேள்விகளுக்கு விடை கிடைக்கும் வகையில் அறிவித்தலை ஆக்கியளித்திருக்கிறார், அவ்வளவுதான்!

### *விடயங்களை விவேகமாகக் கையாளலாம்*

ஓய்வுபெற்ற அமலமரித்தியாகி ஒருவர் பங்குத்தந்தையாக பணிசெய்தபோது பங்கொன்றில் பின்வரும் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. கடற்கரையைச் சூழலாகக் கொண்ட அவ்வாலயம் தூசிபிடித்து இருந்திருக்கிறது. அதனைப் பல தடவைகள் சுட்டிக்காட்டியும் மக்கள் துப்பரவு செய்யாத நிலையில் திருப்பலி முடிந்ததும் அறிவித்தலில்: "கோயிலில் தூசி, கடலில் பாசி, நீ யோசி!" என்று கூறி முடித்திருக்கிறார். அதாவது கோயிலைத் தூசிபிடிக்கவிட்டால் கடலில் மீன் வளராது பாசிதான் வளரும் என்பதை மறைமுகமாகக் குறிப்பிட்டிருக்கிறார். மறுநாளே ஆலயம் துப்பரவு செய்யப்பட்டுப் புதுப்பொலிவு பெற்றதாகச் சொல்கிறார்.

மேலும், இன்றைய சமூக நிலமைகளைக் கருத்தில் கொண்டு மேற்சொன்ன அறிவித்தலை, கோயிலில் தூசி, கடலில் பாசி, ஊரில் ....சி, நீ யோசி என்று அவ்வசனததை அப்டேற் (Update) செய்யலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார் அதே அருட்பணியாளர்.

ஒரு சில காரணங்களுக்காக அவ்வருட்பணியாளரின் பெயர் இங்கு குறிப்பிடப்படவில்லை. அக்காரணங்களைக் கருத்தில் கொள்ளாது அவர் பெயரைக் குறிப்பிடலாம்! குறிப்பிட்டால் என்ன, அதன்பிறகு அப்பணியாளரிடமிருந்து இப்படியான அனுபவக் கருத்துக்களைப் பெறமுடியாது போய்விடும் என்ற முக்கியமானதொரு காரணத்தினால் அவர் பெயரில் இரகசியம் பேணப்படுகிறது. அடுத்து, கவனிக்கப்படவேண்டியது, மேலே கீறிட்ட இடம் அச்சுப்பிழையினால் வந்ததல்ல என்பதனைத்தான்! அக்கீறிட்ட இடத்தில் வரவேண்டிய சரியான எழுத்தினைத் தெரிவுசெய்து வாசித்தால் அதன் ஆழ்ந்த அர்த்தம் புரிந்துவிடும். கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்... !

### *பாவி, செய்ததைப் பார்!*

அமலமரித்தியாகி பாவிலுப்பிள்ளை சுவாமி அவர்கள் பல அருட்பணியாளர்களால் சுருக்கமாகப் 'பாவி' என்றே அன்பாக அழைக்கப்பட்டார். அவர் தன் அறையிலுள்ள திருச்சிலுவைப் படத்தின்கீழ் "பாவி, நீ செய்ததைப் பார்" என எழுதி வைத்திருந்ததைக் காணலாம். அருட்தந்தை பாவிலுப்பிள்ளை பணிசெய்த பங்குகள் பிரச்சினைக்குரிய பங்குகளாக இருந்திருக்கின்றன. அப்பிரச்சினைகளுக்குரிய பங்குகளின் பெயர்களைக் குறிப்பிடலாம்தான்! குறிப்பிட்டால் என்ன அப்பங்குகளுக்கு நான் செல்வதாக இருந்தால் கெல்மற் அணிந்துகொண்டுதான் இனிமேல் போகவேண்டிவரும் என்பதால் என் பாதுகாப்புக் காரணங்களைக் கருத்தில்கொண்டு அப்பங்குகளின் பெயர்களைக் குறிப்பிடாமல் விட்டுவிடுகிறேன்! பாவி (பாவிலுப்பிள்ளைச் சுவாமி), தான் சென்ற பங்குகளில் பிரச்சினைகள் நிறையவே இருந்ததால் மிக விவேகத்தோடே பணிகளை ஆற்றியிருக்கிறார் என்பதை அவருடன் சேர்ந்து பணிசெய்த அருட்பணியாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

ஒரு தடவை ஆலய விழாக்களில் திருச்சுரூபப் பவனியின்போது இறைமக்களைத் திருச்சுரூபத்தின் முன்னால் செல்லும்படி கேட்டுக் கொண்டார். ஆனால், ஊரிலுள்ள சில முக்கிய புள்ளிகள் இதனை செவிமடுத்ததாகத் தெரியவில்லை. அடுத்தாண்டு ஆலயத் திருவிழா வந்தபோது திருச்சுரூபப் பவனிக்கான ஒழுங்கை அறிவித்தார்: "திருச்சுரூப பவனி இடம்பெற இருக்கிறது. இறைமக்கள் அனைவரும் திருச்சுரூபத்திற்கு முன்பாகச் செல்வார்கள். 'மசுவாதிகள்' (திருச்சபை முறைப்படி ஒழுங்காகத் திருமணம் செய்யாதவர்கள்) மாத்திரம் திருச்சுரூபத்திற்குப் பின்னால் வருவார்கள்! எனச் சொல்லியிருக்கிறார். அவ்வளவுதான்! ஒரு குருவிகூட திருச்சுரூபத்தின் பின்னால் செல்லவில்லையாம்!

### *பேசுதல் - ஏசுதல் அணுகுமுறை*

பங்குத்தந்தையர்களே! நீங்கள் சொல்வது பங்கில் நடைபெறவில்லை என்றால் பங்கு மக்களைப் பேசாதீர்கள், திட்டாதீர்கள். பாவியைப்போல (பாவிலுப்பிள்ளைச் சுவாமி) புதிய கைங்கரியங்களைக் கடைப்பிடிப்பீர்களேயானால் எதிர்பார்க்கப்படும் விளைவுகளை மிக இலகுவாக அடைந்துவிடுவீர்கள். இல்லையென்று, காலாவதியாகிப்போன - பழகிபபோன அணுமுறையான பேசுதல்- ஏசுதல் அணுகுமுறையைக் கைக்கொள்வீர்களேயானால், உங்களுக்குச் சீனியும் (Sugar), கொதிப்பும் (இரத்த அழுத்தம்) கூடுமே தவிர எதிர்பார்க்கப்படும் விடயங்களில் எந்தப் பயனும் ஏற்படாது. இங்கு, பங்குத்தந்தையர்களையும் அருட்பணியாளர்களையும் விழித்து இவ்விடயத்தைக் கூறினாலும் பெற்றோர், அதிபர், ஆசிரியர், நிர்வாக சேவையில் –தலைமைத்துவப் பணியில் ஈடுபடுகின்ற அனைவரும் புதிய கைங்கரியங்களைக் கருத்தில் கொள்ள வேண்டியது இவர்கள் தங்கள் வாழ்வில் செய்கிற இக்காலத்துப் பெரும் புண்ணியங்களாகக் கருதப்படும்.

(கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும்: anpuomi1970@gmail.com)


## மன்னார் மறைமாவட்ட

## இணையத்தளங்கள்

**பார்வையிடுங்கள்! பயனடையுங்கள்!**

Visit our websites :
mannardiocese.net
manna.lk



மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையமான 'கலையருவி'யினால் இரண்டு இணையத்தளங்கள் உருவாக்கப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன. **mannardiocese.net** என்ற பெயரில் மன்னார் மறைமாவட்டம் தொடர்பான பல தகவல்களைக் கெண்டதான ஒரு இணையத்தளமும், **manna.lk** என்ற பெயரில் மன்னார் மறைமாவட்டச் செய்திகளையும் ஏனைய திருச்சபைச் செய்திகளையும் உடனுக்குடன் வழங்கும் ஒரு இணையத்தளமும் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பார்வையிடுங்கள், பயனடையுங்கள். இவை பற்றிய உங்கள் கருத்துக்களை எமக்குத் தெரியப்படுத்துங்கள்.
*இயக்குனர், கலையருவி, தொ.பே. 0233233276, 0232250789,*

*E.mail : nesanmnr@gmail.com*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரி
# அதிபருக்கு மகத்தான பிரியாவிடை



மன்னார் மறைமாவட்டத்தின் முருங்கன் பங்கு மகளும், மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபருமாகிய அருட்சகோதரி மேரி எலிசபெத் அவர்களுக்கு பாடசாலை அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் மகத்தான பிரியாவிடை வைபவம் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் புடைசூழ அண்மையில் கோலாகலமாக நடைபெற்றது. இவர் 18 வருடங்கள் இக்கல்லூரியின் அதிபராகப் பணியாற்றியிருந்தார்.

அதிபர் அருட்சகோதரி எலிசபெத்தை, மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை, மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. பாஸ்கரன், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எம். உதயகுமார், மண்முனை வடக்கு கோட்டக் கல்வி அதிகாரி திரு. சுகுமாரன், தற்போதைய அதிபர் அருட்சகோதரி அருள்மரியா, பாடசாலை அபிவிருத்திக்குழுச் செயலாளர் திரு. தீசன் ஜெயராஜ் மற்றும் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பிரமுகர்கள் ஆகியோர் மட்டக்களப்பு மத்திய பஸ் நிலைய நாற்சந்தியில் வரவேற்று கல்லூரி மேற்கத்தேய பாண்ட் வாத்தியக்குழுவினரின் இசையுடன் ஊர்வலமாகப் பாடசாலைக்கு அழைத்து வந்தனர். முதலில் அருட்சகோதரியின் பெயரில் பாடசாலைக் கட்டடம் ஒன்று ஆயரினால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## டொன் பொஸ்கோ அதிபருக்கு விருது



மன்னார் மறைமாவட்டத்தின் நானாட்டான் பங்கு மகளும், யாழ்ப்பாணம் டொன் பொஸ்கோ வித்தியாலய அதிபருமாகிய அருட்சகோதரி மரியஜீவந்தினி இலங்கையின் சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருதான பிரதீபா பிரபா விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் 2014ஆம் ஆண்டிற்கான சிறந்த அதிபர், ஆசிரியர்களுக்கு விருது வழங்கும் நிகழ்வு கடந்த ஒக்ரோபர் மாதம் 6ஆம் திகதி மகரகமவில் உள்ள தேசிய கல்வி நிறுவக மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதமர் டி. எம். ஜெயரத்ன கலந்து சிறப்பித்தார்.

இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு இப்பாடசாலையிலிருந்து தோற்றிய மாணவர்களில் 140 பேர் சித்தியடைந்துள்ளனர். இந்நிலையில் இவ்வித்தியாலயத்தின் அதிபருக்கு பிரதீபா பிரபா விருது கிடைத்துள்ளதையிட்டு பாடசாலை சமூகம் அவருக்கு பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.

## முருங்கன் முத்தமிழ்க் கலாமன்ற பொன்விழாவில்
# அறுவருக்கு சிறப்பு விருதுகள்

முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றம் ஆரம்பிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு இடம்பெற்ற பொன்விழா நிகழ்வுகள் கடந்த செப்ரெம்பர் 20ஆம் திகதி முருங்கனில் இடம்பெற்றன. மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சமய, சமூக, கலைப் பணியாற்றிய ஆறு பெரியோர்கள் இந்நிகழ்வின்போது பொன்னாடை போர்த்தி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவர்களின் விபரங்கள் வருமாறு ;

1. சிறுவர் இலக்கியத்திற்குப் பங்களிப்புச் செய்து விருதுகளைப்பெற்ற ஆத்திக்குளியைச் சேர்ந்த கவிஞர் கலாபூசணம் அ. அந்தோனிப்பிள்ளை அவர்களுக்கு 'பிள்ளைத் தமிழோன்' என்னும் பட்டம் வழங்கப்பட்டது.
2. நாடகங்களை ஆற்றுகை செய்துவரும் காத்தான்குளத்தைச் சேர்ந்த திருமதி. வசந்தி சுவாந்த குரூஸ் அவர்களுக்கு 'அரங்கச் செல்வி' என்ற பட்டம் வழங்கப்பட்டது.
3. நல்ல பல நாவல்களைப் படைத்துவரும் நாவலாசிரியரான பேசாலையைச் சேர்ந்த எஸ். ஏ. உதயன் அவர்களுக்கு 'நாவல் நாயகன்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.
4. மன்னார் மாதோட்ட வரலாறுகளை நன்கு அறிந்தவரும், நாடக ஆர்வலருமான ஆட்காட்டிவெளியைச் சேர்ந்த திரு. ஆ. செபமாலை அவர்களுக்கு 'ஆய்வறித் தலைமகன்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.
5. நாட்டுக்கூத்து அண்ணாவியாரும் முருங்கன் முத்தமிழ் கலாமன்றத்தின் முன்னாள் உறுப்பினருமாகிய இசைமாலைத்தாழ்வைச் சேர்ந்த செபமாலை பிலிப்பு (சிங்கராசா) அவர்களுக்கு 'சுடர்கலைச் சோதி' என்ற பட்டம் வழங்கப்பட்டது.
6. சமூகத் தொண்டராகிய முருங்கனைச் சேர்ந்த மரிசால் பேதுரு (பீற்றர்) அவர்களுக்கு 'ஞானக் கதிரொழி' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

# நம்பிக்கையோடு போராடு

## யாக்கோபுவின் போராட்ட வாழ்வு நமக்குத் தரும் வாழ்க்கைப் பாடம்

**அருட்சகோதரி இ. யோகா, அன்புக் கன்னியர், இரத்தினபுரி**

போராட்டங்கள் பலவிதம். அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு மனிதனும் முகம் கொடுப்பது தனிரகம். போராட்டமானது தனி மனித வாழ்விலும், சமூக வாழ்விலும் பின்னிப் பிணைந்தவொன்று. போராட்டமில்லா தனி மனிதனோ அல்லது சமூகமோ நாடோ இவ்வுலகில் இல்லை எனலாம். போராட்டமானது ஒவ்வொருவருடைய வாழ்விலும், சமூகத்திலும் ஏதோ ஒரு கட்டத்தில் அல்லது சந்தர்ப்பத்தில் வருவது தவிர்க்க முடியாததொன்று.

'ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே, வாழ்வென்றால் போராடும் போர்க்களமே...' என்ற பாடல் வரிகளில் கவிஞன், போராட்டமான வாழ்க்கையின் நிதர்சனத்தை அழகாக எடுத்துக் காட்டியிருக்கின்றான். பற்பல காரணங்களுக்காக ஒவ்வொரு மனிதனும் போராடவேண்டியிருக்கிறது. இந்தப் போராட்டத்தை நாம் எப்படிப் போராடுகின்றோம்? வாழ்வில் போராட்டம் என்பது தவிர்க்க முடியாததொன்று எனில், அதற்கு நாம் எப்படி முகம் கொடுக்கின்றோம்? அதே பாடலில் ஆசிரியர் கூறுகிறார் '... நம்பிக்கை என்பது வேண்டும் நம் வாழ்வில்...' எத்தனை உண்மை இந்தப் பாடல் வரிகளுக்குள்! அத்தனையும் தத்வரூபமாக பாடலாக்கிய கவிஞனுக்கு நன்றிகள்.

திருவிவிலியத்தில், ஈசாக்கின் மகனும், ஆபிரகாமின் பேரனுமான யாக்கோபு தனது வாழ்வில் பெரியதொரு போராட்டத்திற்கு முகம் கொடுக்கிறார். இறைவனுடைய வாக்குறுதியில் கொண்ட நம்பிக்கையினால் அவரது வாழ்வின் போராட்டத்தில் அவர் வெற்றிகண்ட விதம் அற்புதமானது.

தனது மாமன் லாபான் வீட்டில் 20 வருடங்கள் (வி.ப 31:38) லாபானின் கால்நடைகளைப் பராமரித்து, பணிபுரிந்து அவரது வீட்டில் பெண் கொண்டு, தன் சொந்த நாட்டிற்குத் திரும்பிப்போக ஆயத்தமாகும்போது, லாபானின் விருப்பமின்மையும், யாக்கோபு தன் மனைவி மக்கள், ஆடு, மாடுகளுடன் புறப்படத் தயாராகும்போது வரும் தடைகள், மனச் சஞ்சலங்கள், பயம் என்பன பெரும் போராட்டமாக மாறுகின்றது. பலத்த போராட்டங்களுக்கு மத்தியில் (வி.ப 30:25-43, 31:1, 31:32, 31: 27, 31:36, 31:45-54, 32:1) தன் மாமன் லாபானிடமிருந்து தன் தந்தையின் நாட்டிற்குச் செல்லப் புறப்படுகின்றார்.

இத்தனை போராட்டங்களுக்கு மத்தியில் யாக்கோபு தன் மாமன் லாபானிடமிருந்து புறப்படக் காரணம் என்ன? யாவே இறைவன், ஆபிரகாமின், ஈசாக்கின் கடவுள் அவர்களுக்கு கொடுத்திருந்த வாக்குறுதியில் யாக்கோபு நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த நம்பிக்கை, யாக்கோபுவை அவர் தம் மாமனிடம் போராடி வெல்ல வைத்தது.

மாமனிடம் போராடி வென்ற யாக்கோபுவிற்கு இருந்த இன்னொரு போராட்டம்தான், தன் சகோதரன் ஏசாவின் மனதை வெல்வது. தான் தன் மனைவி, மக்கள், சொத்துக்களுடன் நாடு திரும்புகையில் தன்னால் இருமுறை ஏமாற்றப்பட்ட சகோதரன் ஏசாவின் பார்வையில் தனக்குத் தயை கிட்டுமா என்னும் பெரும் மனப்போராட்டம்! தலைச்சன் பிள்ளைக்குரிய உரிமையையும் (தொ.நூ 25:29-34), தன் தந்தை ஈசாக்கின் ஆசீரையும் (தொ.நூ 27:30) தந்திரமாகப் பெற்றுக்கொண்டதனால் சகோதரன் ஏசாவின் பகையை (தொ.நூ 27:41) சம்பாதித்துக்கொண்டவர்தான் யாக்கோபு. அந்தப் பகைமையின் காரணமாகவே ஏசாவின் கோபத்திலிருந்து தப்புவதற்கு தன் மாமன் லாபானிடம் தப்பி ஓடினார். பின்னர் அங்கிருந்து ஏறத்தாழ இருபது வருடங்களுக்குப் பின்னர் (தொ.நூ 31:38) மீண்டும் தன் சொந்த நாட்டிற்குத் திரும்புகையில் ஏசா மன்னித்து ஏற்பாரா? அல்லது பழைய பகை தீர்ப்பாரா என்னும் மனப்போராட்டம் (தொ.நூ 32:4).

யாக்கோபு தன் மனைவிமார், பிள்ளைகள், வேலையாட்கள் அனைவரையும் தன் கால்நடைகளுடன் கூட்டம் கூட்டமாகப் பிரித்து தனக்கு முன்னே அனுப்பியபின் (தொ.நூ 32:22-24) யாக்கோபு தனித்திருந்தார்; இருளில் தனித்திருந்தார் (தொ.நூ 32:24). அந்தத் தனிமையில் அவர் போராடவேண்டியிருந்தது. யாக்கோபு ஒரு மனிதருடன் இரவு முழுவதும் போராடினார் (தொ.நூ 32:24). அந்தப் போராட்டத்திற்கு யாக்கோபு தைரியத்துடன் முகம்கொடுத்தார். ஏனெனில் அவர் மேற்கொண்டிருந்த பயணத்தின் இலக்கு அத்தனை முக்கியமானதாகக் காணப்பட்டது. இரவு முழுவதும் போராடினார் யாக்கோபு! இறுதியில் அந்த மனிதனை வெற்றிகொண்டார் (தொ.நூ 32: 24-25). யாக்கோபு தான் வெற்றிகொண்டது ஆண்டவர் என பின்னர் அறிந்துகொள்கிறார் (தொ.நூ 32: 29-31).

எந்தவொரு போராட்டத்திற்கும் (மனப் போராட்டம், வாழ்வியல் போராட்டம், சமூகப் போராட்டம், அரசியல் போராட்டம், சமயப் போராட்டம், இனப்போராட்டம் இவை போன்ற இன்னும் பல ...) நாம் உறுதியோடு, தைரியத்தோடு முகம் கொடுக்கும்போது அது நமக்கு வெற்றியைத் தருவது திண்ணம். இன்றல்ல, நாளையல்ல மாறாக ஏதோ ஒரு நாள் நிச்சயம் வெற்றி உண்டு. 'நம்பிக்கை என்பது வேண்டும், நம் வாழ்வில் ... இலட்சியம் நிச்சயம் வெல்லும் ஓர் நாளில் ...'' என்ற பாடல் வரிகள் எத்தனை உண்மையானது! இதையே பிதாப்பிதாவான யாக்கோபுவின் வாழ்விலும் காணக்கூடியதாக உள்ளது. போராட்டம் நிறைந்த நேரம், காலம், சூழல் அல்லது சந்தர்ப்பங்கள் யாவும் மிகவும் சவால்கள் நிறைந்ததாக இருக்கும். தனிமனிதனாகவோ அல்லது சமூகமாகவோ ஏதோ ஒரு இலக்கை அடையப் போராடுகின்றபோது, ஒரு கட்டத்தில் தனித்துவிடப்படுவது தவிர்க்க முடியாததொன்றாகிவிடுகின்றது. தன் மனைவிமார், பிள்ளைகள், வேலையாட்கள் என ஒரு கூட்டமாக, குலமாக யாக்கோபு புறப்பட்டாலும், தன் சொந்த நாட்டில், சொந்த மண்ணில் கால்பதிக்குமுன் அவருக்கு ஏற்பட்ட மனப்போராட்டம், அவரது குடும்பத்தினரைப் பாதிக்காமலிருந்திருக்க முடியாது. எனினும், ஒரு குடும்பத்தலைவனாக, அந்த மண்ணிற்கே உரிய மைந்தனாகத் திரும்பிச் செல்கையில், தனியாக தனது தேசத்திலிருந்து புறப்பட்ட யாக்கோபு இப்போது, ஒரு கூட்டமாக சென்றாலும் தன் சகோதரனால் ஏற்றுக்கொள்ளப்படுவோமா என்னும் அங்கலாய்ப்பில் அதிகம் பாதிக்கப்பட்டவராகிறார். தமக்கு அறிமுகம் இல்லாத தேசத்திற்கு போகிறோமே எனும் மனப்போராட்டம் யாக்கோபுவின் குடும்பத்தினருக்கு இருந்திருப்பினும் யாக்கோபுவின் மனத்திலிருந்த போராட்டம் வித்தியாசமானது.



இத்தனை மனக்கஸ்டங்களுக்கு மத்தியிலும் யாக்கோபு மனந்தளரவில்லை, பின்வாங்கவில்லை. தம் சகோதரனுக்கு பயந்தவராயிருந்தாலும் (தொ.நூ 32: 14-21, 33:1-3) யாவேயினால் வாக்களிக்கப்பட்ட தேசத்தை அடைய எப்போதும் முன்னோக்கி தன் பயணத்தை மேற்கொண்டிருந்தார், ஈற்றில் வெற்றிபெறுகிறார். ஏனெனில் யாவே தாமே யாக்கோபுவிற்கு கனவில் தோன்றினார். ஆபிரகாம், ஈசாக்கிற்கு வாக்களித்த நாட்டை உரிமைச் சொத்தாகத் தருவதாக வாக்களித்தார். அவ்வாக்குறுதியை யாக்கோபு முழுமையாக நம்பினார். எனவே சகல சவால்களையும் தைரியத்தோடு, நம்பிக்கையோடு எதிர்கொண்டார். தன் சகோதரனைக் கண்டபோது அவன்முன் தன்னைப் பணிவாக முன்னிலைப்படுத்துகிறார் (தொ.நூ 33: 3). யாக்கோபுவின் விடாமுயற்சி, தயக்கத்தன்மை, முன்னோக்கிச் செல்லல், பணிவு என்பன அவர் சகோதரன் ஏசாவின் மனதை வெற்றிகொள்ளச் செய்கிறது. ஏசா தன்னை கொன்றுவிடுவானோ எனப் பயந்த யாக்கோபு, அவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது யாக்கோபுவின் பெரும் போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றி.

போராட்டத்தில் பலர் வெல்லுவதும் உண்டு, தோற்றுப்போவதுமுண்டு. தோற்றுப்போக பல இன்னோரன்ன காரணங்கள் உண்டு. ஆனால் வெற்றிபெற விடாமுயற்சியும், தன்னம்பிகையும் இருப்பதுபோல பணிவும் மூலதனமாகிறது. தனது தலைச்சன் பிள்ளைக்குரிய உரிமையை மட்டுமல்ல மூத்த மகனுக்குரிய தந்தையின் ஆசியையும் யாக்கோபு தந்திரமாகப் பெற்றுக்கொண்டான் என்பதை அறிந்த ஏசா, யாக்கோபுமீது சீற்றம்கொண்டு அவனைக் கொல்லத் தேடினான்.

லாபானுடைய வீட்டிலிருந்து புறப்படும்போதும் (தொ.நூ 32: 3-21), அங்கிருந்து புறப்பட்டபின் மீண்டும் லாபான் துரத்திவந்து தடுப்பதன் மூலமும் (தொ.நூ 32:22-23) இறுதியாக யக்கோபு ஆற்றை அனைவரும் கடந்தபோது யாக்கோபு தனித்திருந்தபோதும் (தொ.நூ 32:24), யாக்கோபு இருபது வருடங்களில் பெற்றுக்கொண்ட செல்வத்திலல்ல, மாறாக இறைபராமரிப்பில் இறைவனின் அன்பில் நம்பிக்கை வைத்தார். இறைவன் கொடுத்த வாக்குறுதியினால் அனைத்தும் ஆயின என்பதை உணர்த்த இரவு முழுவதும் இறைவன் அவரைப் போராட வைத்தார். போராடி வென்றுவிட்டேன் என யாக்கோபு இறுமாப்புக் கொள்ளவில்லை. மாறாகத் தன்னை ஆசீர்வதித்து செல்லுமாறு வேண்டுகிறார்.

யாக்கோபுவிற்கு இறைவன் கற்பித்த இந்தப் பாடம் மறுநாள் யாக்கோபுவை செல்வம் மிகுந்திருப்பினும் பணிவுடன் ஏசாவைச் சந்திக்க வைத்தது. ஏசா 400 பேருடன் (தொ.நூ 33:1) வருவதைக் கண்ட யாக்கோபு (தொ.நூ 33:3) ஏழுமுறை நிலத்தில் விழுந்து வணங்கி ஏசாவின்முன் வருகிறார். இந்தப் பணிவு ஏற்கனவே யாக்கோபு ஏசாவின் கோபத்தைத் தணித்து அவர் மனதில் இடம்பிடிக்கவென அனுப்பப்பட்ட பரிசுப் பொருள்களுக்கெல்லாம் மேலானதாக இருந்தது. எனவேதான், யாக்கோபு அனுப்பிய எந்தவொரு பரிசில்களும் வேண்டாம், மாறாக (தொ.நூ 33:8,9) தந்தையின் ஊருக்கு வந்துசேரும்படி அன்புடன் அழைக்கின்றார்.

யாக்கோபுவின் வாழ்வில் பல போராட்டங்கள் ஏற்பட்டு வாழ்வில் பற்பல மாற்றங்கள் ஏற்பட்டபோதும், இறைவன் தன் முன்னோருக்கும் தனக்கும் கொடுத்த வாக்குறுதியை அடைய எடுத்த முயற்சிகளில் வெற்றிகொண்ட முதற்படி இது.

ஆக, வாழ்வில் போராட்டம் தவிர்க்க முடியாததொன்று எனவும், எந்தவொரு மனிதனும் தன் இலக்கையடைய பணிவோடும், நம்பிக்கையோடும் போராடியே வெல்லலாம் எனும் உண்மையையும் இலட்சியத்தில் உறுதியாயிருத்தல் வேண்டும் என்பதையும் யாக்கோபு தனது வாழ்வின்மூலம் காட்டியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்




### பாப்பரசர் வருகையையொட்டிய வாழ்த்துப் பா

## தூயவரே வருக ....!


**கலாபூசணம் அ. அந்தோனிமுத்து, மன்னார்**



முழுமதிபோலத் தண்ணொளி வீசும்
தூயவரே வருக - உம்மை
கனிவுடன் பணிந்து வணங்குகின்றோம் யாம்
இனியவரே வருக!
அருள்மழை பொழியும் ஆனந்த முகிலே
அன்புடன் வந்தருள்க - எங்கள்
மனங்களில் நிறைந்த மாண்புறு தலைவ
மகிழ்வுடன் வந்தருள்க!

இறைகுல விளக்கே இன்பத்தின் சுடரே
இனியவரே வருக - எங்கள்
துயரெல்லாம் அகல, இனியவை பெருக
வளமுடன் எழுந்தருள்க!
கிறிஸ்துவுக்காக உயிர்ப்பலி ஈந்த
சாட்சிகள் எம்முன்னோர் - வாழ்ந்த
வளம்பெறு மன்னார் திருப்பதி சிறந்து
வளம்பெற வந்தருள்க!

கடல் வளத்தோடு தென்னையும் பனையும்
நிறைந்திடும் பதி வருக!
பாலுடன் தேனும், பசுமைசேர் வயலும்
செழித்திடும் பதி வருக!
மாந்தை மாதாஎன அழைத்திடும் அன்னை
மகிழ்வுடன் எழுந்தருளி



மடுத்திருத் தலத்தில் அமைதியோடிருந்து
அருள்மழை பொழிகின்றாள்
நால்வகை மதமும் சேர்ந்தவர் அன்பின்
உறவினில் இணைகின்றார்
அன்னையின் அருளால் உளம்மிக மகிழ்ந்து
நிம்மதி பெறுகின்றார்.

உரிமைகள் இழந்தோம்
உறவுகள் தொலைத்தோம்
வறுமையில் வாடுகின்றோம்
இழப்பதற்கெமக்கினி எதுவுமே இன்றி
அகதிகளாகி விட்டோம்
சொந்த இடங்களில் வாழ்ந்திட எமக்கு
வசதிகள் எதுவுமில்லை
பந்தங்கள் பிரிந்து பண்புகள் சிதைந்து
பாவிகளாகிவிட்டோம் - நாம்

பிரான்சிஸ் பாப்பிறையே உம்மை
வாழ்த்தி நாம் வணங்குகின்றோம்
முதன் முறை மன்னார் திருப்பதி வந்தீர்
அகமிக மகிழ்கின்றோம்
கசங்கிய எங்கள் இழிநிலை வாழ்வு
உயர்ந்திட வேண்டுகின்றோம்
தூயநின் வருகை அருமருந்தாகிட
நலம்பெற வேண்டுகின்றோம் - நாம்

### இறந்த ஆன்மாக்களை நினைவுகூரும் கார்த்திகை மாதச் சிறப்புக் கவிதை

## எது சாட்சி?

**ஆக்கம்:- ச.யேசுதாஸ் CMF**



கருவறைக்கு பிரியாவிடை கொடுத்து
கல்லறைக்குள் புகும்வரை
கணக்கிலடங்கா பிரியாவிடைகள்....
ஒவ்வொரு மின்னலுக்குப் பின்னும்
ஒரு இடி முழக்கம்போல
ஒவ்வொரு சந்திப்பிற்குப் பின்னும் ஒரு பிரிவு நிச்சயம்.
விந்தையான இப்பாரினிலே வந்து வீழ்ந்த மனிதனுக்கு
முதல் பிரியாவிடை கொடுத்தது கருவறை.
இதற்குத் தொப்புள் கொடி சாட்சி.

பாடசாலை வாழ்க்கையோடு
பல நாட்களாக உயிருக்குயிராய்
பழகிய நண்பர்களுக்குப் பிரியாவிடை.
இதற்கு நினைவொப்பம் சாட்சி.



வேலை மாற்றம் பெறும்போது
வேலைத்தளத்தில் பழகிய
நண்பர்களுக்குப் பிரியாவிடை
இதற்கு நினைவுப்பரிசுகள் சாட்சி.

இல்லறத்தில் இணையும்போது
இனிதே வாழ்ந்த வீட்டார்க்கு ஒரு பிரியாவிடை
இதற்கு சகோதரங்களின் கண்ணீர் சாட்சி.

உயிர் பிரியும்போது உடலுக்குப் பிரியாவிடை
இதற்குப் பூதவுடல் சாட்சி.

கல்லறைக்குள் புகும்போது உலகுக்குப் பிரியாவிடை.
நீ வாழ்க்கையை வாழ்ந்தாயா?
அதற்கு எது சாட்சி?

## கொஞ்சம் சிரிங்க

ஆசிரியர்: பரீட்சை பேப்பர்ல ஒரு பக்கம் மட்டும்தான் எழுதி இருக்கிற! வெக்கமா இல்ல?.
மாணவன்: கண்ணா! பண்ணிங்கதான் பக்கம் பக்கமா எழுதும். சிங்கம் சிங்கிள் பக்கம்தான் எழுதும் ....!

..........................

அமல்: ஒரு ரயில் நிதானம் இல்லாமல் தள்ளாடி தள்ளாடி வருது. ஏன் சொல்லு?
விமல்: தெரியலையே
அமல்: அது சரக்கு ஏத்திக்கிட்டு வந்த சரக்கு ரயில்.

..........................

நோயாளி: தினமும் ஒரு பச்சை முட்டை சாப்பிடணுமா...... என்னால முடியாது டாக்டர்.
டாக்டர்: ஏன் முடியாது?
நோயாளி: ஏன்னா எங்க கோழி வெள்ளை முட்டைதான் போடும்.

ஒருவர்: மன்னர் குதிரையை ஏன் அடி பின்னுகிறார்?
மற்றவர்: அது போர்க்களத்தில் புறமுதுகு காட்டி ஓடிவராமல் சண்டையிடப் பார்த்ததாம். அதான்.

....................

அலுவலர் 1: வீட்டில் படுத்தா தூக்கமே வர்ரதில்லை
அலுவலர் 2: ஆமா.......... ஆபிசில் பல குறட்டைச் சத்தத்திற்கு இடையில தூங்கி பழக்கமாச்சே.
யோ. டிசாந், முதலைகுத்தி, உயிலங்குளம்.

....................

கணவன்: (பாடுகிறான்) எங்கே நிம்மதி? எங்கே நிம்மதி அங்கே எனக்கொரு இடம் வேண்டும்
மனைவி: எங்கே வேண்டும்?
கணவன்: நீ இல்லாத இடத்தில்
செ. இருதயநாதன் பறுனாந்து, முத்தரிப்புத்துறை.

## சிறுகதை

**வே. லூட்ஸ் ஜெனிபர்,**
**புனித சவேரியார் பெ. தே. பா**

## ஆறுதல் அளிக்கும் நட்பு

ஜெனி வீட்டில் சோகம்! பல நாட்களாக நோயினால் பீடிக்கப்பட்டிருந்த அவளுடைய அன்பான தாயார் திடீரென்று இறந்துவிட்டார். துயரம் தாங்காத ஜெனி விக்கி விக்கி அழுதாள். "இனிமேல் அம்மாபோல் என்னைப் பார்ப்பவர்கள் யார் இருக்கிறார்கள்? என்னை அன்புசெய்ய யார் இருக்கிறார்?" என்று புலம்பி அழுதாள். ஜெனியினுடைய வார்த்தைகள் அங்கே இருந்தவர்களுடைய மனதை உருகச்செய்தது. ஜெனிக்காக அவர்கள் மிகவும் இரங்கினார்கள்.

ஜெனியின் நண்பி றுமேஷினி தனது பெற்றோருடன் அங்கு வந்திருந்தாள். அவள் ஜெனியின் கைகளைப் பற்றிப்பிடித்துக் கொண்டு அவளுக்கு ஆறுதல் கூறுகின்றாள். "ஜெனி, இனி உனக்கு எவரும் இல்லை என்று சொல்லாதே. நான் உனது நண்பி, அதுமட்டுமல்ல உனக்குச் சகோதரியும்தான். எனது அம்மா உனக்கும் அம்மாதான். நீ கவலைப்படாதே" என்று ஆறுதல் கூறினாள். றுமேஷினியின் அம்மாவும் ஜெனியை அன்போடு அணைத்துத் தழுவிக்கொண்டார். "நான் உனக்கும் அம்மாதான் நீ கவலைப்படக்கூடாது. தைரியமாக இருந்து அம்மாவுடைய ஆன்மாவுக்காக இறைதந்தையிடம் மன்றாட வேண்டும்" என்று ஆறுதல் கூறினார்.

றுமேஷினியனதும் அவர் தாயினதும் ஆறுதல் வார்த்தையைக் கேட்டதும் ஜெனி சற்றே ஆறுதல் அடைந்தாள். றுமேஷினியும் அவள் அம்மாவும் ஜெனிக்கு ஆறுதல் கூறியதை அங்கிருந்தவர்கள் பார்த்தார்கள், கேட்டார்கள். அவர்களும் மகிழ்ச்சியடைந்தார்கள். தன் நண்பிக்கு ஆறுதல் சொல்லி அவள் கண்ணீரைத் துடைக்கும் றுமேஷினியை எல்லோரும் ஆச்சரியத்தோடு பார்த்தனர். அவளைப்பற்றி பெருமையாகப் பேசினர்.

றுமேஷினியைப்போல துன்பவேளையில் துணையிருக்கும், ஆறுதலளிக்கும் நண்பிகள், நண்பர்கள் இன்றைய உலகிற்கு தேவைப்படுகின்றார்கள்.

### எழுத்தாளர்களின் கவனத்திற்கு

காலத்திற்கு ஏற்ற .... கருத்தாழம்மிக்க.....
கவிதைகளை, சிறுகதைகளை,
நகைச்சுவைகளை, துணுக்குகளை எமக்கு
எழுதி அனுப்புங்கள். உங்கள் ஆக்கங்கள்
எதுவானாலும் சுருக்கமாக, இறுக்கமாக,
நறுக்காக இருக்க வேண்டும்.
தரம் கண்டு பிரசுரிப்போம்.
- மன்னா நிர்வாகம் -

### சிரிக்க ... சிந்திக்க ...

பெண்களின் பரிணாம வளர்ச்சி
**Evolution of Women**



ஆண்களின் பரிணாம வளர்ச்சி
**Evolution of Men**



## மன்னா விளம்பரப் பலகை

சின்ன சின்ன செயல்கள்தான் பூரணத்துவத்தை உருவாக்கும்- ஆனால் பூரணத்துவம் என்பது சின்ன விஷயமல்ல.

முடியும் என்று தெரிந்தால் முயற்சி எடு. முடியாது என்று தெரிந்தால் பயிற்சி எடு

விலகி நிற்பவன் வெல்லுவதில்லை. வெல்ல நினைப்பவன் விலகுவதில்லை.

ஒன்றை உபயோகப்படுத்தாவிட்டால் நாம் அதை இழக்கின்றோம்!
பயன்படுத்தாத பணம் அதன் மதிப்பை-இழக்கின்றது.
பயன்படுத்தாத திறமை மங்கிப்போகின்றது.
பயன்படுத்தாத ஆற்றல் குறைந்துவிடுகின்றது.
பயன்படுத்தாத கருவிகள் துருப்பிடித்துவிடுகின்றன.
பயன்படுத்தாத நேரம் காணாமல்போய்விடுகிறது.
பயன்படுத்தாத அனைத்தும் முறைதவறிப் பயன்படுத்தப்படுகின்றன.

நீங்கள் தூங்கும்போது வருவதல்ல "கனவு" உங்களை எது தூங்கவிடாமல் செய்கிறதோ அதுதான் "கனவு"

...............................

நாளைக்கு நல்ல காரியம் செய்வேன் என்று சொல்பவன் முட்டாள். அறிவுள்ளவன் நேற்றே அதைச் செய்து முடித்திருப்பான்.......

மனிதா!
முள்ளாய் இருப்பவர்மீது நீ பூவாய் விழு!
கொள்ளியாய் இருப்பவர்மீது மழையாய் நனை!
உன்னை அவமானங்களால் நாணச்செய்தவர்களை நன்மை செய்து நாணச்செய்.


.....................

பிடிவாதமும் கோபமும் உன் இயலாமையின் வெளிப்பாடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் – 09 மாணவர்களுக்கான வினா – விடைத் தொகுப்பு - 2014 கத்தோலிக்க திருமறை

தொகுப்பு :- திருமதி. ஞானமலர் மரியதாசன், மன்/ புனித ஆனாள் ம.மா.வி, வங்காலை.



01. "............ நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன்" (என் பின்னே வாருங்கள்)
02. "..................... தள்ளிக்கொண்டுபோய், மீன் பிடிக்க உங்கள் வலைகளைப் போடுங்கள்." (ஆழத்திற்குத்)
03. "நான் பாவி, நீர் என்னைவிட்டுப் ................" (போய்விடும்)
04. 'ஆண்டவருடைய ஆவி என்மேல் உள்ளது, ஏனெனில், அவர் எனக்கு ............... (அருள்பொழிவு செய்துள்ளார்)
05. "நீங்கள் கேட்பவற்றையும் காண்பவற்றையும் போய் அறிவியுங்கள் ............. (யோவானிடம்)
06. '...............' என்றும் 'தாம் மாட்சியுறுமாறு ஆண்டவர் நட்டவை' என்றும் அவர்கள் பெயர் பெறுவர். (நேர்மையின் தேவதாருகள்)
07. "......................" என்றார். அவர் நீட்டினார். அது மறு கையைப்போல நலமடைந்தது. (உமது கையை நீட்டும்)
08. "..................." உமக்கு இங்கு என்ன வேலை? எங்களை ஒழித்துவிடவா வந்தீர்? (ஐயா, நாசரேத்து இயேசுவே)
09. "நீ நம்பினால் ................... காண்பாய் என நான் உன்னிடம் கூறவில்லையா?" (கடவுளின் மாட்சியைக்)
10. "......................நான்தான், அஞ்சாதீர்கள்" (துணிவோடிருங்கள்)
11. "உண்மையாகவே நீர் ..............." என்றார். (இறைமகன்)
12. "நாங்கள் ...................கற்பிப்பதை விட்டுவிட்டுப் பந்தியில் பரிமாறும் பணியில் ஈடுபடுவதுமுறையல்ல. (கடவுளது வார்த்தையைக்)
13. ஆண்டவர் அவருக்குத் தோன்றி "அனனியா" என அழைக்க, அவர் ............... "இதோ அடியேன்" என்றார். (ஆண்டவரே)
14. "சவுலே, சவுலே, ஏன் என்னைத் துன்புத்துகின்றாய்? ..................... (ஆண்டவரே நீர் யார்?)
15. "இறையாட்சியின் ............... அறிய உங்களுக்குக் கொடுத்து வைத்திருக்கிறது." (மறைபொருளை)
16. "...................... இவர்களில் ஒருவருக்கு நீங்கள் எதையெல்லாம் செய்யவில்லையோ அதை எனக்கும் செய்யவில்லை என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்." (மிகச் சிறியோராகிய)
17. இனிமேல் ..................... அழுகை இராது துன்பம் இராது. (சாவு இராது, துயரம் இராது)
18. உமக்குள்ள.................... ஏழைகளுக்குக் கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராயிருப்பீர். (யாவற்றையும் விற்று)
19. "இறையாட்சியை ..................... போல் ஏற்றுக்கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார். (சிறுபிள்ளை)
20. ............ சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்குச் செவிசாய்க்கின்றனர். (உண்மையைச்)
21. அன்பு அனைத்தையும் ............க் கொள்ளும் அனைத்தையும் .......... எதிர்நோக்கி இருக்கும், மன உறுதியாய் இருக்கும். (பொறுத்து), (நம்பும்)
22. தந்தையாம் கடவுளின் மாட்சிக்காக ............ என எல்லா நாவுமே அறிக்கையிடும். (இயேசுக்கிறிஸ்து ஆண்டவர்)
23. சிலுவையில் இயேசு சிந்திய இரத்தத்தால் ..................... விண்ணிலுள்ளவை, மண்ணிலுள்ளவை அனைத்தையும் அவர்வழி தம்மோடு ............ கடவுள் திருவுளங்கொண்டார். (அமைதியை நிலைநாட்டவும்), (ஒப்புரவாக்கவும்)
24. கிறிஸ்து இயேசுவை ஆண்டவராக ஏற்றுக்கொண்டீர்கள். அவரோடு .............. வாழுங்கள். (இணைந்து)
25. நீங்கள் கட்டிக்கொண்ட .................. உறுதியாய் நில்லுங்கள் ............. திகழுங்கள். (விசுவாசத்தில்), (நன்றி மிக்கவர்களாகத்)
26. ".................. தம் காலடிகளை மட்டும் கழுவினால் போதும் அவர் ..................... (குளித்துவிட்டவர்), (தூய்மையாகி விடுகிறார்)
27. "நான் .................. உங்களோடு இந்தப் பாஸ்கா விருந்தை உண்பதற்கு மிகமிக ஆவலாய் இருந்தேன். (துன்பங்கள் படுமுன்)
28. "நீ.................. உன்னைக் காப்பாற்றிக்கொள்" (யூதர்களின் அரசனானால்)
29. "இவர் ............ நேர்மையாளர்" என்று கூறிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்." (உண்மையாகவே)
30. "............. இவன் கடவுளின் மெசியாவும், தேர்ந்தெடுக்கப்பட்டவனுமானால் தன்னையே விடுவித்துக் கொள்ளட்டும்" (பிறரை விடுவித்தான்)
31. தம்முடைய பிரிவின் முறைவந்தபோது, .................கடவுளின் திருமுன் ...................... பணி ஆற்றிவந்தார். (செக்கரியா), (குருத்துவப்)
32. "என் இல்லத்தில் ................. பத்திலொரு பங்கு முழுவதையும் கொண்டுவந்து அங்கே களஞ்சியத்தில் சேருங்கள். (உணவு இருக்கும் பொருட்டு)
33. "............ என் உயிரை ஒப்படைக்கின்றேன்." (தந்தையே உம் கையில்)
34. ............. ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை. (தந்தையே இவர்களை மன்னியும்)
35. "நீர் இன்று ............. இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கின்றேன்". (என்னோடு பேரின்ப வீட்டில்)
36. வல்லமையும், இரக்கமும் உள்ள இறைவன் அனைவருக்கும் ...................... வழங்குவார். (தீர்ப்பு)
37. "ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும்............ ஒன்றும் ............... ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைக்கட்டுமா? என்றார். (மோசேக்கு), (எலியாவுக்கு)
38. "நான் உம்மோடு சேர்ந்து ............... உம்மை ஒருபோதும் மறுதலிக்க மாட்டேன்" (இறக்க வேண்டியிருந்தாலும்)
39. "ஆயரை.................... அப்போது மந்தையிலுள்ள ஆடுகள் சிதறடிக்கப்படும்." என்று மறைநூலில் எழுதியுள்ளது. (வெட்டுவேன்)
40. "காலம் நிறைவேறிவிட்டது. ..................... நெருங்கி வந்துவிட்டது .............. நற்செய்தியை நம்புங்கள். (இறையாட்சி), (மனம் மாறி)

# உங்களுக்குத் தெரியுமா? மறையறிவுப் போட்டி- 136

*தொகுப்பு : திரு ச. மாட்டீன் டயஸ்*

இம்மாதத்திற்கான வினாக்கள் எசேக்கியேல் நூலின் 13ம் அதிகாரத்திலிருந்து தொகுக்கப்படுகின்றன. கடந்த பதினொரு வருடங்களாகத் தொடர்ந்துவரும் இப்பகுதிக்கு வாசகர்களின் ஆர்வம் மிகக்குறைவாக இருப்பது மிகவும் வருத்தத்திற்கு உரியது. சுமார் 25 பேர் வரைதான் இதில் ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றார்கள் என்பது ஓர் ஆரோக்கியமான நிலை அல்ல. நீங்கள் வேதாகம நூல்களை ஒன்றன்பின் ஒன்றாக ஆழமாகக் கற்பதற்கு இப்போட்டிகள் வாய்ப்பளிக்கும். ஆகவே, இப்போட்டிகளின் கலந்துகொள்ள உங்கள் நண்பர்கள் உறவினர்களையும் ஊக்குவியுங்கள்.

இறைவாக்கினர் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்களிடம் அனுப்பப்பட்ட அந்நாட்களின் மக்களை நெறிப்படுத்த அல்லது வழிநடத்த சரியான தலைவர்களோ அல்லது அதிகாரம் மிக்கவரோ இருக்கவில்லை. அதனால் மக்கள் சிதறிப்போய் தாம் நினைத்தவாறு வாழத் தொடங்கினர். சிலை வழிபாடுகளில் மூழ்கியிருந்தனர். தம் பிள்ளைகளை அவற்றிற்குப் பலியிட்டனர். விபச்சாரம் செய்தனர். தங்களைத் தாங்களே இறைவாக்கினர்கள் ஆக்கிக்கொண்டவர்கள்தான் மக்களை வழிநடத்தினர்.

இவர்களைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கும்படி எசேக்கியேல் மூலம் இறைவன் மக்களுக்குக் கூறுகின்றார். அடிமைத்தனங்களின்போதும் இப்போலி இறைவாக்கினர் மக்களோடு வாழ்ந்திருக்கின்றார்கள். இவர்கள் தண்டனைத் தீர்ப்புக்குள் உள்வாங்கப்படுவர் எனவும் இறைவன் கூறுகின்றார்.

**தொடர்ந்து நமது வினாக்களுக்கு வருவோம் :**

01. "நான் சீற்றமுற புயற்காற்று சீறியெழும், நான் சினமுற அடைமழை பெய்யும், நான் கோபமுற ஆலங்கட்டிகள் விழும், சுவரும் இடிந்து விழும். நீங்கள் சுண்ணாம்பு பூசிய சுவரை நான் இடித்துத் தரைமட்டமாக்குவேன், அதன் அடித்தளம் பெயர்க்கப்படும். அது விழும்போது அடினடியில் நீங்கள் அழிந்துபோவீர்கள்" இவை இறைவனால் கூறப்பட்ட வார்த்தைகள். யாருக்கு எதிராகக் கூறப்பட்டவை?
02. "இறைவாக்கினரிடம் வந்து, அவர் வழியாக என் திருவுளத்தை அறிய முற்பட்டால் அவர்களுக்கு நானே - ஆண்டவராகிய நானே - சரியான பதிலளிப்பேன்" யாருக்கு?
03. எசேக்கியேலின் 16ம் அதிகாரத்தில் எருசலேம் நகர் எதற்கு ஒப்பிட்டுக் கூறப்படுகின்றது?
04. "ஒருவன் கடவுளின் நியமங்களையும் நெறிமுறைகளையும் கடைப்பிடித்து உண்மையுள்ளவனாக நடந்துகொண்டால் அவன் நீதிமான் ஆவான். அவன் வாழப்போவது உறுதி" என அடித்துக் கூறுவது யார்?
05 இரண்டு இளஞ்சிங்கங்களின் தாயாக உவமிக்கப்படுவது?
06 இஸ்ராயேல் மக்களை எகிப்திலிருந்து விடுவித்து, பாலைநிலத்தின் ஊடாக வழிநடாத்தி வந்த ஆண்டவர், தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தி, தனது நியமங்களை அவர்களுக்குக் கொடுத்து, தனக்கும் மக்களுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின் அடையாளமாக எதைத் தந்தருளினார்?
07. ஆண்டவர் இஸ்ராயேல் மக்களின்முன் ஏசேக்கியேலை வாய்விட்டுக் கதறி அழும்படி கூறுகிறார். ஏன்?
08. எருசலேம் நகர் எதனால் குற்றப்பழிக்கு ஆளானது என எசேக்கியேல் மூலம் எடுத்துச் சொல்லப்படுகிறது?
09. இலஞ்சம் வாங்குவோர், வட்டி வாங்குவோர் பற்றி எசேக்கியேல் மூலம் என்ன சொல்லப்படுகிறது?
10. "அமோனியரை கீழ்த்திசையிருக்கு ஒப்புவிக்கப்போகின்றேன்" என இறைவன் எசேக்கியல் வாயிலாகக் கூறுவது ஏன்?

**மாணவர் மறையறிவுப் பகுதி இல. 133 இற்கான கேள்விகளுக்கு 20 பேர் விடையளித்திருந்தனர்.**

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி**

ம. சாலினி, சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.

## பாராட்டுக்குரியவர்களாகத் தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்

1. செ. ஆன் நியூசிக்கா துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
2. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
3. சுதர்சினி, உமனகரி, நானாட்டான்.
4. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம்வட்டாரம், பேசாலை.
5. அ. கில்டா, கட்டையடம்பன், மடுறோட்.
6. சு. அன்ரனி பொபிக்ஷின், கொக்குப்படையான், சிலாவத்துறை.
7. ம. சாள்ஸ் அன்ரனி, சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.
8. செ. வளன் நிலுஜன் துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
9. கொ. டில்ஷானி குரூஸ், 6ம் வட்டாரம், வங்காலை.
10. த. நிஷாந்தினி, எமில்நகர், மன்னார்.

**தேசிய மட்ட..... 4ஆம் பக்கத் தொடர்ச்சி**

பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற பாராட்டுவிழா நிகழ்வில் வங்காலைப் பங்குத்தந்தை அருட்திரு எஸ். ஜெயபாலன் அவர்களின் ஆசியுரையுடன், மன்னார் வலய முன்னாள், இந்நாள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாராட்டுரை வழங்கினர்.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கும், பயிற்றுவித்த ஆசிரியர்களுக்கும் பரிசில்களும் வழங்கப்பட்டன. கல்லூரி முதல்வர் அருட்சகோதரர் எஸ். சந்தியோகு (FSC) தலைமையிலும், வழிநடத்துதலிலும் இந்நிகழ்வு இடம்பெற்றது. பாடசாலை அபிவிருத்திக்குழு மற்றும் பாடசாலை பழைய மாணவர் சங்கம் ஆகியன இந்நிகழ்வுக்கு சிறப்பான பங்களிப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பழைய மாணவர் சங்கச் செயலாளரின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவெய்தியது.

**தகவல்: எஸ். சூசைநாயகம் றெவல் (JP), செயலாளர்**

மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையம்

கலையருவியின் முயற்சிகளுக்கு உங்கள் ஆதரவைத் தாரீர்!

மன்னார் மறைமாவட்ட

கத்தோலிக்க அருங்காட்சியகம்

ஏறக்குறைய 500 வருட நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டதான மன்னார் கத்தோலிக்க திருச்சபையின் புராதன வரலாற்றுச் சின்னங்களை, கத்தோலிக்க அடையாளங்களை பேணிக் காக்கவும், காட்சிப்படுத்தவும் மேற்படி அருங்காட்சியகத்தை அமைக்கவுள்ளோம்.

உங்கள் பங்கில், ஆலயத்தில், வீடுகளில் உள்ள பழைய சுருவங்கள், சிலுவைகள், பூசைப் புத்தகங்கள், நாட்டுக்கூத்து ஏடுகள் போன்ற அரிய, புராதன, புனிதப் பொருட்களை எமது நிலையத்திற்கு தந்து உதவுங்கள்.

மன்னார் மறைமாவட்ட

கத்தோலிக்க நூல் நிலையம்

பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பல்வேறு மட்டத்தில் கற்கைநெறிகளை மேற்கொள்ளும் மாணவர்கள், ஆய்வாளர்கள் மற்றும் இறையியல், மறையியல் கல்வியில் ஆர்வமுள்ள குருக்கள், துறவியர், பொதுநிலையினர் போன்றோரின் அறிவுத் தேடலை பூர்த்திசெய்யும் வகையில் தரமான நூல் நிலையம் ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்கின்றோம். உங்களிடம் இருக்கக்கூடிய, நீங்கள் வாசித்த, பெறுமதியான, உங்களால் பாதுகாக்க முடியாத நூல்களை எமது நூல் நிலையத்திற்கு தந்து உதவுங்கள்.

அருங்காட்சியகப் பொருட்களை, நூல்களை உங்கள் இடங்களுக்கு நேரடியாக வந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம். இது தொடர்பாக எம்மோடு தொடர்புகொள்ளுங்கள்.

இயக்குனர், கலையருவி, தொலைபேசி இல. 023.- 2250789, 023 - 3233276

**நீத்தார் நினைவு தொடர்பான அறிவித்தல்**

நீத்தார் நினைவுப் பகுதியில் உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகளைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டண விபரம் :** கறுப்பு வெள்ளை 4,500/= கலர் 7,500/= (மன்னா இணையத்தளத்திலும் இந்த நினைவுகள் இடம்பெற வேண்டுமாயின் மேலதிகமாக ரூபா 2,000 செலுத்தவும்)

மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar

பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA

வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 0200200629782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.148
## விடுதலைப்பயணம் 1முதல் 40 அதிகாரங்கள்

உங்கள் விடைகளை டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். (பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 03 | | | 04 | | | 16 | 05 |
| ❖ | | | 06 | ❖ | | 07 | | 08 | |
| | | | 10 | 11 | 12 | 13 | | | ❖ |
| 02 | 09 | | ❖ | | | | | | 15 |
| | ❖ | 36 | | | 14 | | | | 26 |
| | ❖ | | 34 | | | 33 | | | ❖ |
| | 31 | | | | ❖ | | 17 | 29 | ❖ |
| 28 | | 32 | 22 | | | ❖ | 25 | 24 | |
| | | 35 | ❖ | | 30 | | | 23 | |
| 19 | | 20 | | 21 | 27 | ❖ | | | 18 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(—— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்
1. இதோ நான் அங்கே ஓரேபில் உள்ள—— நீ பாறையை .........
3. எனவே ............... வேலையாள் அவர்களை—— அவர்கள்மேல் நியமிக்கப்பட்டனர்.
4. அந்நாளில், என் மக்கள் தங்கியிருக்கும்——காட்டுவேன். அங்கு——எவையுமே ....................
9. இஸ்ராயேல் மக்கள் மோசேயின் —— முகத்தோற்றம்............ மயமாயிருக்கும்.
13. மூன்றாம் நாள் பொழுது புலரும் நேரத்தில் ............... முழங்கியது.
19. அவர்கள் எப்பொழுதும் மக்களுக்கு .................... வழங்கட்டும்.
20. ஆண்டவர் மோசேயை நோக்கி, இறங்கிச்செல். மக்கள்——எல்லை...............வராதபடியும்——எச்சரிக்கை செய்.
23. .............உச்சியில் ஆண்டவரது —— மக்களின் கண்களுக்குத் தெரிந்தது.
24. கெருபுகள் ..............இறக்கைகளை மேனோக்கி —— மூடியவாறு இருந்தன.
30. அதற்குரிய தட்டுகள், கிண்ணங்கள்——செய்ய வேண்டும் ............ பொன்னால் அவற்றைச் செய்க.
31. இஸ்ரயேல் அணிவகுப்புக்கு .................... சென்று கொண்டிருந்த—— பின் வந்து நின்றார்.
34. ............ கடவுளின் கைவன்மையே என்றனர்.

### வலமிருந்து இடம்
6. எனவே .................. தோறும் இந்த நியமத்தை—— நிறைவேற்ற வேண்டும்.
7. மார்புப்பட்டை, எப்போதும் போலவே——செய்யப்பட்டது. .................... பொன்னாலும்—— செய்யப்பட்டிருந்தது.
8. திருஉறைவிடத்தின் பின்புறமாகிய மேற்றிசைக்காக ...................... சட்டங்கள் செய்தார்.
10. இவற்றுள் ஐந்து ............... திரைகளை ஒன்றாகவும்——இணைத்துவிடு.
14. மக்கள் .................. போய்விட்டார்கள் என——பார்வோனின் மனமும் அவன்——மாற்றம் கண்டது.
15. உன் கடவுளாகிய ஆண்டவர்—— உன் தாயையும் மதித்து ...........
16. ஆரோனின் திருநிலைப்பாட்டிற்கான செம்மறி................

### மேலிருந்து கீழ்
2. எகிப்தின் கொடுமையிலிருந்து கானானியர்—— பாலும் தேனும் பொழியும்—— நடத்திச்.......... வேன் என்று அறிவிப்பாய்.
5. நான் என் பெயரை நினைவுபடுத்தச்—— உன்னிடம் வந்து உனக்கு ............. வழங்குவேன்.
11. இதனால் அவன் ஆண்டவர் திருமுன் தூயகத்தில்——அதன் ............... கேட்கும்.
12. ................. மங்கும் வேளையில் ஆரோன் விளக்குகளை—— நறுமணப்பொருள் எரிப்பானாக!.
13. மோசேயை நோக்கி, நீர் எங்களோடு ..............
14. .................. ஆட்டினை உண்ண ஒரு வீட்டில்—— அண்டை வீட்டாரைச் சேர்த்துக்கொள்ளட்டும்.
25. " .................. சார்பில் தேவையான ஆள்களைத் தேர்ந்தெடு.
36. இரு .................... சங்கிலிகளையும்—— இரு வளையங்களில் மாட்டிவிடு.

### கீழிருந்து மேல்
2. மன்னரைக் குறித்து ......... கவிதை புனைகின்ற போழ்து——
3. வான் .......... அவர்தம் கைகளின் வேலைப்பாட்டை விவரிக்கின்றது.
5. அவரது ................ லில் அவரது திருவுளத்தைக் கண்டறிய வேண்டும்.
7. ஆண்டவர் என் அழுகுரலுக்கு ................. சாய்த்து விட்டார்.
10. .................... வழியை ஆண்டவரிடம் ஒப்படைத்துவிடு.
11. வெஞ்சினம் கொள்ளாதே. வெகுண்டெழுவரை விட்டுவிடு .................... ச்சலடையாதே.
13. கெருபுமீது அவர் ..................ப் பறந்து வந்தார்.
15. எளியோரின் ................ ஒருபோதும் வீண்போகாது.
18. நான் என் ............... வயிற்றிலிருந்தது முதல் என் இறைவன் நீரே.
19. ................ நீர் நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார்.
22. அவர் நீரோடையோரம் நடப்பட்ட ............... போல் இருப்பார்.
25. ஏனெனில் ................ போது அவர்கள் எதையும் எடுத்துப் போவதில்லை.
30. ................ அளிக்கும் விடுதலையால் என் இதயம் களிகூறும்.
31. என் கண்ணீரைக் ................ டும் மௌனமாய் இராதேயும்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 146ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:

**முதலாம் பரிசு:**
திருமதி. பிளண்ரீனா
திருக்குடும்ப கன்னியர்மட வீதி
சின்னக்கடை, மன்னார்.

**இரண்டாம் பரிசு:**
ஆ. மேரி யோசப்பின்
மாதிரிகிராமம், வங்காலை.

**மூன்றாம் பரிசு:**
கி. பிரஷாந்
309, வீரபுரம், நேரியகுளம்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 45 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 40 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 146ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. பி. இன்வன்ரா சோசை, 1ம் வட்டாரம், வங்காலை.
02. திருமதி. ரஜனி எட்வின், உவர்மலை, திருமலை.
03. பி. ஜனகன் வென்சஸ் சோசை, கொ.துறை, யாழ்ப்பாணம்.
04. யே. அனோஜா பீரிஸ், கொவ்வங்குளம், நானாட்டான்.
05. கி. டொறிஸ் மீனா, நாச்சிக்குடா, முழங்காவில்.
06. ம. சுதர்சினி, உமனகரி, நானாட்டான்.
07. எ. கில்டா, கட்டையடம்பன், நானாட்டான்.
08. ரொ. ஸ்ரெலா, இல-50, வீரபுரம்.
09. எஸ். நிர்மல், இலுப்பைக்குளம், நேரியகுளம்.
10. கி. தனுஷா, நேரியகுளம், வவுனியா.
11. ஐ. இருதயமேரி, ஆசிக்குளம், வவுனியா.
12. கே. துளசிகா, பண்டியன்குளம், நட்டாங்கண்டல்.
13. அ. மரிஸ்ரெலா, மாதா கிராமம், மடுறோட்.
14. அ. நிறோஜன் ஸ்ரனி, பெரிய குஞ்சுக்குளம்.
15. அ. அனற்றா, பெரிய குஞ்சுக்குளம்.
16. லி. டிறோன்ஷன், 7ம் வட்டாரம், வங்காலை.
17. திருமதி. சூசைநாயன் குணசீலி, ப.கோட்டை, நானாட்டான்.
18. லீ. டெய்சி, பெற்றா, மன்னார்.
19. கமலா கிறிஸ்தோப்பர், கொன்வென்ற் வீதி, மன்னார்.
20. டெபோறா மோகன்ராஜ், புகையிரத நிலைய வீதி, மன்னார்.
21. கத்தறின் சேவியர், பெரியகடை, மன்னார்.
22. அ. புளோறன்ஸ், கங்காணிதீவு, நானாட்டான்.
23. செ. அனுசியா சூஞ்ஞ, அரிப்பு மேற்கு, அரிப்புத்துறை.
24. என். சி. ஜெகஜீவன் றோச், பள்ளிமுனை, மன்னார்.
25. பி. சுவிட்ஷன் குலாஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
26. சு. அன்ரனி பொபிக்ஷன், சிலாவத்துறை, மன்னார்.
27. வே. நெவிஸ்றாஜ், பிச்சகுளம், முருங்கன்.
28. ரி. டக்ஷாஜினி, சின்னக்கடை, மன்னார்.
29. அகுஸ்தீன் இசக்கியேல், ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.
30. கி. றினேரி, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
31. ஜெ. ஜேன் வெரோனிக்கா, பேசாலை.
32. எவ். பிவிலியன், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
33. ப. அன்ரனிற்றா, பேசாலை.
34. பி. பிறாங்கோ லியோன், முத்தரிப்புத்துறை.
35. செ. த. பெனில்டஸ் தற்குரூஸ், தலைமன்னார்.
36 ச. அனோஜன், உயிலங்குளம், மன்னார்.
37. கே. கிளரன்ஸ் மரினோ, எமில்நகர், மன்னார்.
38. ட. யோசேப்பின், பள்ளிமுனை, மன்னார்.
39. ஏ. எஸ். டயனி ரெனிஷா, பள்ளிமுனை, மன்னார்.
40. மே. கிறிஸ்ரோபர், 18 கோவில் வீதி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
41. மா. வைலற் மேரி பறுனாந்து, அரிப்பு மேற்கு. அரிப்புத்துறை.
42. ம. நிதர்சன், பெற்றா, மன்னார்.
43. ச. சினேகா, முத்தரிப்புத்துறை.
44. ஆ. தபிசன் குரூஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
45. எஸ். சர்மிலா, கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்.
46. சி. நோயல் கிறிஸ்ரி றோச், மாவட்ட நீதிமன்றம், மன்னார்.
47. ஜோ. றியோன்சி, நானாட்டான்.
48. ஆர். மீரா, பள்ளிமுனை, மன்னார்.
49. எக்ஸ். சி. பேரின்பநாயகம், சின்னக்கடை, மன்னார்.
50. எஸ். ஜஸ்மின் கசில், நானாட்டான்.

## இல.146 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| * | 4 ந | ரி | லை | * | 9 ஐ | 21 ம | ரி | யா | * |
| 17 யோ | * | ச 8 | மா 13 | ரி | ய | ர் | பொ 7 | * | சா 3 |
| னா | வு | மா 28 | ர் | 2 போ | ம் | த | ய் | ம் | க 26 |
| மி 29 | டி | ஒ 5 | த் | கி | ங் | தூ 16 | க் | க | வ |
| * | மு 23 | ய் | தா | * | * | ய் | * | மே 27 | லை |
| 14 நி | றை | வு | ர் | தே | அ 10 | மை | தி 12 | 20 நீ | * |
| ன் | ம 19 | லை | சே | ட | து | வி | ரை | து | இ 24 |
| றா | ழை | லே | 1 ஆ | ட் | சி | 18 ஆ | வீ | ர் | ங் |
| ர் | * | ர | டை | மூ | ன் | று | தூ 25 | * | கே |
| * | கை | கு 15 | ங் | தீ 11 | * | 22 பே | து | ரு | * |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.147ற்கான முடிவுகளை 2014ம் ஆண்டு டிசம்பர் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## பாப்பரசரின் இலங்கை விஜயம் ....
5ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்தச் செயற்பாடுகள் துன்பத்திலிருப்பவர்களை மேலும் துன்பப்படுத்துவதாகவே இருக்கின்றது.

### நல்லிணக்க ஆணைக்குழு

நாட்டின் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகவும் இனங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும் அரசாங்கத்தினால் கற்றுத்தந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தார்கள். ஆணைக்குழு முன்னிலையில் பல்வேறு சாட்சியங்கள் பதியப்பட்டிருக்கின்றன. இறுதியில் ஆணைக்குழு தனது அறிக்கையையும் சமர்ப்பித்து விட்டது. ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டது.

அந்நிலையில் 2013ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடரில் இலங்கைக்குழுவிற்கு தலைமையேற்று பங்கேற்றிருந்த மகிந்த சமரசிங்க நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் 95 சதவீதமான விடயங்கள் பூர்த்தியாக்கப்பட்டுவிட்டதாக அறிவித்தார். பின்னர் இந்தாண்டு இலங்கைக்குழுவிற்கு தலைமையேற்று ஜெனிவா சென்றிருந்த வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் 35 சதவீதமான விடயங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டதாக கூறுகின்றார். ஆனால் உண்மையிலேயே இங்கு எந்தவிதமான செயற்பாடுகளுமே முன்னெடுக்கப்படவில்லை. அவ்வாறான நிலையில் எவ்வாறு நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

### சாட்சியங்களுக்கு பாதுகாப்பில்லை

தற்போது ஜனாதிபதி காணாமல்போனோர் தொடர்பான ஆணைக்குழு சாட்சியங்களை பதிவுசெய்து வருகின்றது. இந்த ஆணைக்குழுவில் சாட்சியமளிப்பவர்களுக்குக்கூட பாதுகாப்பு உத்தரவாதமில்லாத நிலைமையே காணப்படுகின்றது. புலனாய்வாலர்கள் என்ற போர்வையில் உள்ளவர்களால் இவர்கள் அச்சுறுத்தப்படுகின்றார்கள். அதேபோன்றுதான் சர்வதேச விசாரணைக்கான சாட்சியமளிப்பதிலும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் காணப்படுகின்றன. சாட்சியமளிப்போரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவேண்டியது யாருடைய கடமை என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

## வங்காலைப் பங்கில்... 5ஆம் பக்கத் தொடர்

முதலில் புனித சூசையப்பர் முதியோர் சங்கக் கொடி முதன்மை விருந்தினரால் ஏற்றப்பட்டது. இவ்வேளை புனித சூசையப்பரின் பா இசைக்கப்பட்டது. பட்டாசு வெடிகளும் முழக்கமிட்டன. இதன்பின் மண்டபத்துள் இறைவழிபாடு ஆரம்பிக்கப்பட்டு வரவேற்பு நடனம் நடைபெற்றது. சங்க மரபுப்படி நிகழ்வுகள் தலைவர் தலைமையில் நடைபெற்றன. இடைவேளையின்போது முதியோருக்கான விளையாட்டுக்கள் பேராசிரியர் சூசை ஆனந்தன் மற்றும் முன்னாள் மாவட்ட விளையாட்டு உத்தியோகஸ்தர் திரு. எமில் சோசை ஆகியோரால் சிறப்பாக நடாத்தப்பட்டது. கலைநிகழ்வுகளும், நாட்டுக்கூத்து நிகழ்வும் இடம்பெற்றன.

இதனைத் தொடர்ந்து முதன்மை விருந்தினர், கௌரவ விருந்தினர்களுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவமளிக்கப்பட்டதுடன் தலைவர் அவர்களால் சிறப்பான நினைவுச் சின்னங்களும் வழங்கி பாராட்டுக்களும் நன்றிகளும் தெரிவிக்கப்பட்டன. முதன்மை, கௌரவ, சிறப்பு அதிதிகளால் சிறப்புரைகள் நிகழ்த்தப்பட்டன. இவர்களின் உரையில் வடமாகாணத்தில் இயங்கும் முதியோர் சங்கங்களில் சிறந்த முதன்மைச் சங்கமாக வங்காலை முதியோர் சங்கம் திகழ்வதாக பாராட்டப்பட்டதுடன் சங்கத்தின் தலைமைத்துவமே இந்த சிறப்புக்கு காரணமெனவும் தெரிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வழிநடத்த ஏனையோருக்கும் பயிற்சி அளிக்கப்பட வேண்டுமென்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது.

சகல உறுப்பினர்களுக்கும் பெறுமதிமிக்க உடுப்பு வகைகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இறை நன்றிக் கீதத்துடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

## 82 தற்காலிக..... 3ஆம் பக்கத் தொடர்ச்சி

இதனைத் தொடர்ந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோகராதலிங்கம், சிவசக்தி ஆனந்தன், வடக்கு மாகாணசபை அமைச்சர்களான ப.சக்தியலிங்கம், பா. டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரனி பிரிமூஸ் சிராய்வா, ரிப்கான் பதியுதீன், முசலி பிரதேச செயலாளர் எஸ். கேதீஸ்வரன், அமைச்சர் ரிசாத் பதியுதீனின் இணைப்புச் செயலாளர் என். எம். முனவ்பர், மன்னார் குருமுதல்வர் விக்டர் சோசை ஆகியோர் கலந்துகொண்டு அடிக்கல்லை நட்டுவைத்தார்கள்.

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்கு பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவிற்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம் - பதிப்பாசிரியர்

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, MANNA
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 26 01 1947



உதிர்வு 08 11 2013

### திரு. அ. மரியதாஸ் அன்ரனி (மணி)

மன்னார் (கனடா)

ஆண்டொன்று ஓடி மறைந்தாலும் உங்கள் நினைவு மாறாது. உங்கள் இழப்பு எங்களுக்கு என்றும் ஆறாத்துயரமே! ஆண்டவரில் உங்கள் ஆன்மா நித்திய சாந்திபெற தினம் தினம் வேண்டுகின்றோம்.

*அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 2014 - 11 - 08 சனிக்கிழமை காலை 11. 00 மணிக்கு கனடா ஸ்காபரோ புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்திலும், காலை 6.00 மணிக்கு மன்னார் புனித மரியன்னை ஆலயத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். இதில் கலந்து இவரின் ஆன்ம சாந்திக்காக செபிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

*பிரிவால் துயருறும்: திருமதி மரியதாஸ் (மனைவி) கனடா, பிள்ளைகள், மைத்துனன்மார்கள், மைத்துனிமார்கள்.*

## 9ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 10 1934



உதிர்வு 08 11 2005

### திருமதி. பே. செபமணி அருளம்மா

(முருங்கன் கமம், முருங்கன்)

"இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவசிக்கின்றோமே. அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கூடக் கொண்டுவருவார்"
(1. தெச 4: 14)

ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
நீங்கள் காட்டிய அன்பும்
நீங்கள் சொன்ன அறிவுரைகளும்
நீங்கள் நடந்த நல்வழியும்
எம் மனதில் நீங்காது உள்ளது - அம்மா
நீங்கள் என்றும் இறைவனின் சந்நிதியில்
இன்புற்று வாழ இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

*உம் பிரிவால் துயருறும்: கணவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவுகள்.*

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 04 1941



உதிர்வு 14 11 2012

### திரு. செபஸ்ரியாம்பிள்ளை

(ஒலிமடு, நானாட்டான்)

அன்பினால் எம்மை அணைத்து
அணையாத ஒளிவிளக்காய் இருந்தவரே
ஆண்டு இரண்டு ஆனாலும்
ஆறமுடியவில்லை உம் பிரிவை எண்ணி.

உலகத்தில் உம் பிள்ளைகள் நாம்
உயர ஏணியாக இருந்தவரே
ஏற்றத்தில் எம்மோடு இல்லாமல்
எம்மைவிட்டுப் பிரிந்தது ஏன்?
ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
அத்தனைக்கும் நீர் தந்தையாகி
இரஞ்சுகின்றோம் இறைவனிடம்
இருகரம் கூப்பி .... இன்றல்ல என்றும்.....!

*உம் பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்*

## 7ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 04 1928



உதிர்வு 06 11 2007

### திருமதி. அற்புதம் சவிமுத்து

ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்


(புத்திரகண்டான், முருங்கன்)

"ஆண்டவர் தம் அன்பர்களின் மரணம் அவரது பார்வையில் மிக மதிப்புக்குரியது"

அம்மா என்னும் சொல்லுக்கு பெருமையாய் அர்த்தம் சேர்த்து பேர் புகழுடன் பிள்ளைகள் எம்மை ஆளாக்கினீர்கள்.
உங்கள் அன்பால் அகமகிழ்ந்தோம், அணைப்பால் ஆறுதல் அடைந்தோம், பிரிவால் வெறுமையானோம்.
உங்கள் துன்பம் மறந்து எமக்கு இன்பம் தந்தீர்கள். அம்மா! இல்லத்தில் எங்கு சென்றாலும் உங்கள் நினைப்பே. என்றும் ஆறாது உம் இழப்பு. ஆண்டவன் அடியில் உங்கள் ஆன்மா அமைதிபெற வேண்டுகின்றோம் அம்மா!

*நீங்கா நினைவுகளுடன்:*
*பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை (ஆர்த்தி)*
*தகவல். மகள். செ. நவறோஸ் (குஞ்சு)*

## 8ம் ஆண்டு நினைவஞ்சலி — 2 1/2 ஆண்டு நினைவஞ்சலி



திரு. வ. யேசுரத்தினம்



திருமதி. பிரிசில்லா ராசமலர் யேசுரத்தினம்

### பெற்றா, மன்னார்

மலர்வு : 08 - 12 - 1929
உதிர்வு : 07 - 11 - 2006

மலர்வு : 28 - 08 - 1926
உதிர்வு : 15 - 04 - 2012

"இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவசிக்கின்றோமே. அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்"
(1.தெச 4: 14)

எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
எம்மனங்களிலே நீங்கள் என்றும்
மங்காமல் வாழ்வீர்கள்!

உம் பிரிவால் துயருறும் : குடும்பத்தினர்.
*தகவல். மகள். Dr. திருமதி. ரதனி யூட்*

## நற்கருணை அன்னை புதல்வியர் .....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

கண்டி மறைமாவட்டத்தில் உள்ள சோளங்கந்தை என்ற இடத்தில் புனித செபஸ்தியார் ஆலயத்தில் இந்த முதல் அர்ப்பணம் வழங்கும் சடங்கு இடம்பெற்றது. இவருடன் மேலும் நான்கு பேர் அன்றைய தினம் தமது முதல் அர்ப்பணத்தை வழங்கினார்கள்.

அருட்சகோதரி அக்னெஸ் டிமெல் அவர்கள் திரு. திருமதி இயேசுதாசன் டிமெல், சகுந்தலா வாஸ் தம்பதிகளின் இளைய புதல்வி ஆவார். இவர் கடந்த ஒக்ரோபர் மாதம் 22ஆம் திகதி எழுத்தூர் பங்கின் கீரி கிராமத்தில் அமைந்துள்ள நற்கருணை ஆலயத்தில் நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். அருட்தந்தை தமிழ் நேசன் தலைமையில் இடம்பெற்ற இந்நன்றித் திருப்பலியில் அருட்தந்தையர்களான இ. செபமாலை, எமில் எழில்ராஜ், சுதர்சன் (அமதி), ஜெகத் (அமதி) ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

'நற்கருணை அன்னை புதல்வியர் சபை (Daughters of Our Lady of Eucharist ) என்ற இந்தத் துறவற சபையில் மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து முதன் முதலாக அருட்சகோதரியாக வந்தவர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. இச்சபையின் தலைமை இல்லம் உரோமையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு புனித சிசிலியா ....

11ஆம் பக்கத் தொடர்ச்சி

கடவுள் வணக்கத்துடனும், தற்போதைய அதிபர் அருட்சகோதரி அருள் மரியாவின் வரவேற்புரையுடனும் ஆரம்பித்த நிகழ்வுகளில், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் தீசன் ஜெயராஜ், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் பாஸ்கரன், மண்முனை வடக்கு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சுகுமாரன், கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி. மௌனகுரு, மட்டக்களப்பு மாவட்டச் செயலாளரும், அரசாங்க அதிபருமான திருமதி. பி. எஸ். எம் சார்ள்ஸ், ஆயர் ஜோசப் பொன்னையா ஆகியோரது சிறப்புரைகள் இடம்பெற்றன. அருட்சகோதரி எலிசபெத்தின் சகோதரர் கலாபூஷணம் செ. மாசிலாமணியின் வாழ்த்துப்பா இடம்பெற்றது. மாணவிகள், ஆசிரியர்கள், பழைய மாணவிகளினால் ஓய்வுபெற்ற அதிபரின் சேவைக்காலச் சாதனைகளைப் பாடல்களாக, நடனங்களாக கலகலப்பூட்டும் வடிவங்களாக நிகழ்த்தப்பட்டன.

பாடசாலைச் சமூகத்தின் சார்பாக வாழ்த்துப்பா இசைக்கப்பட்டு, ஓய்வுபெற்ற அதிபரிடம் கையளிக்கப்பட்டது. பாடசாலை உயர்தர கலைப்பிரிவுப் பகுதித் தலைவர் திருமதி அமுதா வரதராஜாவை பிரதம ஆசிரியராகக் கொண்டு அழகான சிறப்பு மலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

இறுதியில் ஓய்வுபெற்ற அதிபர் அருட்சகோதரி எலிசபெத் நன்றி கூறும் ஏற்புரையை நிகழ்த்தினார். பாடசாலைச் சமூகத்தினரும், பழைய மாணவிகளும், மாவட்டப் பிரமுகர்களும் மலர் மாலைகளினால் அருட்சகோதரி எலிசபெத்தை நிறைத்தும், அவரது ஆசீரைப் பெற்றும் தமது அன்பை வெளிக்காட்டினர். அருட்சகோதரி எலிசபெத் 2010இல் அதிசிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருதினைப் பெற்றிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற அருட்சகோதரி எலிசபெத் அவர்கள் தற்போது மன்னார் அடம்பன் கார்மேல் இல்லத்தில் இருந்து பணியாற்றிக்கொண்டிருக்கின்றார்.

## இலங்கை ஜனாதிபதி .........

1ஆம் பக்கத் தொடர்ச்சி

இச்சந்திப்பை அடுத்து ஜனாதிபதி வத்திக்கான் இராஜாங்க செயலாளர் கர்தினால் பீற்றோ பரோலின் (Pietro Parolin) அவர்களுடன் இலங்கை விடயம் தொடர்பாகக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின்போது குறிப்பாக இலங்கையின் அண்மைக்கால சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

எதிர்வரும் ஜனவரி மாதம் இடம்பெறவுள்ள திருத்தந்தையின் பயணமானது ஒற்றுமையின் அடையாளமாகவும் நீதி, சமாதானம், நல்லிணக்கம், நாட்டின் பொது நன்மைகளை வேண்டிநிற்கின்றவர்களுக்கான ஊக்கமளிப்பின் தருணமாகவும் வரவேற்கப்படும் என்றும் இந்தச் சந்திப்பின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

இச்சந்திப்பின்போது ஜனாதிபதியும் பாரியாரும் திருத்தந்தைக்கு பரிசுப்பொருட்களைக் கையளித்தனர்.

## குடும்பம் பற்றி விவாதித்த .......

9ஆம் பக்கத் தொடர்ச்சி

குடும்பங்கள் இவ்வாறு மகிழ்ச்சியோடு வாழும்போது திருமண அன்பு மற்றும் குடும்ப அன்பின் அழகையும், எளிமையையும், உறுதிப்படுத்த திருச்சபை இயங்குகின்றது. குடும்பங்கள் பிளவுபட்டிருக்கும்போது பிள்ளைகளின் அமைதியான இதயம் சீர்குலைகின்றது என்று கூறினார் ஸ்காட்லாண்ட் பேராயர் பிலிப் ரார்ற்றக்லியா (Philp Tartaglia) ஆண்டகை அவர்கள்.

பொதுநிலையினர் திருமதி. அலிஸ் கென்சன் (Alice Heinzen) கருத்துக் கூறுகையில், ஞாயிறு திருப்பலி, மாலையில் செபமாலை செபிப்பது, நோயாளிகளைச் சந்திப்பது, ஏழைகளுக்குச் சேமித்து வைப்பது, நித்திரைக்குப் போகுமுன் செபிப்பது போன்றவை இன்றைய கத்தோலிக்க குடும்பங்களில் மறைந்துவருகின்றன என்றார். இவ்வாறாக மாமன்றத்தில் கலந்துகொண்ட தம்பதிகள் தங்கள் கருத்துக்களையும், சிந்தனைகளையும் வழங்கினர். இம்மாநாடு 19ம் திகதிவரை நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## இணைபிரியாத இல்லற வாழ்வில் 40வது ஆண்டு விழா வாழ்த்து



(08. 11. 1974 - 08. 11. 2014)

**திரு. திருமதி. சந்தியாப்பிள்ளை புஸ்பவதி**

(பெரிய நொச்சிக்குளம், நேரியகுளம்.)

வாழ்க்கையின் சவால்களை
சாதனைகள் ஆக்கிய எம் பெற்றோரே.
சிலுவைகளை நாளும் சுகமாய்ச் சுமந்தவர்களே!
அன்பே கடவுள் என்றால் அவ்வன்பிற்கு இணை ஏதுமில்லை.
அந்த அன்பே எமக்கு நீங்கள்தானே!
நாற்பது ஆண்டுகளாய் சோதனைகள், வேதனைகள்
அனைத்தையும் அணைத்துக்கொண்டீர்களே!
நன்றியும் வாழ்த்தும் நயமுடன் நவில்கின்றோம்.

வாழ்த்துக்கள் கூறும் :
மகள், மகன்மார், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## கலையருவி வழங்கும் விசேட சேவைகள்

மன்னார் மறைமாவட்டச் சமூகத்தொடர்பு அருட்பணி மையம் 'கலையருவி' இறைமக்களின் நலன்கருதி பின்வரும் விசேட சேவைகளை முன்னெடுத்துள்ளது.

### பைபிள் டயறி

2015ஆம் ஆண்டிற்கான பைபிள் டயறிகளைப் பெறவிரும்புவோர் எம்மோடு தொடர்புகொள்ளலாம். புனித பவுல் சபையினரின் வெளியீடாக வந்துள்ள (பிளாஸ்ரிக் கவரை உடையதான) 'அருள்வாக்கு 2015' என்ற பெயரைக்கொண்ட இந்த பைபிள் டயறியின் விலை 200 ரூபா ஆகும். இவற்றைப் பெறவிரும்பும் பங்குத்தந்தையர்களும் ஏனையவர்களும் எம்மோடு தொடர்புகொண்டு முன்பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

### விழிப்புணர்வு பனர்கள்

திருத்தந்தையின் வருகைக்கு மக்களை ஆயத்தம் செய்யும்முகமாகவும், திருத்தந்தையின் வருகை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் கலையருவியினால் பல்வேறு அளவுகளில் பனர்கள் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. உங்கள் ஆலயங்களில், கிராமங்களில் இவற்றைக் காட்சிப்படுத்த விரும்புவோர் எம்மோடு தொடர்புகொள்ளலாம்.

500/=, 750=, 1000/=, 1500/= ஆகிய நான்கு விலைகளில், நான்கு அளவுகளில் இந்த பனர்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

### கிறிஸ்மஸ் பாடல் இறுவட்டு

பழைய, புதிய, தமிழ், ஆங்கில கிறிஸ்மஸ் பாடல்கள் அடங்கிய இறுவட்டுக்கள் விற்பனைக்கு உண்டு. கிறிஸ்மஸ் காலங்களில் இவை தேவைப்படுவோர் கலையருவியில் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : இயக்குனர், கலையருவி,
தொ.பே. 023 - 2250789, 023 - 3233276

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.தொம்மை இருதயராஜா குரூஸ்.**

(B.A, Dip. in. Edu) S. L. P. S - 2-I)

மன்/ பரிகாரிகண்டல் றோ. க. த. க. வித்தியாலய அதிபர் அவர்கள் தனது அர்ப்பணிப்பான சேவையின் பிரதிபலனாக 06.10.2014 திங்கட்கிழமை மஹரகம தேசிய கல்வி நிறுவகத்தில் அதிமேதகு பிரதமர் டி. எம். ஜயரத்தன தலைமையில் நடைபெற்ற ஆசிரியர்தின விருது வழங்கும் நிகழ்வில் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் சிறந்த ஆசிரியருக்கான உயர் ஜனாதிபதி விருதான "பிரதீபா பிரபா 2014" விருதினை கௌரவ கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன அவர்களிடமிருந்து பெற்றமையையிட்டு அவரை உளமாற வாழ்த்திப் பாராட்டுவதோடு இவர் மேலும் பல பட்டங்கள் பெற்று பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: மச்சான்மார்:- திரு. சி. சவிரியான் லோகு குடும்பம், திரு. சி. அந்தோனி லோகு குடும்பம், திரு. சி. யூலியஸ் லோகு குடும்பம்.
மச்சிமார்:- பிரான்சிஸ்கா லோகு, காணிக்கை லோகு குடும்பத்தினர், பிரகாசியம்மா லோகு (முத்தரிப்புத்துறை)

## வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் சிறப்பாக இடம்பெற்ற கிறிஸ்தவ மாநாடு - 2014

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியினது கிறிஸ்தவ மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் வருடாந்த கிறிஸ்தவ மாநாடு கடந்த ஒக்ரோபர் மாதம் 04ஆம் திகதி கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக இடம்பெற்றது. "குடும்பமே சமூக வாழ்வின் ஊற்று" என்ற மையப்பொருளைக்கொண்டு நடத்தப்பட்ட இம்மாநாட்டில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினார்.

முதலாவது அமர்வில் அருட்பணி. தமிழ் நேசன், திருமதி எம். ஆர். பிகிராடோ, திரு. கதிர்காமசேகரம் ஆகியோர் உரையாற்றினர். இந்த அமர்வுக்கு அருட்பணி. பெனோ தலைமை தாங்கினார். இரண்டாவது அமர்வில் "இன்றைய குடும்ப வாழ்வியல் வளர்ச்சியடைந்துள்ளது, இல்லை தளர்ச்சியடைந்துள்ளது" என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடைபெற்றது. இதில் அருட்பணி. பா. பிராயன் அவர்களும் பங்கெடுத்தார். இக்கல்லூரியின் கிறிஸ்தவ மன்ற ஆன்மீகக்குரு அருட்பணி. போ. மதன்ராஜ், கிறிஸ்தவ மன்றக் காப்பாளர் விரிவுரையாளர் மி. சூசைதாசன் ஆகியோர் இம்மாநாட்டின் வெற்றிக்கு மிகவும் பாடுபட்டனர்.



# நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 10 ✝ 09 ✝ 2013 — உதிர்வு 05 ✝ 10 ✝ 2014




**இம்மானுவேல் யோகராஜ் ஆருண் லெம்பேட்**

(இல - 251, காட்டுப்பள்ளி வீதி, மன்னார்)

தலைமுறைக்கு தலைமகனாய் தாய்மடி தவழ்ந்தாயடா
தவழ்ந்து தரை தாவும் முன்
எம்மைத் தவிக்கவிட்டுச் சென்றுவிட்டாய்.
உன் பிணிதீர்க்க சென்ற யாம் கனவாகி வந்தோமையா
தரணி உனைக் கடக்கினும் நினைவில் உனை இழப்போமோ?
ஆதவனாய் நீ மீண்டும் உதிக்க
ஆண்டவனை நாம் வேண்டுகின்றோம்!

உன் நினைவில் என்றும் வாழும் :
அப்பா - யோகராஜ் லெம்பேட், அம்மா - றொசாந்தி குரூஸ், அக்கா - கெய்ஷா, அம்மம்மா, அம்மையா, அப்பம்மா, அப்பப்பா, மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், தம்பிமார், மச்சிமார், மச்சான்மார் மற்றும் உறவினர்கள்.

## 59ம் ஆண்டு நினைவஞ்சலி — 10ம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. கதிர்காமர் அம்புறோஸ் போசவ்** — **திருமதி. மதிரேட்னம் செபஸ்ரியம்மா போசவ்**

(சின்னக்கடை, மன்னார்)

மலர்வு : 08 - 02 - 1906 — மலர்வு : 02 - 12 - 1918
உதிர்வு : 31 - 12 - 1955 — உதிர்வு : 08 - 11 - 2004

அன்பொளியே அம்மா!
பத்தாண்டுகள் உங்கள் பிரிவால் கலங்கி நிற்கின்றோம்.
அருமை அப்பாவைச் சிறுவயதிலே இழந்தோம்!
அம்மையும் அப்பனுமாய் எம்மை வளர்த்து
வாழ்வு தந்த தாயே!
எம்மை என்றுமே ஆசீர்வதித்துக் காத்துவரும்
எம் ஆசை அம்மாவே! அன்பு அப்பாவே!
உங்கள் ஆன்மாக்கள் சாந்தியடைய
அனுதினமும் ஆண்டவனை வேண்டுகின்றோம்!
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உம் பிரிவால் துயருறும் :
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3ம் மாத நினைவஞ்சலி

மலர்வு 07 ✝ 01 ✝ 1993 — உதிர்வு 24 ✝ 08 ✝ 2014



**செல்வன். எ. எட்மதாஸ்**

(மணிக்கடை, நானாட்டான்)

"உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்" (யோ.11: 25)

பாசமுடன் ஒரு கூட்டுக்குள் வளர்ந்து வந்தோமையா!
அதில் குட்டி மலர் என நீ மலர்ந்தாய்
அந்தக் குட்டி மலர் ஏனையா வாடிவிட்டது?
உன் நினைவால் நாங்கள் என்றும் வாடி நிற்கின்றோம்.
உன் ஆன்மா இறைவனின் சந்நிதியில்
என்றும் மகிழ்ந்திருக்க நாங்கள்
என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

உம் பிரிவால் துயருறும் :
அன்பு அப்பா, அம்மா, சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு - நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.